ஸ்ரீ மத் அருணகிரிநாதரும் ஸ்ரீ மத் பாம்பன் சுவாமிகளும்



வழங்கியவர்:
சிவத்திரு அ. கிருஷ்ணஸ்வாமி

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமத் அருணகிரிநாதரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளும்

(முதல் பாகம்)

தொகுத்து வழங்குபவர்:
அ.கிருஷ்ணஸ்வாமி
துணை ஆணையர் (ஓய்வு)
வணிகவரித்துறை
சென்னை.

-2002-

இது ஒரு தேவை வெளியீடு

முதல் பதிப்பு கந்தமாசஷ்டி - 2002

பிரதிகள் - 2000

உரிமைப்பதிப்பு

விலை:ரூ.50/-

நூல் மேற்பார்வை:

ஜோதிட ரத்னா **Ln.சௌமா** அவர்கள்
தலைவர்: மஹாதேஜோ மண்டல சபை **R.No.:466/97**
நிறுவன ஆசிரியர்: உங்கள் எதிர்கால விளக்கம்
தெய்வீக ஜோதிட மாத இதழ்,
ஜோதிடர்: தினத்தந்தி, ராணி
20/57 டாக்டர் சுப்புலக்ஷ்மி சாலை,
அடையாறு, சென்னை - 600 020.
தொலைபேசி:4915223

ஆசிரியரும், வெளியிடுபவரும்:

சிவத்திரு அ.கிருஷ்ணஸ்வாமி அவர்கள்
தேவை வெளியீடு
33, அண்ணா காலனி, சென்னை-600 090.
தொலைபேசி:4463378

நூல் கிடைக்குமிடம்:

திருமதி. ஈஸ்வரி ராஜா
53/2 (புது எண் 107), முதல் மாடி,
பிடாரியார் கோவில் தெரு,
சென்னை-1. போன் : 25222030

ஃ
உ

அணிந்துரை

அருளாளர் அப்பர் அடிகள் அரனார் திருவருளால் கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய, கரையேற விட்டவர் குப்பத்தில் பிறந்து, மற்ற மக்களையும் கரையேற்றி விடுவதற்கு ஆவன செய்து கொண்டிருக்கும் பெரியார் **திரு.அ.கிருஷ்ணஸ்வாமி** மேற்கொண்டுள்ள முயற்சி மிகவும் மேம்பாடு உள்ளதாகும்.

ஸ்ரீமத் அருணிகிரி நாதர், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ஆகியோர் வாழ்க்கைக் குறிப்புகளை, அவர்தம் இலக்கியங்களை நடுநிலையாகத் துருவி ஆராய்ந்து பல உண்மைகளை தமிழக மக்களுக்குத் தந்திருக்கின்ற பான்மை அறிந்து எங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர் தம் மொழியுணர்வும், இறையுணர்வு, சுவைக்கும் திறன் இவர் செய்துள்ள ஆராய்ச்சி வாயிலாக வெளிப்படுகிறது. இவர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இயற்றிய நூல்களின் நுண்பொருள்களை நுணுகி, ஆய்வு செய்திருக்கிறார். **அத்துவிதம்** என்ற சொல்லின் பொருளை விளக்குவதற்கு பாம்பன் ஸ்ரீமத் குமரகுரதாச சுவாமிகள் காட்டிய உவமைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு பிறருக்கும் விளக்குகிறார். இச்செயல் மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

அருளாளர்களைப் பற்றியும், அவர்கள் இயற்றிய நூல்களைப் பற்றியும் ஆழ்ந்து சிந்திப்பதற்குரிய வாய்ப்பு அனைவருக்கும் கிடைப்பதில்லை. இந்நூலாசிரியர் அரசு அலுவலிலிருந்து ஓய்வு பெற்றவர். *ஜீவனத் தொழிலுக்கு ஓய்வு உண்டு; ஆனால் ஜீவனுக்கு உரிய தொழிலுக்கு ஓய்வு ஒரு நாளும் இல்லை* என்பதை உணர்த்திக் கொண்டிருக்கிறார். ஜீவனத் தொழிலில் இருந்து விடுபட்ட காலம்தான் சிறப்பாக ஜீவனுக்குரிய தொழிலைச் செய்ததற்கேற்ற காலம் என்ற உண்மையை புரிந்து கொண்டு வாழ்ந்து வருகிறார் என்பது நன்கு தெரியவருகிறது.

இத்தகைய சிறந்த எழுத்துப் பணியை மேற்கொண்டுள்ள ஐயா அ.கிருஷ்ணசாமி அவர்கள் நீண்ட ஆயுளும், நிறைந்த உடல் நலத்துடன் நீடூழி வாழ செந்தில் முருகனை சிந்தையில் வைத்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

இங்ஙனம்

வித்துவான் அ.பாண்டுரங்கன்

(செயலர், திருமுறைக்கழகம், திருவண்ணாமலை)

உ

அணிந்துரை

வாக்கிற்கு அருணகிரி என்று போற்றப்படும் ஸ்ரீமத் அருணகிரிநாதர், தாம் அருளிய திருப்புகழாகிய நூல்களில் உலகுக்கு உய்யும் வழிகளை மிகத்தெளிவாகக் காட்டியுள்ளார்.

கந்தவேள் ஒருவனையே பாடும் நியமம் பூண்டவர் மிகச்சிலர். அவர்களில் சமீபகாலத்தில் நம்மில் பலர்காண வாழ்ந்த சிறப்புடைய மகான் **பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.**

முருகனடியார்களான இவ்விரு அருளாளர்களைப் பற்றிய ஆய்வுத் தொகுப்பாக, **''அருணகிரிநாதரும் பாம்பன் சுவாமிகளும்''** என்ற இந்நூல் அமைந்துள்ளது.

வழிபாட்டுமுறைகளுள், உள்முக வழிபாடு ஒன்றே பிறவிப் பிணியை நீக்கவல்லது எனத் தெளிந்த அருணகிரிநாதர், தாம் அருளிய பாடல்களில் சுத்த அத்துவித நிலையை சிறப்பித்துப் பாடியுள்ள பாடல்கள் பலவற்றை இந்நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

''திருத்தம் பெற வேண்டிய செய்திகள்'' என்ற தலைப்பின்கீழ் இந்நூலாசிரியர் எடுத்துக் கூறும் செய்திகள் சிந்தனைக்குரியவை. ஸ்ரீமத் அருணகிரி நாதரைப் பற்றிய தவறான செய்திகள் வெளிவருவதைத் தவிர்ப்போம் என வேண்டுகோள் விடுக்கின்றார்.

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு என்பதில், **சுவாமிகள் கி.பி.1848ல் பிறந்தது முதல் கி.பி.1929இல் சுவாமிகள் ஜீவசமாதி நிலையை எய்தியவரை** படிப்படியாக விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் அகவை முதிர்ந்தவர். வணிகவரித் துறையில் துணை ஆணையராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் பணியில் ஈடுபட்ட துறை வேறாக இருந்தும் இவர் மனம் ஈடுபட்டதோ கந்தப் பெருமானின் அருள் மழையிலாகும். தமிழ்த் துறையில் உள்ளவர்கள் ஆற்றவேண்டிய இந்த அரும்பணியை இந்நூலாசிரியர் தாமே முனைந்து பல்வேறு ஆதாரங்களைத் திரட்டித் தொகுத்து, முருகனடியார்கள் படித்து மகிழ்ந்து பலன் பெறக்கூடிய வகையில் இந்நூல் எழுதியிருப்பது போற்றுதற்குரியதாகும். அவர் மேன்மேலும் இறை தொண்டாற்றி வாழ்வாங்கு வாழ வடிவேல் முருகன் அருள் பாலிப்பாராக.

- டாக்டர் வி.சி.சசிவல்லி

(மேனாள் தலைவர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மையம், சென்னை)

உ

அணிந்துரை

"அருணகிரிநாதரும் பாம்பன் சுவாமிகளும்" என்ற தலைப்பில் ஆய்வுநூல் ஒன்றைத் தொகுத்து வழங்கியுள்ளவர் என் இனிய நண்பர்களில் ஒருவரான **அண்ணாமலை கிருஷ்ணஸ்வாமி** என்ற அவர் அகவை முதிர்ந்தவர். என்பத்தி நான்கு வயது என அவர் ஜாதகம் காட்டினாலும் உள்ளத்தால் இளமைத் துடிப்பு இறையுணர்வுடையவர். தாம் வகித்து வந்த மஹாதேஜோ மண்டல சபை தலைவர் பொறுப்பை சபை தேர்தலில் என்னிடம் ஒப்புவித்து எழுத்துப் பணியைத் தொடர்கிறார்.

தமிழக அரசு வணிக வரித்துறையில் உயர் பதவிகளை வகித்த அவர் அப்பணிகளையும் இறை தொண்டு என மதித்து வாழ்ந்தவர் என்ற செய்தியை அதே துறையில் உதவி ஆணையராகப் பணிபுரிந்த என்னுடைய மாமா திரு.எம்.நாகசுப்ரமணியம் அவர்கள் வாயிலாக உணர்த்தப்பட்டவன் அடியேன்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய நூல்கள் அனைத்தும் அவருடைய கண்களுக்கும் கருத்துக்கும் உணர்வு ஊட்டிய வண்ணம் அவர் சுவாமிகள் சிந்தனையில் வாழ்கிறார் என்பதை நான் அறிவேன். சுவாமிகள் அருளிய ஆறுமண்டல நூல் பாடல்கள் அனைத்தும் பிழையேதுமின்றி எழுதித் தொகுத்து ஒரே நூலாக அமைத்து வெளியிட என் வசம் வழங்கியுள்ளார். அந்த ஆறுமண்டல பாக்களை அறிமுகம் செய்யும் வகையான் **ஆறுமண்டல விளக்கம்** என்ற தலைப்பில் உரை நூல் ஒன்று எழுதிக் கொடுத்தார். அந்நூலையும் வெளியிட்டேன். மேலும் பல நூல்கள் தொகுத்து வருகின்ற அவர், **அருணகிரி நாதரும் பாம்பன் சுவாமிகளும்** என்ற தலைப்பில் முன்னூறு பக்கங்கள் கொண்ட நூல் எழுதினார். காலச்சூழல் வேகத்தில் சிக்கித் தவிக்கும் இவ்வேளையில் அவ்வளவு கருத்துக்களை ஒரே நேரத்தில் சுவைக்க இயலாது எனக்கருதி சிறுநூல் வடிவில் இந்நூலை சீர்செய்து வழங்கியுள்ளார்.

அதாவது அரிய கருத்துக்களை அடித்தளமாக அமைத்துத் தந்துள்ளார். வருங்கால சந்ததியினர் அந்த அடித்தளத்தை ஆதாரமாக்கி ஆன்மீக வழியில் மாடம் மாளிகை, கூடம், கோபுரம் என்றவாறு அமைக்க இந்நூல் உதவும். என்றுமுள்ள, எல்லாம் வல்ல எங்கும் நிறை

பரம்பொருளாம் செவ்வேட் பரமன் கிருபையை உணர்ந்து, விளக்கி, அனைவரும் இகபர சௌபாக்யம் அடையும் பெருநோக்கத்துடன் வரைந்துள்ள இந்நூல் ஒவ்வொரு அன்பரிடம் கைவசம் இருக்க வேண்டிய நூல் என்பது எனது எண்ணம். சுவாமிகளின் சுத்த அத்துவித நெறிக்கும், நமது வாழ்க்கை நெறிமுறைகளுக்கும் இடைவெளி மிகப்பெரியதாக உள்ளது. சுவாமிகள் போதனைகளில் சிலவற்றை இந்நூலில் காணலாம். அவைகளை இயன்றவரை பின்பற்றி ஒழுகி வந்தால் உயர்கதியடைய வாய்ப்பு உண்டு இது உறுதி!

திரு.அண்ணாமலை கிருஷ்ணஸ்வாமி அவர்கள் தானே தனக்கு குருநாதராக ஏற்றுக்கொண்ட ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளையும் சுவாமிகள் தாமே தமக்கு குருநாதராக ஏற்றுக்கொண்ட அருணகிரிநாதரையும் கனவிலும் நனவிலும் அனுபவித்தவர் என்பதற்கு இந்நூல் சாட்சியாக மிளிர்கின்றது. அருணகிரிநாதர் வரலாற்றில் ஏற்பட்டிருந்த குழப்பங்களைக் கண்ட சுவாமிகள் அப்பழுக்கற்ற ஒரு ஞானியின் வரலாற்றில் கலந்திருந்த கொச்சைத்தனத்தை மறுத்தார். ஒரு சொற்பொழிவின்போது பொய்தகவல்களை சாடியிருப்பதை நூலாசிரியர் வெகு அழகாக எடுத்து வைத்துள்ளார்! அருணகிரிநாதர் வரலாறு எழுதிய பொய்புலவர்கள் கண்ணப்பநாயனாரே நக்கீரராய் பிறந்தார்! அவரே பொய்யாமொழி புலவராக வந்தார்! அவரே அருணகிரிநாதர் என்று எழுதியுள்ளதை ஒவ்வாச் செய்திகள் என்று கடிந்து, ஆனி மாதத்து பௌர்ணமி தினம் அருணகிரிநாதர் தினமாக கொண்டாடும்படி தம் அடியார்களுக்கு கட்டளையிட்டுள்ளார் என்பதும் அன்றுமுதல் சுவாமிகள் உருவாக்கிய மஹாதேஜோ மண்ட.ல சபை தொடர்ந்து கடைபிடித்து வருவதும் யாவரும் அறிந்ததே.

அனைவரும் இந்நூலை ஓதி, உணர்ந்து, பிறருக்கு உரைத்து அனைவரும் உயர்கதியடைய ஆலவாய் அண்ணலையும், மீனாக்ஷியம்மையையும் ஆனந்தவத்துவான குகபிரம்மத்தையும், குருவடியையும் சிந்தித்து வாழ்த்தி வணங்குகிறேன்.

அன்புடன்

ஜோதிட ரத்னா Dr.சௌமா

(தலைவர்: மஹாதேஜோ மண்டல சபை, பதிவு எண்:466/97)

நிறுவன ஆசிரியர்: உங்கள் எதிர்கால விளக்கம்

(சோதிடர்: தினத்தந்தி, ராணி)

உ

வாழ்த்துரை

அருணகிரிநாதரும், பாம்பன் சுவாமிகளும் என்ற அருமையான நூலை எழுதியிருக்கிறார். அன்பர் **அ.கிருஷ்ணசாமி** அவர்கள் இந்த இரண்டு ஞான சித்தர்களின் வரலாற்றையும் துல்லியமாக வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளையும், அருணகிரி நாதரையும் ஒப்பிட்டு ஆய்வு செய்திருக்கும் முதல்நூல் இது என்றே சொல்ல வேண்டும்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் வரலாற்றை **திரு.கிருஷ்ணசாமி** அவர்கள் தமது நூலில் விளக்கி இருப்பதைப் பார்க்கும்போது அவருடைய ஆன்மிக அனுபவமும், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் அருளைப் பெற்றவர் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

அருணகிரிநாதரைத் தமது ஞானகுருவாக ஏற்றுக் கொண்டவர் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள். அருணகிரி நாதரின் புகழைத் தமது நூல்களில் இணைத்துப்பாடி மாபெரும் கவியோகியாக உயர்ந்து நிற்பவர் சுவாமிகள்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், அருணகிரிநாதரையும் முருகக் கடவுளையும் இணைத்து தாம் பாடியருளிய ஆறுமண்டல நூல்களில் அற்புதமாக அழகு கொஞ்சிக் குலுங்கும்படி, வேலும் மயிலும் போல, ஒளியும் ஒலியும் போல 403 இடங்களில் அருணகிரிநாதர் திருப்பெயர் சுடர்விடும் நக்ஷத்திரங்களாக ஜ்வலிப்பதைப் பட்டியல் இட்டுக் காட்டியிருக்கிறார் ப்ஸ்ரீமத் பாம்பன் அடிமையான திரு.கிருஷ்ணசாமி அவர்கள்.

முடிவாக, சுத்த அத்வைதம்தான் சைவ சித்தாந்தம் என்பதை ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் வாக்குகளிலிருந்து மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

ஸ்ரீமத் பாம்பன் அடிமை கிருஷ்ணசாமி அவர்களின் தெய்வத் திருப்பணி ஓங்கட்டும். திரு அருட்செல்வம் நாடெங்கும் பொங்கித் தழைக்கட்டும்.

ஏ.பி.டி. வளாகம்,
கிண்டி, சென்னை-32.

– அருட்செல்வர் டாக்டர் **நா.மகாலிங்கம்**

உ

உரைப்பாயிரம்

கரையேறவிட்டநகர் கருணைச் செம்மல் திருவாளர் **திரு.அ.கிருஷ்ணசாமி** அவர்கள் அரியதோர் படைப்பினை மக்களுடைய ஆக்கத்தையும், ஊக்கத்தையும், எழுச்சியையும், எழில்மிகு சிந்தனை ஆற்றலையும் உயர்த்திக் காட்டும் வகையில், அருணகிரிநாதர் பற்றியும், பாம்பன் சுவாமிகள் பற்றியும் பல்வேறு செய்திகளை இணைத்து வழங்கியுள்ளமை பாராட்டுக்குரியதொன்று.

அருணகிரி நாதரையும், பாம்பன் சுவாமிகளையும் பல கோணங்களில் இணைத்து, ஆராய்ந்து அறிஞர்களால் போற்றப் பெறும் ஆய்வியல் முடிவுகளை வெளியிட்டுள்ளமை இத் தொகுப்பு நூலின் அரிய சிறப்பாகும்.

பாம்பன் சுவாமிகள் பாடல்களிலேயே திருப்புகழ் பாக்களின் பெருமை பல இடங்களில் காணப்படுகிறது என்று சான்றுகளோடு கூறியிருக்கிறார்.

இறைவழிபாட்டினுள் உள்முக வழிபாடு மற்றும் வெளிமுக வழிபாடு என இருவகைப்படும் என்று கூறி, இரண்டையும் அருணிகிரி வாக்கின் மூலமாகவும், பாம்பன் சுவாமிகள் வாக்கின் மூலமாகவும் தெளியக் காட்டியிருப்பது திருமிகு கிருஷ்ணசாமியின் அருளியலனுபவ வெளிப்பாடு.

அவ்வாறே அருணகிரி நாதரும் பாம்பன் சுவாமிகளும், சைவ சித்தாந்த சுத்தாத்வைதக் கொள்கையே தம்முடைய முடிந்த கொள்கையாக ஏற்றுக் கொண்டிருந்தார்கள் என்று நிறுவியிருப்பது போற்றுதற்குரியது.

சமுதாய நலம் பேணும் வகையில் பாம்பன் சுவாமிகள் அருளிய அறவுரைகளையும், அருளுரைகளையும் தொகுக்கும் முறையில் சைவர், பிராமணர் ஆகியோரைப் பற்றிய விளக்கமும் **ஏகதெய்வ வழிபாடே ஏற்புடைத்து** என்ற கொள்கை விளக்கமும் அறிஞர் உலகம் மதித்துப் போற்றும் செய்திகளாகும்.

அவ்வாறே மனத்தைப் பற்றிய செய்திகள் பலவற்றைத் தொகுத்து தந்திருக்கும் முறை போற்றத்தகுந்தது.

இங்ஙனம்

– பேராசிரியர் டாக்டர் **வை.இரத்தினசபாபதி**

உ

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

திருநாவுக்கரசு சுவாமிகள், ''கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமசிவாயவே'', எனப்பாடிக் கரையேறிய சிற்றூர், கடலூரையடுத்த கரையேற விட்டகுப்பம் என வழங்கப்படுகிறது. அவ்வூரில் வாழ்ந்த நிலக்கிழார் அண்ணாமலைப் பெயரானின் மகனாகப் பிறந்த எளியேன், சேய்ப்பரமன் ஒருவனையே புகழ்ந்து பாடிய ஸ்ரீமத் அருணகிரி நாதரும், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளும் அருளியுள்ள தமிழ் மறை நூல்களிலிருந்து சேகரித்த பேருண்மைகள் சிலவற்றை நூல் வடிவாகத் தொகுத்து வழங்கத் துணிந்தேன். இப்பணி சிறப்பாக அமைவதற்கு இறையன்பர் நல்லாசியும், குருவருளும், திருவருளும், துணைபுரியும் எனத் திடங் கொண்டேன்.

திருவண்ணாமலைத்தலம் பண்டைப் பெருமையுடையது. சிவபெருமானின் அடி முடி தேடி அரிபிரமர் அன்றொரு நாள் அலைந்து அயர்ந்தனர். அவர்களின் ஆணவத்தை அழித்து, அரனார் அருட்சோதி லிங்கோத்பவராக வெளிப்பட்டுக், காட்சி நல்கி அருளாடல் நிகழ்த்திய தலம் திருவண்ணாமலை.

இத்தலம், முதலில் தென்னாற்காடு ஜில்லாவின் ஒரு அங்கமாக இருந்தது. பின், வட ஆற்காடு ஜில்லாவின் ஒரு தாலுக்காவாக விளங்கி, இந்நாளில் திருவண்ணாமலை மாவட்டம் என உருப்பெற்று, அம்மாவட்டத்தின் தலைநகரம் எனத் திகழ்கின்றது.

ஞான தபோதனர் பலர், அன்றும் இன்றும் அருளாட்சி புரியும் இத்தலம் பஞ்சபூதத்தலங்களில் ஒன்றாகும். இத்தலத்தில் 15-ம் நூற்றாண்டில் முத்தம்மை எனும் அம்மையாரின் கருவில் உருவாகித் திருவாகித் தோன்றிய ஸ்ரீமத் அருணகிரி நாத சுவாமிகள், முருகன் ஒருவனையே முழுமுதற் பரம் என்ற திடங்கொண்டு வாழ்ந்தவர். அப்புனிதர் அருளிய பதினாறாயிரம் திருப்புகழ் பாடல்கள் அனைத்தும் மாந்தர் கைவசம் இல்லை.

ஸ்ரீமத் அருணகிரிநாதர் வாழ்க்கை வரலாறு, மற்றும் அவர் அருளிய நூல்களில் பொதிந்திருந்த சீரிய கருத்துக்களைக் கால வெள்ளம் கடத்திச் சென்று விட்டது.

பதினாறாம் நூற்றாண்டில் வெறும் உணர்ச்சி மட்டும் வெளிப்படும் வகையான், வெற்று இலக்கியங்கள் பல உருவாகத்

தொடங்கின. காமச்சுவையே இலக்கியப் படைப்பின் மையம் எனும் தவறான உணர்வுகள் எப்படியோ புலவர் உலகில் அழுத்தம் பெறத் தொடங்கியது.

அந்த சூழ்நிலையில், இஸ்லாமிய மதத் தமிழ்ப் புலவர்கள் மற்றும் துறவிகள் எழுத்தாணியைக் கையில் ஏந்தினர். அவர்களில், தக்கலை பீர் முகமது சாகேப், குணங்குடி மஸ்தான் சாகேப், சர்க்கரைப் புலவர், நயினார் முகமது பாவா, சேகனாலப்பை, ஆதிமலைத் திருப்புகழ் பாடிய பிச்சை இப்ராஹீம் போன்றவர்கள் அவரவர்க்குரிய முறையில் தமது மதக் கோட்பாடுகளை தமிழ் மக்களுக்குப் போதித்தனர்.

இயற்கையின் சீற்றம், பிணி, பஞ்சம், அரசுமாற்றம் ஆகியவைகளால் மக்கள் அவதியுற்றனர். சைவ சமயக் கருத்துக்கள் பின்னடைந்தன. சைவாசாரத்தைப் பின்பற்ற மக்கள் தயங்கினர். வருடங்கள் பல உருண்டோடின.

ஆயினும், அருளாளர் ஸ்ரீ தாயுமான சுவாமிகள், ஞானியார் மடம் ஸ்தாபகரான ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள், வண்ணச் சரபம் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள், வடலூர் ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் போன்றோர், ஆங்காங்கே தோன்றி, சைவ நெறியும், முருக வழிபாடும் மக்களுக்கு போதித்து வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், இராமேஸ்வரத்தில் சாத்தப்பப் பிள்ளையின் மூத்த மகனாக தோன்றி, அப்பாவு எனும் பெயருடன் பாம்டன் பதியில் வளர்ந்த புனிதர் எழுத்தாணியைக் கையில் ஏந்தினார். ஸ்ரீமத், அருணகிரி நாத சுவாமிகளைப் போல் அவரும் செவ்வேட் பரமன் ஒருவனையே புகழ்ந்து பாடத் தொடங்கினார்.

அப்புனிதரே, அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதீக சைவ சித்தாந்த ஞானபானு ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் எனும் ஸ்ரீ பாம்பன் சுவாமிகளாவார். அவர், ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளை ஞானகுருவாக ஏற்றுக் கொண்டு, நாதனாரின் திருப்பெயரை அமைத்துத் தாம் பாடிவரும் ஒவ்வொரு பிரபந்தத்தையும் நிறைவு செய்யவுள்ளதாகத் திடங் கொண்டார்.

அவ்வாறு தாம் அருளிய ஆறு மண்டல நூல் பதிகம் ஒவ்வொன்றிலும் ஸ்ரீமத் அருணகிரி நாதர் திருப்பெயர் பதிக்கப் பெற்ற பாடற் பகுதிகள் சிலவற்றை இந்நூல் முதல் பாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஸ்ரீமத் அருணகிரி நாதரின் திருப்பெயர் விளங்கும் முழுமையான பாடல்கள் நானூறுக்கும் அதிகமாக உள்ளவைகளை இந்நூல் இரண்டாம் பாகமாகத் இந்நூலில் வடிவில் காணலாம்.

சந்தபேதங்கள் பற்பல அமைந்த வண்ணக்குழிப்புடை பாடல்களும், பல்வேறு பண்களில் பாடும் வகையான், முருகன் பரத்துவம் வெளிப்படுத்தும் பாடல்கள் பற்பல இயற்றிய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், முருகனடியார் மாண்பைக்கூற,

"பாராளும் வேந்தர்க்கும் பண்ணார் பாவாணர்க்கும்
வீராதி வீரர்க்கும் விண்ணோர்க்குமே யதிகம்
ஆரார் அயிலனடியார்"

எனப் புகழ்ந்துள்ளார்.

ஏற்கெனவே பலநூல்கள் வாயிலாக வெளிவந்த ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளைப் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்திகள் சீர் செய்யப்பட வேண்டியவைகள் என உணர்த்த நாதனாரின் உண்மைச் சரித்திரச் சுருக்கம், ஸ்ரீமத் பாம்பன் சுவாமி அருளிச் செய்தவாறே இந்நூலில் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமத் அருணகிரிநாதர் அருளிய பாடல்களில் பொதிந்துள்ள சைவ சித்தாந்தக் கருத்துக்கள் உள்ள பாடற்பகுதிகள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், மற்றும் அவர்களின் சித்தாந்தம், போதனைகள் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

சேய்ப்பரமன் புகழ்கூறும் நூல்களிலிருந்து திரட்டிய நுண்பொருள்களுடன், அருளாளர் சிலர் அருளிச் செய்துள்ள அறவுரைகளையும் இந்நூலில் காணலாம்.

எளியேன் தொகுத்து வழங்கும் இந்நூலில் காணும் பிழைகளை அறிஞர்களும் அடியவர்களும் பொறுத்தருள வேண்டுகிறேன். பிழைகளைச் சுட்டிக் காட்டினால், அவைகளைச் செம்மை செய்து இந்நூலை மறுபதிப்பாக வெளியிட குருவருள் துணைபுரியும்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியருளியுள்ள ஞானதான வள்ளல், திருப்பணிச் செம்மல், தொழிலதிபர், அருட்செல்வர்,

டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் இயற்றும் எண்ணற்ற இறை தொண்டு உலகளாவிய அனைவராலும் போற்றப்பட வேண்டியவைகளாகும். அவர்களை மனமொழி மெய்களால் வாழ்த்தி வணங்குகிறேன்.

இந்நூலுக்கு உரைப்பாயிரம் வரைந்துள்ள **பேராசிரியர் டாக்டர் வை.இரத்தினசபாபதி** அவர்கள் தத்துவ இலக்கிய வேந்தர், சித்தாந்தச் சரபம் போன்ற பலவிருதுகள் பெற்றவர். சைவத்திற்கும் தமிழுக்கும் அரிய தொண்டாற்றும் அவரை வாழ்த்தி வணங்குகிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள **டாக்டர் சசிவல்லி** அம்மையார் ஸ்ரீ அருணகிரி நாதர் அருளிச் செய்த நூல்களில் ஆராய்ச்சி மேற்கொண்டு வாழ்ந்த தணிகைமணி செங்கல்வராயம் பிள்ளையின் தவப்புதல்வியாவார். அந்த அம்மையாருக்கு எளியேன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள **வித்துவான் திரு.பாண்டுரங்கன்** அவர்கள், திருவண்ணாமலை திருமுறைக் கழகச் செயலாளர் ஆவார். அவர் தம் எண்ணம், சொல், செயல், அனைத்தும் இறைபணிக்கே என்ற திடமுடன் வாழ்ந்து வரும் அவருக்கு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் எல்லா நலன்களும் வழங்கியருள வேண்டுகிறேன்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியுள்ள **திரு.ஜோதிட ரத்ன சௌமா** அவர்களின் தந்தை, சிலகால இல்லற வாழ்வுக்குப்பின் அத்தியாச்சிரமியாய்த் திகழ்ந்து நின்றவர். அன்னாரிடம் உபதேசம் ஏற்றுக் கொண்ட கவிவாணர் **திரு.ஜோதிட ரத்ன சௌமா** அவர்கள் சோதிடக் கலை வல்லுநர். வாஸ்து சாஸ்திர நிபுணர். அவரின் இயற்பெயர் சரவணன் என்பதாகும்.

பலபிறவிகளில் சேர்ந்த தீவினையின் விளைவால் இப்பிறப்பில் அன்பர்களுக்குற்ற வேதனையின் கொடுமையை இலகுவாக்கி அனுபவித்துக் கழிக்க உபாயம் கூறும் உத்தமர். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளால் நிறுவப் பெற்ற மஹா தேஜோ மண்டல சபையின் உரிமைக்காக உழைத்து வருபவர். அவர்களை உளமார வாழ்த்துகிறேன்.

இங்ஙனம்

அடியார்க்கு அடியவன்

6.6.2002

அ.கிருஷ்ணஸ்வாமி.

தலைப்புக்கள்

I

உ

திருச்சிற்றம்பலம்

திருஅண்ணாமலை மகிமை

தமிழ்நாட்டில், புகழ்மிக்க திருத்தலங்களில் சிறப்பானதும் பஞ்சபூதத் தலங்கள் எனப் பேசப்படும் தலங்களில் தேயுத்தலம் எனக் குறிப்பிடப்படுவதும், ஸ்ரீ உண்ணாமுலையம்மை உடனுறை ஸ்ரீஅருணாசலேஸ்வரர் கோயில் கொண்டுள்ள வானளாவிய கோபுரங்களுடன் விளங்கும் திவ்விய தலம் திருவண்ணாமலை.

நீண்ட தழல் பிழம்பாய் நின்ற மலை அண்ணாமலை; ஊழிக்காலமாகத் தன்னை வணங்கும் அடியார் வினைகளை தீர்க்கும் மலை அண்ணாமலை.

முன்னொரு காலத்தில், திருமாலும், அயனும், ஈசனின் அடியும் முடியும் காண்போம் என்ற அகந்தையால் அலைந்தனர். தோல்வியால் தளர்ந்தனர். அவ்விருவருக்கும் எட்டாத ஜோதி மலையாய் விளங்கி, அருவுருவத் திருமேனியாம் இலிங்கோற்பவ மூர்த்தியாய் வெளிப்பட்டு நின்று அருள்பாலித்த திருத்தலம் திருவண்ணாமலை.

புவிவாழ்வு போதும் எனப் பதினாறு வயதினிலே சிவசோதியில் கலந்தருளிய திருஞான சம்பந்த சுவாமிகள் திருவண்ணாமலையைத் துதித்துப் பாடிய பாடல் வருமாறு:-

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

பாண்டிய மன்னரின் அமைச்சராகப் பணிபுரிந்து, சிறப்பு மிக்க சிவத்தொண்டும், பாடும் பணியும் மேற்கொண்டு முப்பத்திரண்டு வயதில் வான் கலந்த மாணிக்கவாசக சுவாமிகள் திருவருணையில் சிலகாலம் தவமியற்றியதும் உண்டு. அவர் அருளிச் செய்துள்ள திருவாசகப் பாடல்களுள் ஒன்று இங்கு வழங்கப்படுகிறது.

பாடல்:

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந் துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங்காணம் மானாய்.

திருவருணைத் தலபுராணம் இயற்றிய தமிழ்ப் பெருங் கவிஞரான சைவ எல்லப்ப நாவலர், திருநாவுக்கரசு சுவாமிகளை ''கல்தூணால் தீது கொண்ட கருங்கடலைக் கடந்த செழுந்தமிழ்க் கடல் திருத்தாள் போற்றி,'' எனப் புகழ்ந்துள்ளார். அப்பர் சுவாமிகள் எனப் போற்றப்படும் அவர் எண்பத்திவொரு வயதுவரை அருந்தொண்டு புரிந்து சிவகதியடைந்தார். அவர் அண்ணாமலையாரைத் துதித்துப் பாடிய பாடல் வருமாறு:-

பாடல்:-

செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்குந்தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற்றேனென்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே

திருவெண்ணெய்நல்லூரில், ஓலையைக் காட்டித் தடுத்து ஆட்கொண்ட ஈசரைப், ''பித்தா பிறை சூடி'', எனப் பாடித் தோழமை கொண்ட ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூவாறு வயதில் வந்த உடம்புடன் கயிலை சென்றார். அவர் திருவருணைத்தல மகிமையை உணர்ந்து, திருஅறையணி நல்லூரில் எழுந்தருளியுள்ள ஒப்பிலாமணி ஈசர் சந்நிதியில் இருந்தவாறே திருவருணையை தரிசித்துப் புகழ்ந்தார்.

திருவண்ணாமலையில் தவமியற்றி முத்தியெய்திய விருப்பாக்ஷி தேவர், குகை நமசிவாய சுவாமிகள், குருநமசிவாயர், அருணாசல தேசிகர், ஈசான்ய ஞான தேசிகர், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள், பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி, ஸ்ரீ யோகி ராம்சூரத்குமார் சுவாமிகள் போன்ற அருளாளர்கள் பலர் போற்றித் துதித்துப் புனிதமடைந்த திருத்தலம் திருவண்ணாமலை.

அவர்களை நினைவு கூர்வதுடன் இந்நாளைய புண்ணிய சீலர்களையும் புகழ்ந்து போற்றுவது நமது கடமை.

ஸ்ரீ அருணாசலேஸ்வரர் கிருபைக்குப் பாத்திரமான குகை நமசிவாய சுவாமிகள் அருளிய திருவருணைத் தனிவெண்பா.

பாடல்:

ஆதிமறை தேடரிய அண்ணா மலையார்க்கு
ஏதுமுடி ஏதுஅடி என்றேத்துவேன் - மீதி
ஒளியே திருமேனி உம்பருக்கும் எட்டா
வெளியே அவரிருக்கும் வீடு.

குகை நமசிவாய சுவாமிகளை ஞான குருவாகக் கொண்டு அருளாடல் பலபுரிந்த குருநமசிவாயர், தமது குருபிரான் ஆணையின்படி சிதம்பரம் சென்றார். ஸ்ரீநடராஜப் பெருமானுக்குத் திருவாபரணம் இல்லை என்ற செய்தி கேட்டு, சித்து நிகழ்த்தி, செல்வந்தர் வழங்கிய நிதியுதவி கொண்டு, தண்டை கிண்கிணி போன்றவை செய்வித்து, வழங்கி, கூத்தபிரான் திருநடனக் காட்சியை அனைவரும் காண வைத்தார். குருநமசிவாயர் அருளிய அண்ணாமலை வெண்பா.

ஆதிநடம் ஆடுமலை அன்றிருவர் தேடுமலை
சோதிமதி ஆடரவம் சூடுமலை - நீதி
தழைக்குமலை ஞானத் தபோதனரை வாவென்
றழைக்குமலை அண்ணமலை.

பிரபுலிங்க லீலை, ந்ால்வர் நான்மணி மாலை போன்ற அருள் நூல்கள் அருளிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், திருவண்ணாமலையை வலம் வந்து கொண்டே சோண சயில மாலை எனும் நூல் பாடியுள்ளார்.

மலை வலம் வரும் அன்பர்கள், நமசிவாய மாலை, அருணகிரி அந்தாதி போன்ற நூல்களில் விளங்கும் பாடல்களை ஓதலாம்; திரு ஐந்தெழுத்து, திருஆறெழுத்து போன்ற மந்திர அக்ஷரங்களை மனனம் செய்தவாறு கிரிவலம் வரலாம்.

நீராடித் தூய ஆடை அணிந்து, திருநீறு பூசி, இறை கருணையை சிந்தித்த வண்ணம் வலம் வரவேண்டும் குடைபிடித்துச் செல்லக்கூடாது. பாதரக்ஷை அணிந்து செல்லக்கூடாது. யாருடனும் பேசாமலும், கைகளை வீசிநடந்தும் செல்லக்கூடாது.

அருவமாக வலம் வரும் ஞானதேகிகளுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் நமது செயல்களை அமைத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு பக்தி விசுவாசத்துடன் கிரிவலம் வரும் அன்பர்களுக்குக் கல்வி, அழகு, பொருள், புகழ் ஆகிய அனைத்தும் வழங்கப்படும்; பிறப்பிறப்பும் நீங்கும்.

மேடைகளிலும், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகளிலும் உரை நிகழ்த்துவோர், ல, ழ, ள, போன்ற எழுத்துக்களை அதனதன் உரிய ஒலி புலப்படச் சொல்வதற்கு அருணாசல புராணத்தில் உள்ள ஸ்ரீ உண்ணாமுலையம்மை துதிப்பாடலை ஓதி உரிய பயனடைவார்களாக. அப்பாடல் வருமாறு:

காரொழுகும் குழலாளைக் கருணைவழிந்
தொழுகுமிரு கடைக்கண் ணாளை
மூரலிள நிலவொழுகப் புழுகொழுக
அழகொழுகும் முகத்தி னாளை
வாரொழுகும் தனத்தாளை வடிவொழுகித்
தெரியாத மருங்கி னாளைச்
சீரொழுகும் பதத்தாளை அருணைஉண்ணா
முலையாளைச் சிந்தை சேர்ப்பாம்.

இவ்வாறு, அருளாளர்கள் பாடல் பெற்றதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய பெருமையுடையதும், கார்த்திகை தீபமங்கள ஜோதி வழிபாடு மற்றும் திருவிழாக்கள் பல நிகழ்த்தப் பெற்றும், பூமண்டல மெங்குமிருந்து வரும் அன்பர்கள் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டு, அமைதியாக வாழும் திருத்தலம் திருவண்ணாமலை.

2. ஸ்ரீமத் அருணகிரி நாதர் (அறிமுகம்)

பதினைந்தாம் நூற்றாண்டில், திருவண்ணாமலை தலத்தில் இறைவனுக்குத் திருத்தொண்டு செய்துவந்த முத்தம்மை எனும் உத்தமியின் அருந்தவப் பயனாய், அனுக்கிரக நோக்கால் ஆண் சேர்க்கையின்றித் தோன்றியவர் ஸ்ரீமத் அருணகிரிநாதர். அவரது தேகம் ஒரு ஞானதேகம்; மாதர் மையலில் சிக்காத அவரது தேகம் பழுதுபட்டது. அவர் தொழுநோயால் வருந்தினார். உடற்பிணியோடு பிறவிப்பிணி நீக்கம் பெற இறைவனை வேண்டினார்.

வேண்டியவர்க்கு வேண்டியாங்கருளும் விமலன், ஸ்ரீ அருணகிரி நாதருக்குக் காட்சி நல்கி, உபதேசம் செய்வித்துத் திருப்புகழ்பாடக் கிருபை புரிந்தார். அவ்வாறே பாடி, தலயாத்திரை செய்து, இறை நற்கருணையினால் அஷ்டசித்தியும் கைவல்யமாய் அடியவர் நலன் கருதி அருளாடல் புரிந்து, இறுதியில் திருவாதவூரரைப் போல சிதாகாசப் பெருவெளியில் மறைந்தார்.

19-ம் நூற்றாண்டில், இராமேஸ்வரத்தில் உதித்து, பாம்பன் பதியில் இல்லறம் நடத்தி, பிரப்பன்வலசையில் தவமியற்றி, பின்னத்தூரில் சிலகாலம் தங்கி, நூல்கள் பல இயற்றி, சென்னை மாநகரில் பல ஆண்டு வாழ்ந்து, சைவத்திற்கும் தமிழ்மொழிக்கும் அரிய தொண்டு புரிந்த ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீமத் அருணகிரிநாதர் முத்தியடைந்த நாளை எவராலும் கொண்டாடப்படாமலிருந்ததைக் குறித்து வருத்தப்பட்டார்.

மேலும், ஸ்ரீமத் அருண்கிரிநாதர் சிற்றின்பத்தில் ஈடுபட்டு, அதன் வழிவந்த பெரு நோயால் துன்புற்றார் எனப் பலர் பலவாறு பேசிவந்ததைக் கேட்டு மிகவும் கவலையுற்றார். அதன் விளைவாய், அவர்கள் சென்னை, புதுப்பாக்கம் சிவ சுப்பிரமணிய பக்த ஜன சபா மண்டபத்தில், **காளயுத்தி வருடம் ஆனிமாதம் 11-ம் நாள் (24-6-1918) ஸ்ரீமத் அருணகிரி நாதரின் தூய சரித்திரம்** இதுவே யென்று அனைவரும் அறிய எடுத்தியம்பினார்.

''எம் கருத்தின்படி, இக்குருபூஜை தினத்தை உத்தராயணத்து ஆறாம் நிறைமதிநாள் எனக் குறிப்பிட்டு, இத்தினத்தே அது

கொண்டாடுக என்று ஓர் அன்பரது கனவில் தோன்றிச் சொல்லியருளிய ஸ்ரீமத் அருண்கிரிநாத சுவாமிகளது திவ்வியத் திருமேனியானது 35-40 வயதுடைத்து. இவ்விவரங்களை ஈங்குற்ற மஹா தேஜோ மண்டலத்தாரும், ஏனையோர்களும் அறிவீர்களாக; சுவாமிகளது சரித்திரம், பலரால் பலவிகாரமுறச் சொல்லிக் கொள்ளப்படுகிறது; யாம் அதனை நின்மலமாகவே இயன்றவாறு புகன்றாம்.''

இவை, ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் திருவாக்கு ஆகும். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் 1918ல் எடுத்தியம்பிய ஸ்ரீமத் அருணகிரி நாதமுனிபுங்கவரின் உண்மைச் சரித்திரச் சுருக்கம் இந்நூலின் ஒரு பகுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

3. நன்றி நவிலல்

ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளின் குருபூஜை தினத்தை நிர்ணயம் செய்து, அவரின் திருவுருவ விளக்கம் கூறி, வழிபாட்டுக்கு வகை செய்த பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளுக்கு, உலகெங்குமுள்ள முருகனடியார் அனைவரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாவார்.

ஸ்ரீதாயுமான சுவாமிகள், தமது அரசு பதவியைத் துறந்து, சுத்த அத்துவித நெறியை போதித்தவர்; மனங்குவிய அருள்புரிய வேண்டி எங்கும் நிறைவாய் உள்ள பரம்பொருளை வேண்டிப் பாடல்கள் அருளியவர். ஸ்ரீமத் அருணகிரி நாதருக்கு குமரப்பெருமான் உபதேசம் செய்தருளியதுபோல, ஸ்ரீதாயுமானவருக்கும், சும்மா இரு, எனத் தமது குருநாதர் அருளியவாறு மனவாக்குகளுக்கு எட்டாத மோன நிலையில் நின்று, இராமநாதபுரம் கீழ்த்திசைக்கண் சமாதியில் எழுந்தருளியுள்ளார்.

ஸ்ரீதாயுமானாசுவாமிகள், **''ஐயா அருணகிரி அப்பா, உனைப் போல மெய்யாக ஓர் சொல் விளம்பினவர் யார்''**, எனத் தொடங்கிப் பாடிய பாடலின் பொருள் வருமாறு:-

ஐயனே, அருணகிரி அப்பனே! உன்னைப்போல் உண்மையாக, சிவனேயென்றிரு என ஒப்பிலாத ஓர் மாமறை மொழியினை உலகினருக்கு உணர்த்தியவர் வேறு யார்? இந்நிலவுலகினர் அம்மெய்யினைக்கூற இயலார். முக்கட் பெருமானும், கல்லாலின் கீழ்வீற்றிருந்து சிவமெய்ப்புணர்ப்பாம் சீர்மையினை அறிவு அடையாளத் திருக்கையால் நாற்றிசைக்கும் ஓதாது உணர்த்தியருளினான் என்றவாறு.

இவ்வாறு நாதனாரைப் புகழ்ந்த ஸ்ரீதாயுமான சுவாமிகளையும், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் போற்றிப் பாடியுள்ளார். நாமும் ஸ்ரீ தாயுமானாரை நன்றியுடன் சிந்தனை செய்வோம்.

ஸ்ரீமத் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்பாக்களை சேகரித்து, விளக்க உரை வரைந்து நூல் வடிவாக்கி வழங்கிய

தணிகை மணி செங்கல்வராய பிள்ளை, அவரின் தந்தை திரு.சுப்பிரமணிய பிள்ளை மற்றும் அவர்களின் வழித்தோன்றல் அனைவரையும் வாழ்த்தி வணங்குவோம்.

இந்திய அரசு, ஸ்ரீமத் அருணகிரி நாதனாரின் ஆறாம் நூற்றாண்டு நினைவாக அஞ்சல் தலை வெளியிட்டு, திரு.சுப்பிரமணியப்பிள்ளை மற்றும் தணிகைமணி திரு.செங்கல்வராய பிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டி செய்தி வெளியிட்டது.

ஸ்ரீமத் அருணகிரி நாதருக்கு எந்தெந்த கோயிலில் திருவுருவம் அமைந்துள்ளதோ, அவைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆனிப் பௌர்ணமி தினம் விசேஷ பூஜை நிகழ்த்தப்பட வேண்டும்; மற்ற தேவாலயங்களில் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடல்கள் ஓதி பூசைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்த அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு.மெய்கண்டதேவன் இ.ஆ.ப. அருஞ்செயலைப் போற்றுவோம்.

அருணகிரிநாதருக்கு அஞ்சல் தலை வெளியிட்ட மத்திய அரசுக்கும், விழா நிகழ்த்த ஆணை பிறப்பித்த மாநில அரசுக்கும் முருகனடியார் நன்றியுணர்வு உயைடவர்களாவார்கள்.

திருத்தணித் திருப்படி விழா நிகழ்த்தி, ஸ்ரீமத் அருணகிரிநாதரின் புகழ் விளங்க வழிவகுத்த கனம் கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸ்ரீவள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள், அமரர் கடையநல்லூர் திருமுருக மாசித்தர் M.A.மஜீத் அவர்கள், அருணகிரி பிள்ளைத் தமிழ் பாடிய ஸ்ரீ தேவி கருமாரிதாசர், திருப்புகழ் தல ஆராய்ச்சித் திலகம் வளையப்பட்டி ரா.கிருஷ்ணன் அவர்கள், திருப்புகழ்ப்பண் ஆராய்ச்சி நூலாசிரியர் அவர்கள், திருப்புகழ்ப்பண் ஆராய்ச்சி நூலாசிரியர் ஸ்ரீ ஏகாம்பரம் போன்றவர்கள் வணக்கத்திற்குரியவர்கள்.

நாதனார் அருளிய பாடல்களை ஓதுவித்தும் சொற்பொழிவு நிகழ்த்தியும், பிரதிவருஷம், சென்னை, திருச்சி, பொள்ளாச்சி, கோவை போன்ற நகரங்களில் விழா நிகழ்த்திவரும் அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்களுக்கும், அவர்கள் பொறுப்பில் இயங்கிவரும் ஸ்ரீ இராமலிங்கர் பணிமன்ற அன்பர்கள் அனைவருக்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டவர்கள்.

தென்னிந்தியத் திருப்புகழ் சபைகள், மற்றும் அறிஞர் பெருமக்களைக் கொண்டு பிரதி வருடம் ஆகஸ்ட் மாதம் திருவண்ணாமலை தலத்தில் இசை நிகழ்ச்சிகளும் பேருரைகளும் நிகழ்த்தி, ஸ்ரீ அருணகிரி நாதர் பெருவிழா கொண்டாடும் வணிகப் பெருமகனார் வரத தனுசுபிள்ளை மற்றும் அவர் தொண்டுக்குத் துணை நிற்கும் அன்பர்கள் அனைவரையும் உளமார வாழ்த்துவோம்.

பிரதிவருடம் டிசம்பர் 26-ம் நாள் சென்னையில் ஸ்ரீமத் அருணகிரிநாதருக்கு விழா நிகழ்த்திவரும் திருப்புகழ் சபையினருக்கும், விழா சிறக்க உதவும் அன்பர் அனைவருக்கும் வாழ்த்து கூறுவோம்.

பிரதி வருடம் கார்த்திகை மாதம் மூல நக்ஷத்திரம் சார்ந்த சுபதினத்தில், ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிக்கு ஜயந்தி விழா நிகழ்த்தும் வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் திருப்புகழ் சபையினருக்கும், பேரன்பர்கள் அனைவருக்கும் முருகனடியார்களுக்கும் நன்றி வணக்கம் உரித்தாக்குவோம்.

நாதனாரைப் புகழ்ந்து போற்றிய அந்தகக்கவி வீரராகவ முதலியார், வரகவிமார்க்க சகாயத் தேவர், திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள், தொட்டிக்கலை சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ கந்தப்ப தேசிகர், வடலூர் ஸ்ரீ இராமலிங்க வள்ளலார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை, திருப்புகழ் நாவலன் புகழ் பேசியே வாழ்நாளை நிறைவு செய்த திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள், அருட்கவி சாதுராம் சுவாமிகள், திருப்புகழ் சதுரர் செ.த.இராமலிங்கம்பிள்ளை ஆகியோர் அடியவர்களால் வாழ்த்தி வணங்க வேண்டியவர்கள்.

புதுடெல்லி குருஜீ ஸ்ரீ இராகவன் சுவாமிகளின் திருப்புகழ் அன்பர்கள் சபையினர், காஞ்சி விநாயக முதலியார், புரசை அருணகிரி அவர்கள், வேலூர் ஸ்ரீவள்ளிமணாளர் திருப்புகழ் பாராயண சங்கத்தினர் ஆகியோரும் போற்றி வணங்கத்தக்கவர்களாவார்.

1919ம் ஆண்டு முதல் மதுரையில் ஸ்ரீ அருணகிரி நாதருக்கு ஜெயந்தி விழா கொண்டாடிவரும் மதுரை திருப்புகழ் சபையை சிறப்புற

நடத்தி வரும் திரு.தியாகராஜன் மற்றும் கிருபாசங்கர் போன்ற அன்பர்களுக்கு எல்லா நலன்களும் நல்க முருகனை வேண்டுவது அடியவர் கடனாகும்.

வேலூரையடுத்த காங்கேயநல்லூர் தலத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் ஞானத்திரு வளாகத்தில் நிகழ்த்தப் பெறும் பூஜைகள், அன்னப்பணி ஆண்டுவிழா ஆகியவைகளை சிறப்புற நடத்திவரும் வாரியார் சுவாமிகளின் உடன் தோன்றல் திரு.திருப்புகழ் மணி அவர்களையும் அவர் தொண்டுக்குத் துணை நிற்போரையும் வாழ்த்தி வணங்குவோம்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் அருளாணையின்படி 1918 முதல் ஸ்ரீமத் அருணகிரிநாதர் குருபூஜை சென்னையில் நிகழ்த்தி வந்த அன்பர்களையும், 1929 முதல் சுவாமிகள் சமாதி நிலையத்தில் பிரதி வருடம், ஆனி மாதம் பௌர்ணமி தினம் சுவாமிகள் விருப்பத்திற்குற்றவாறு சிறப்பாக நிகழ்த்திவரும் சுவாமிகளால் துவக்கி வைக்கப்பட்ட மஹாதேஜோ மண்டல சபை நிர்வாகிகள் உறுப்பினர்களையும், முருகனடியார்களையும் வாழ்த்துபவர் இளம்பூரணனின் நற்கருணைக்குற்றவராவர்.

மற்றும், உலகெங்கும் உள்ள நாதனாரின் புகழ்பாக்கள் பாடி மகிழும் தொண்டர்கள் அனைவருக்கும், இனிவரும் காலங்களில் ஸ்ரீ அருணகிரிநாதர் புகழ் பேசி வருவதற்கு ஆயத்தமாகும் சந்ததியினருக்கும் வள்ளி மணாளன் கிருபை புரிய வேண்டுவோம்.

4. திருப்புகழ் மாண்பு

தெய்வத் தமிழ்ப்புலமையோடு வடமொழியில் வல்லவராகவும் திகழ்ந்த ஸ்ரீமத் அருணகிரிநாதர், திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம், மயில்விருத்தம் போன்ற நூல்களுக்குக் கர்த்தாவாகும்.

நாதனாருக்கு வழங்கப்பெற்ற சிறப்புப் பெயர்கள். ஸார்வபௌம டிண்டிமகவி, அஷ்டபாஷா பரமேஸ்வரர், சந்தப்பாவலப்பெருமாள், நாற்கவிராஜர், முத்தமிழரசர், நவரசநாவலர், சந்தக்கவித் தலைவர், தாளச்செல்வர், இசைஞானியார், திருப்புகழ்ப்பாவகை ஆதிகர்த்தா என சிறப்பு பெயர்கள் நிலைத்துவாம்..

எண்ணற்ற தாளங்கள், பண்கள், சந்தங்கள் அமைந்துள்ள பொக்கிஷமாக விளங்கும் ஸ்ரீ அருணகிரி நாதர் திருவாக்குகளைப் **''பரம்பொருள் கூறியருளிய வேதமாகவே யாம் கோடும்; சீரிய அறிஞர் யாவரும் அங்ஙனமே கொள்ளும் நீராரே''**, என ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் கூறியுள்ளார்.

நாதனாரின் பாடல்களில், திருப்புகழ் மகிமை கூறும் பாடல்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக,

1) ***தோத்திரமாகத் துதிக்கும் திருப்புகழை ஏத்தினவர் ஈடேறுவர்.***

2) ***வைப்பாம் அருணகிரி வாழ்த்தும் திருப்புகழைக் கற்பார் கரையேறுவார்.***

3) ***இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர் இடுக்கினை அறுத்திடும்***

4) ***சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்த பகை அறுத்தெறிய முறுக்கிஎழும்;***

போன்றவை அருஞ்சொற்கள் எனக்கூறலாம்.

ஸ்ரீமத் ஆருணகிரிநாதர், பதினாறாயிரம் பாடல்கள் இயற்றியருளிய உண்மைச் செய்தி, ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச்

செய்துள்ள திருவலங்கற்றிரட்டு முதற்கண்டம், 16-ம் பதிகத்திலுள்ள ''மாயாமளக்கர்'' என்ற தொடக்கப் பாடல், மற்றும் 18-ம் பதிகத்து ''கயல்விழி மறிமகள் கணவனென'', என்ற சொற்றொடர் தொடக்கப் பாடலாலும் உணர்ந்து கொள்ளலாம்.

தேவாலயங்களிலும், இல்லங்களிலும், நித்திய பாராயணத்தில் திருப்புகழ் ஓதுதல் முறைமையாகும். அதுவும், பொருளுணர்ந்து, பிழையின்றி ஓத வேண்டும். ''கருப்பத்தூறிப் பிறவாதே'', என்ற தொடக்கத் திருப்புகழ் ஓதி, திருக்கந்தர் திருப்பல்லாண்டு பாடல் இசைத்துப் பூசை பூர்த்தி செய்வது முருகனடியார் செயலாகும்.

தவசீலர் யாவரும் தாம் ஏற்றுக் கொண்ட தவத்தைத் தமது வாழ்நாள் எல்லைவரை இடைவிடாது பயிலுதல் சிறப்புடைத்து.

தவநிலையிலுள்ளோர், தியான நிலையினின்று நீங்கி விழிப்பு ஏற்பட்டால், திருக்கோயிலுக்குச் சென்று தாம் வழிபடு கடவுளாக, திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்தியை வழிபட்டு, பிரசாதமேற்றுத் திரும்பி வரவேண்டும். இக்கருத்தை, தயில நடையில் குக பரம்பொருளை சிந்தை செய்துவந்த ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், தாம் அருளியுள்ள காசி யாத்திரை நூற்பாடல் வலியுறுத்தும். அப்பாடல்:

விழிப்புண்டா மாயின் விளங்கும் அயிற்கையன்
பழிப்பில்பூங் கோயிறனைப் பார்த்து - விழிப்புனல்
ஊற்றெடுப்ப மேல்வலம்வந் தோகையுடன் வீழ்ந்தெழீஇ
நீற்றினையிட் டுள்ளடக்க னேர்.

சேய்ப்பரமன் திருவருள் விலாச ஞானியாகத் திகழ்ந்த ஸ்ரீமத் அருணகிரிநாதர், இறைவர் காட்சிக்காக பல தலங்களை தரிசித்தார். இறைவர் கட்டளைப்படியும் சில தலங்களை தரிசனம் செய்தார். இவ்வாறு நாதனார் 188 திருத்தலங்கள் தரிசனம் செய்தார் என்ற குறிப்பு உள்ளது.

சேய்ப்பரமன், நாதனாருக்கு வாழ்வளித்த முறைகளை தாம் அருளிய திருவகுப்பு 12-ம் பாடலில்,

"அருணையில், இடைக்கழியில், உரககிரியில்,
புவியில் அழகிய செருத்தணியில், வாழ்கற்பகாடவியில்,
அறிவும் அறிதத்துவமும், அபரிமித வித்தைகளும்
அறியென இமைப் பொழுதில் வாழ்வித்த வேதியன்",

எனக் குறிப்பிட்டுள்ளதுடன், தாம் பெற்ற பேற்றைத் தாம் அருளிய கந்தரனுபூதிப் பாடல்களால் தெளியலாம்.

பிறர் செய்த பிழைகளைத் தாமே புரிந்ததாகப் பாவித்து, நமக்கு நல்வழியை நினைவூட்டும் வகையான் கவிதை உலகில், பக்திப் பாடல்களில், பாடலாசிரியர்கள் கையாளும் உத்திக்கு நைச்சியானு சந்தானம் எனப் பண்டை நூல்கள் பகர்கின்றன.

பிறவியின் வேரை அறுத்து அருள்பவன் முருகன் எனத் தெளிந்து, அவன் ஒருவனையே புகழ்ந்து பாடிய ஸ்ரீமத் அருணகிரிநாதர், புலன்களின் சேட்டையை ஒடுக்கியவர். புலன்களை வென்ற ஸ்ரீ அருணகிரிநாதர் மற்றும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் ஆகியோரின் அடிமலரைத் தொழுது அவர்கள் வகுத்துள்ள நெறிகளைப் பின்பற்றி, அவர்கள் அருளிய பாடல்களை ஓதி வழிபடும் காரியம் ஒன்றினாலேயே, வேண்டுவார் வேண்டுவன பெறுவார். இது எந்நாளும் அனைவரும் கைக்கொள்ள வேண்டிய நியதியாகும்.

இறை வழிபாடு, உள்முக வழிபாடு, வெளிமுக வழிபாடு என இருவகையாகும். உடலுக்கு உறுதி பயக்கும் நல்ல பண்டத்தை உட்கொள்ளுவதால் உள் உறுப்புக்களும் வெளி உறுப்புக்களும் பயனடைவது போல உள்முக வழிபாடு. அவ்வாறான பண்டங்களை உடம்பின் மேலே பூசிக் கொள்வது ஒக்கும் வெளிமுக வழிபாடு என்க.

இறைமூர்த்தங்களில் புரியும் வெளிமுக வழிபாட்டின் பயனாய் போக போக்கியங்களும் சிறந்த பேறும் எய்தலாம். இவ்வழிபாடு நிஷ்காமியமாகக் குகப்ரீதி புரிந்து செய்தால் நல்லாசானை நல்கப் பெறுவோம்; அன்றியும் இறைவரே வெளிப்பட்டு மானிட வடிவுடன் எழுந்தருளி வந்து அருள்வதும் உண்டு.

உள்முக வழிபாடு ஒன்றே பிறவிப்பிணி நீக்கவல்லது. இதுவே சுகவழிபாடு. இவ்வழிபாடு புரிபவர், சித்த சுத்தியுடையவராய், மலநீக்க

நோக்கமுடையவராய், பஞ்சபாதகங்களினின்று நீங்கியவராதல் வேண்டும். இவ்வகை வழிபாடு புரிவதற்குற்ற எட்டு புஷ்பங்களை நாதனார், தாம் அருளிய **''ஆசைகூர் பத்தனேன்''**, என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

ஞான மணங்கமழும் அவை உள்ளமாகிய உள்ளூரில் பூக்கும் புஷ்பங்களாகும்; அவை, அஹிம்சை, பொறுமை, தயை, இந்திரிய நிக்ரகம், பக்தி, சத்தியம், தபம், ஞானம் என்பனவாம்.

முன்னர் குறிப்பிடப்பட்ட உள்முக வழிபாட்டிற்கு மூக்கு நுனி பார்த்தல், மூலக்கனல் எழுப்ப முயற்சி போன்ற செயல் தேவையில்லை என்பது நாதனாரின் கருத்து; அதை விளங்கும் திருப்புகழ் பாடல்களில்:

1) ''கறைபடுமுடம்பு'', எனத் தொடங்கும் சுவாமிமலைத் திருப்புகழில், ''வாயுவைக் கரும வசனங்களால் மறித்தனலூதிக் கவலைபடுகின்ற யோக கற்பனை மருவு சிந்தை போய்விடக் கலமிடுமஞ்சும் வேரறச் செயல் மாளக் குறைவற நிறைந்த மோன நிர்க்குணமது பொருந்தி வீடுறக் குருமலை விளங்குஞான சற்குருநாதா''

2) கதிர்காமத் திருப்புகழில், ''சரியையாளர்க்குமக்கிரியையாளர்க்கு நற்சகலயோகர்க்குமெட்டரிதாய சமய பேதத்தினுக் கணுகொணா மெய்ப்பொருட்டரு பராசத்தியிற்பரமான துரிய மேலற்புதப் பரஞானத் தனிச்சுடர் வியாபித்த நற்பதநீடு துகளில் சாயுச்சியக்கதியை யீறற்ற சொற் சுக சொரூபத்தையுற்றடைவேனோ.

இவை போன்ற நூற்றுக்கு மேற்பட்ட திருப்புகழ் பாடல்களில் மாந்தர் சரியை கிரியைகளில் சிக்காமலிருக்க நாதனார் விண்ணப்பித்துள்ளதைக் காணலாம்.

உள்முக வழிபாடு ஒன்றே, பிறந்து செத்திடல் தொலைக்கும் எனத் தெளிந்த நாதனார், தாம் அருளிய பாடல்களில் சைவ சித்தாந்தச் செம்பொருளான சுத்த அத்துவித நெறியை சிறப்பித்துப் பாடிய பாடல்களில்:

1. பழநித்தலத்திருப்புகழ்: ''சுருதிமுடிமோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ சமய வடிவாய் வந்த அத்துவிதமான பரசுடரொளியதாய் நின்ற நிட்கள சொரூபமுதல் ஒரு வாழ்வே'', என்ற பாடல் முழுவதிலும் சைவநெறி விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அன்பர்கள் கவனத்திற்காக இப்பாடல் முழுமையாக இதனடியில் வழங்கப்பட்டுள்ளது.

2. வயலூர் திருப்புகழ்: கமையற்ற சீர்கேடர், வெகுதர்க்க கோலாலர்களையுற்று மாயாது, மந்த்ர வாதக் கடைகெட்ட ஆபாதமுறு சித்ர கோமாளர் கருமத்தின் மாயாது கொண்டு பூணுஞ் சமயத்தராசார நியமத்தின் மாயாது சகளத்துளே நாளு நண்புளோர் செய் சரியை க்ரியா யோக நியமத்தின் மாயாது சலனப்படா ஞானம் வந்து தாராய்'' என சிவஞானம் வேண்டுகிறார்.

3. சுவாமிமலை திருப்புகழ்: '' நீ வேறெனாதிருக்க நான் வேறு எனாதிருக்க நேராக வாழ்வதற்கு உன் அருள் கூர, நீடார் சடாதரத்தின் மீதேபரா பரத்தை நீ காணெனா அனைச்சொல் அருள்வாயே'', எனக் கோருகிறார்.

4. ''தசையுமுதிரமும்'' என்ற தொடக்கத் திருப்புகழ் பாடலில், ''சகல கருமிகள் சருவிய சமயிகள் சரியை கிரியைகள் தவமெனு மவர்சிலர் சவலையறிவினர் நெறியினைவிட இனியடியேனுக் கிசைய இது பொருளென அறிவு றவொரு வசனமுற இருவினையற மலமற இரவு பகலற எனதற நினதற **அநுபூதி இனிமை தருமொரு தனிமையை மறைகளி னிறுதி** யறுதியிடவரிய பெறுதியை இருமையொருமையில் பெருமைய்யை வெளிபட மொழிவாயே'', என விண்ணப்பித்துள்ளார்.

5. கருவூர்த் திருப்புகழ்: ''பசுபாசமும் விட்டறிவாலறியப்படு பூரண நிட்களமான பதிபாவனையுற்று **அநுபூதியில்** அப்படியே யடைவித் தருள்வாயே'' எனவும் விண்ணப்பித்துள்ளார்.

இவ்வாறான விண்ணப்பம் விளங்கும் திருப்புகழ் பாடல்கள் பற்பல நாதனார் அருளிச் செய்துள்ளார்.

உ

ஓம் குஹேசாய் நம:

சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொரூ பமுதல் = ஒரு வாழ்வே!
துரியநிலை யேகண்ட முத்தரித யாகமல
மதனில்வினை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேஅடைய உணராதே

கருவிலுகு வேதங்கு சுக்கிலநி தானவள்
பொருகுமதிலே கொண்ட முக்குணவி பாகநிலை
கருதவரி யாவஞ்ச கக்கபட மூடியுடல் வினைதானே
கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜ
மெனவுழலு மாயஞ்செ ளித்தகுகை யேஉறுதி
கருதகடி மாமிந்த மட்டைதனை யாளவுன=தருள்தாராய்;

ஒருநியம மேவிண்ட சட்சமய வேதஅடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயி
ருடலுணர்வ தாயெங்கு முற்பனமதாகஅம ருளவோனே
உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுக
முதவுமம லாநந்த சத்திகர மேவுணர
உருபிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா;

பருதிகதி ரேகொஞ்சு நற்சரண நூபுரம
தசைய நிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பதகெருவி தாதூங்க வெற்றிமயி லேறுமொரு திறலோனே
பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாவென்று வற்கரமு மாகிவளர்
பழநிமலை மேனின்ற சுப்ரமணியா அமரர் பெருமாளே.

(ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள்
அருளிச் செய்த பழநிமலைத் திருப்புகழ்)

5. நாதனாரின் நண்பர்கள்

கஞ்சமலர் மனையானும் மாலும் தேடிக் காணாத செங்கனியில் கனிந்த தேனைச் சுவைத்த அருணகிரிநாதருக்கு வாய்த்த நண்பர்களில், மூவர் சிற்றரசர்களாவர். அவர்களில்,

1. சோமநாதன்: இவர் ஒரு குறுநில மன்னர். திருவருணை திருஅருணாசலேஸ்வரரை வழிபட்டு வாழ்நதவர். சமணர்களை அடக்கி ஆண்ட அரசர். உலகம் புகழ் உத்தமர். தவசீலர் ''ஒரு வழிபடாத'', எனத் தொடங்கும் பழநித்தல திருப்புகழ் பாடலில்,

''அரிவை ஒரு பாகமாக அருணகிரி நாதர் பூசை
அடைவு தவறாது பேணும் அறிவாளன்
அமணகுல காலனாகும் அரியதவ ராஜராஜன்
அவனிபுகழ் சோமநாதன்''

என நாதனார் சோமநாதனைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

2. கலிசைச் சேவகன்: இவரது இயற்பெயர் காவேரிச் சேவகன். குறுநில மன்னராக விளங்கிய இவர் வீறை என்ற தலத்தில் பழநிக் கோலப்பன் திருவுருவை நிறுவி வழிபட்டவர். தமக்கு வாய்த்த அரசு பதவி, பண்டைத் தவப்பயன் எனத் தெளிந்து, அரசு பதவியை விட தவமே சிறந்தது எனத் தேர்ந்து, வயலூர் சென்று, தமது தவத்தைத் தொடர்ந்தார். என்னை நம்பும் அன்பு கிளர்ந்தவர்க்கும் இயைந்த சீர், நாளும் நல்குதி என முருகனை வேண்டினார். முருகவேள் அம்மன்னருள் நிலைத்து விளங்கினார்.. ஆதலால் பூதேவி அவர் தூலத்தை மடிமீது ஏற்றாள்.

மனமாசு அற்று, நீண்டவாழ்வு வழங்கப் பெற்ற அம்மன்னர், தன்னை எண்ணுபவர் எண்ணங்களை எளிதில் செயலாக்கத் தக்க ஊக்கத்தைக் கந்தப் பரமனிடம் வேண்டிப் பெற்று, உற்றவர்களுக்கு வழங்கி வருகிறார்.

''வீறு கலிசைவரு சேவகனது இதயமேவுமொரு
பெருமை யுடையோனே''

என, பழநித்திருப்புகழ் பாடலிலும் வேறு பல பாடல்களிலும், தமது நண்பனான காவேரிச் சேவகனைப் புகழ்ந்து நாதனார் பாடியுள்ளார்.

3. பிரபுடதேவமாராஜன்: இவர் திருவருணைப் பதியைத் தலைநகரமாகக் கொண்டு அரசாட்சி நடத்தியவர். சிவபக்தரான இவர், நாதனாரின் பேரன்புக்குற்றவராகத் திகழ்ந்தவர். சக்தி உபாசகனும், பொறாமைப்பேய் பிடித்தவனுமான சம்பந்தாண்டான் என்பானின் தூண்டுதலின் விளைவால் பிரபுட தேவ மாராஜனுக்கு நாதனாரின் அன்பு வயப்பட்ட கந்தப்பரமன் கற்கம்பத்திடை மயில்மீது தரிசனம் தந்தருளினார்.

கற்கம்பத்திடை மயூரநாதனாகக் கண்ட ஒளிமிக்க காட்சியால் நோக்கின்றி மாழ்கிய பிரபுடதேவ மாராஜனது கண்களுக்கு ஒளியுண்டாமாறு நாதனார் விபூதியளித்து அருட்பார்வையுண்டாமாறு கிருபை புரிந்ததும், பின்னர் கிளியுருக் கொண்டு, விண்ணுலகெய்திப் பாரிஜாத மலர் கொணர்ந்து அரசன் பூரண குணம் பெற்ற விவரமனைத்தும் நாதனாரின் உண்மைச் சரித்திரச் சுருக்கத்தில் காணலாம்.

''அதலசேடனாராட'', என்ற தொடக்கத் திருவருணைத் திருப்புகழ் பாடலில்,

''மயிலுமாட நீயாடி வரவேணும்''
''உதயதாம மார்பாட பிரபுடதேவமாராஜன்
உளமுமாட வாழ்தேவர் பெருமாளே''

எனத் தனது நண்பரின் உளம் மகிழ நாதனார் பாடியதை நாம் அறிவோம்.

6. செம்மை செய்யப்பட வேண்டிய செய்திகள்

''முத்தைத்தரு'', என்ற நன்மொழித் தொடரை வழங்கி, நாதனாரை திருப்புகழ் பாட கிருபை புரிந்து, அவருக்குற்ற தொழுநோய் அறவே செய்து ஒரு சுகம் நல்கிய துரை, அவரை வயலூருக்கு வரவழைத்துத் திருப்புகழ் பாட வலிமை வழங்கினார்.

வயலூரிலிருந்து விராலி மலைக்கு வருக எனக் கட்டளையிட்டு நடுவழியில் பாதை தெரியாமல் தவிக்க வைத்து, வனவேடன் வடிவில் காட்டுப்பட்டியருகே தோன்றி, சந்தான கோட்டம் என்ற தலத்தில் ஞானோபதேசம் அருளி, விராலி மலையில் அஷ்ட சித்தியும் அருளப்பெற்ற அருணகிரிநாதரின் தூய தவ வாழ்வைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் வெளியிடப் பெற்ற செய்திகள் சிலவற்றை காண்போம் :

1. தவத்திரு குகதாச சுவாமிகள் இயற்றியுள்ள, ''அருட்செல்வர் அருணகிரிநாதர் வரலாறு ஓர் ஆய்வு'', எனும் நூலில் உள்ள செய்தி வருமாறு:

''சங்கரர் தீவினை புரிந்து அதன் பயனைத்துய்க்க இழிவான வேசியர் குலத்தில் அருணகிரிநாதராகப் பிறந்தார். அருணகிரிநாதரின் பிறப்பு பற்றி எந்த விவரமும் அறுதியிட்டுச் சொல்வதற்கில்லை. அவர் முத்தம்மை எனும் வேசியர் குலத்து வந்தவர்; இளமையில் கல்வி பயிலாதவர்; கணிகையரைக் கூடிக் காமக்களியாட்டத்தில் காலங் கழித்து நோய்வாய்ப்பட்டார். தமக்கையின் சுடுமொழியில் உயிர்விடத் துணிந்து திருவருளை கோபுரத்தின் மீதேறிக் குதித்தார்''

2. தவத்திரு கா.ரா.ஜமதக்கினி சுவாமிகள் வெளியிட்ட கந்தரநுபூதி நூலில் உள்ள விவரம் வருமாறு:

''அருணகிரிநாதர் பட்டினத்தாருக்கு உதித்தவர். கணிகையர் மையலில் பட்டுத் தொழுநோயால் பீடிக்கப்பட்டவர். உடன் பிறந்தவளின் சுடுமொழியால் துறவு ஏற்றவர். திருப்புகழ் **பதினாயிரம்** பாடியவர்''

3. புதுடெல்லி உத்தர சுவாமிநாதர் கோயில் அருணகிரிநாதர் நினைவு விழா மலரில் உள்ள விவ்ரங்கள் வருமாறு:

1. கர்ண பரம்பரை வரலாறு:

அருணகிரிநாதர், விதிவசத்தால் பரத்தையர் வசப்பட்டு உள்ள பொருளெல்லாம் இழந்து பலபிணிகளுக்கு ஆளாகி வருந்தினார். தவப்பெரியார் தோன்றி அருணாசலேஸ்வரரை இடைவிடாது வழிபடுமாறு கூறியபடி பலகாலம் தவம்செய்தும் அருணாசலேஸ்வரர் அருள்புரியவில்லை; மனங்கலங்கி உயிரைவிடத் துணிந்தார். முருகக் கடவுள் தோன்றி தம்புகழ் பாடக் கட்டளையிட்டார். அதன்படி பலதலங்களை தரிசித்து இறுதியில் கிளியுருவையடைந்து திருத்தணிகை முருகப்பெருமானின் திருக்கையில் நித்திய வாசஞ் செய்பவராயினர்.

2. சரித்திர ஆராய்ச்சிக் குறிப்பு:

(அ) வடஆற்காடு முள்ளந்திரம் எனும் பிரபுடதேவராயபுரம் கல்வெட்டுகள், மற்றும் இராம கவிகள் என்பவரால் இயற்றப் பெற்ற நூல்களைக் கொண்டு அருணகிரிநாதர் பற்றிய கட்டுரை ஒன்று இந்தியன் ஆண்டிக்வரி பத்திரிக்கையில் கி.பி.1918ல் வெளிவந்தது. அந்தக் கட்டுரையில், பார்ப்பன மாது ஒருத்தி, தமது மூதாதையரான டிண்டிம கவி என்பவர் அண்ணாமலைநாதர் கோவிலுக்கு கி.பி.1550ல் நிலம் அளித்த விவரம் உள்ளது. அந்த அண்ணாமலை நாதரே திருப்புகழ் ஆசிரியரான அருணகிரிநாதராவார் எனப் புதைபொருள் ஆராய்ச்சி இலாகா அலுவலராயிருந்த திரு.டி.ஏ.கோபிநாத் என்பவர் கூறியுள்ளார்.

(ஆ) மகாவித்துவான் இராகவ ஐயங்கார் அவர்கள், தாம் இயற்றிய சாசனத் தமிழ்க்கவி என்ற நூலில், அருணகிரிநாதர் என்னும் நீண்ட கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில், 15-ம் நூற்றாண்டில், சாளுவஅப்யுதம் என்ற வடமொழி காவியம் இயற்றிய ராஜநாதகவி என்பார் தம் தந்தையான அருணகிரிநாதரை, ஸார்வபௌமடிண்டிம கவி என்றும், அஷ்டாபாஷா பரமேஸ்வரர் என்றும், சித்ரகவி பிரபந்தம் இயற்றுவதில் சிறந்தவர் என்றும், சேர, சோழ பாண்டியர்களால் போற்றப்படுபவர் என்றும் கூறுகின்றார்.

(இ) விபாக ரத்னமாலிகா என்னும் வடமொழி நூலின் முன்னுரையில், அருணகிரிநாதரின் முன்னோர், ஆதியில் வங்கதேசத்திலிருக்கும் ராஜ்ஷாஹி தாலுக்காவைச் சேர்ந்த வரேந்திர அக்கிராஹாரத்திலிருந்து திருவண்ணாமலையை அடுத்த மெத்தைப்பாடி என்னும் ஊருக்குக் குடியேறியதாகத் தெரிய வருகின்றது. மேற்சொன்ன நூலின்படி காசியாத்திரை சென்ற சோழ மன்னன் ஒருவன் வடநாட்டில் கங்கைக்கரையில் வசித்து வந்த வேதம் ஓதுவதில் வல்லவர்களுமான எட்டு பிராமண குடும்பங்களைத் தமிழ் நாட்டுக்கு அழைத்து வந்து மெத்தைப் பாடியில் குடியேற்றியதாகத் தெரிய வருகிறது. இக்குடும்பத்தில் தோன்றிய அருணகிரி என்பவர், தமது அத்தை புரிந்த கொடுமை தாளமாட்டாமல் புத்தூர் சிவாலயத்தில் இரவைக் கழிக்கவும், சிவபெருமான் அவருக்கு அருள்புரிந்து, அவரை ஒரு சிறந்த கவியாக ஆக்கிய வரலாறு காணப்பெறுகிறது.

4. ''ஆன்மீகம்'': 1997 ஆகஸ்ட் மாத இதழில் டாக்டர் எம்.ஜி.வரதராஜன் என்பவர் வரைந்துள்ள கட்டுரையில், அந்த நாளில் திருப்புகழ் அவ்வளவாக யாராலும் பாடப்படவில்லை; அதை ஒரு காம விரசக் கண்ணோடு நோக்கிய காலம் அது என்று கூறி, வள்ளிமலை சுவாமிகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

5. டாக்டர் சீனிவாச தேசிகன் அவர்களால் வெளியிடப்பட்ட ஸ்ரீமத் அருணகிரி ராமாயணம் எனும் நூலில் உள்ள குறிப்பு வருமாறு:

''விஜயநகர சாம்ராஜ்ய காலத்தில் அருணகிரிநாதர் கௌமார சமயம் பரப்பியவர். அவர் தமது இளமையைக் காமக் களியாட்டத்தில் கழித்தவர். அனைத்தையும் இழந்து ஏழ்மையும் பிணியும் அவரை வாட்டின. ஆடம்பர வாழ்வுக்கு வசதியில்லை எனத் தேர்ந்து, உயிரை விட, அருணை கோபுரத்தின் மீதேறி வீழ்ந்தார். முருகன் வயோதிகராக வந்து அவரைக் காப்பாற்றினார். ஒரு வேலால் அவர் நாவில் தொட்டுப் பாடப்பணித்தார். 204 தலங்களுக்குச் சென்று பாடினார். அந்நாளில் முகமதிய மதம் பிரபலம் ஆகிய காலமாதலால் சர்வ இந்து சமயக் கடவுள்களையும் குறித்துப் பாடினார்''.

6. மேலும், தமிழ் பண்பாட்டுக்கு ஒவ்வாத கருத்துக்களைப் புகுத்தி, நாதனாரைப் பரத்தையர் நேசமுடையவர் என்று உரை

நிகழ்த்தியும், நாடகமாக்கி நடித்தும், திரைப்படங்களில் வெளியிட்டும் வந்த நாட்களும் உண்டு.

ஸ்ரீமத் அருணகிரிநாதரின் தூய வாழ்வை சரிவர உணர்ந்து கொள்ளாமல் வெளியிடப்பெற்ற அனைத்து செய்திகளும் செம்மை செய்யப்பட வேண்டியவைகளாகும்.

ஊழ் சகித்தலும், எவர் ஓது இகழ்ச்சி மொழி பொறுத்திடலும் ஒருவகைத் தவமே; ஆதலால் அமைதியடைவோம்; நிகழ்ந்தவைகளை மறப்போம்.

ஆன்ம கோடிகளின் நெஞ்சாம் குகையிலிருக்கும் பரமான்மாவின் சிந்தையோடு திகழ்ந்த தவசீலர் ஸ்ரீமத் அருணகிரிநாதர் என்ற பேருண்மையை அனைவரும் உணர்ந்து உய்வோம்.

ஸ்ரீஅருணகிரிநாதர் போன்ற அருளாளர்களைப் பற்றி, தவறான கருத்துக்கள் இனியும் வெளிவருவதைத் தவிர்ப்போம்.

மாசுபடுத்தப்பட்ட செய்திகளைச் செம்மை செய்யும் நோக்கத்துடன், **ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் கி.பி.1918ல் சென்னையில் வெளிப்படுத்திய ஸ்ரீமத் அருணகிரிநாதரின் திவ்விய சரித்திரச் சுருக்கம்** சத்தியமானது.

7. ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளின் திவ்விய சரித்திரச் சுருக்கம்

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே!

திருவருட் பெருஞ்செல்வர் பலர் செறிந்து விளங்கும் இயல்பினையுடைய பரத கண்டத்தின், தென்புறத்ததாய தமிழ்நாட்டின் நடுநாட்டிலே விளங்குவது திருவண்ணாமலை என்னும் தலம்.

இஃது, புலவர்களால் இத்துணை பெருமை வாய்ந்தது என வரையறுக்கப்படாதது. தேவர், முனிவர், சித்தர், யாவராலும் துதிக்கப்படும் மூலகாரண நிலயமாக உள்ளது எனச் சைவ மகாபுராணத்தால் எடுத்துரைக்கப்படுவது. அரிபிரமர் தேடநின்ற சோதிசயிலம் அல்லது அருணகிரி என்று கூறப்படுவது.

இந்த திவ்விய பதியிலே சற்றேறக்குறைய 400 வருடங்களுக்கு முன்னே, உருத்திர கணிகையர்மரபிலே, தம் உடல் பொருள் ஆவி மூன்றனையும் சிவார்ப்பணம் செய்து வதியும் பெருமை மிக்க முத்தம்மை என்னும் பெயரிய அம்மையார் ஒருவரிருந்தார்.

அவ்வம்மையாருக்குப் பெண் மகவு ஒன்றுண்டு. ஆண் சந்ததியில்லாமையினால் அவர் அருணாசலேசுரரை நோக்கி, சுவாமி இவ்வடியாட்கு ஒரு ஆண்மகவையளிப்பையேல் அதற்கு நின் சொரூபமாகிய அருணகிரி என்னுமொரு பெயரைச் சூட்டுவேன் என்று வேண்டினார். பின்னர் அக்கோயிலில் எழுந்தருளியுள்ள குமாரமூர்த்தியை நோக்கி, ஐயனே எனக்கொரு ஆண்மகவு பிறக்குமேல் நின்திருவருள்விலாச ஞானியாய் இருக்க வேண்டும் என்றும் தவங்கிடந்தார்.

அத்தவப்பயனாகவே அவர் ஆங்கோர் அனுக்கிரக நோக்க மருவப்பெற்றுச் சூன்முதிர்ந்து ஓர் ஆண்மகவை ஈன்றனர்.

அம்மகவிற்குத் தமது நிருணயத்தின்படி அருணகிரி என்னும் திருநாமத்தைச் சூட்டினார். அந்நாமமுடைய பிள்ளை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கல்வி பயின்று வரும்போது, அவருக்கு ஏழாம் ஆண்டுற்றது. அவருடைய அருமைத்தாயாரான முத்தம்மையார் இம்மண்ணுலக வாழ்க்கையை நீத்து விண்ணுலகு எய்தினர்.

பின்னர் அருணகிரியார்க்குத் தம் முன் பிறந்தாளது ஆதரவைத் தவிர வேறு புகலிடமில்லையாயிற்று. அவர் முன்பிறந்தாளும் தம்பியரிடத்தே கொண்ட அன்பு இதனினூங்கு பெருகுமாறில்லை எனப் பெருக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது.

அருணகிரியார் இங்ஙனம் வளர்ந்து வருநாளில் ஊழ்வினைப் பயனாக உடம்பில் பெருநோய் எய்தப்பெற்று வருந்துவாராயினார். இந்நோய் பெண்கள் விழைச்சு மிக்கதனால் உற்றதென்றும் அதற்கு அவர் பாடல்களுள் சான்றுகள் உளவென்றும் கூறுதல் கொள்ளப்படுவதன்று. என்னை,

''வண்ணப்பாவே வாதுப்பாவே
வண்ணம் ஒன்றுக்குப் பாதம் நான்கே
பாதம் இரண்டும் கலையெனப்படுமே
கலையொரு மூன்றும் சீர் எனத்தகுமே
சீரே துள்ளல் எனச் செப்பப்படுமே
முதற்கலைக்கிடுவது தெய்வச்செயலே
இரண்டற்கிடுவது கிளை கொடைவிருது
மூன்றற்கிடுவது புகழும் வீரமும்
நான்கின் அமைவது நாட்டின் வளத்தொடு
ஊரும்பேரும் உவப்பக் கூறல்
மற்றைப்பாதி நற்றாய் இரங்கல்
ஆதியா அகப்பொருள் அமைந்த கிளவியிற்
கூறல் என்ப குறிப்புணர்ந்தோரே.''

என்னும் விதியின்படி உள்நிகழ்ச்சியான சிற்றின்பத்திற்குரிய அகப்பொருள் எனும் இலக்கணப் பொருள் சம்பந்தம் பிற்பாதியில் பொருந்தப் பெண்ணழகு, நடை, உடை, பாவனை முதலிய வருணனைகளோடுயிடுவது வண்ணம், ஆகலின் பேரின்பத்தை

அவாவிய அவ்வருணகிரிப் பெருமான், பிற்பாதியில் வைத்து முடிக்கப்படும் அகப்பொருள் சம்பந்தத்தை முற்பாதியில் வைத்து, அதனை இகழ்ந்தும், முற்பாதியில் வைக்கப்படும் தெய்வச்சிறப்பு முதலியவற்றை பிற்பாதியில் வைத்துப் புகழ்ந்தும் பாடுவாராயினார்.

ஆகலின் இத்திறப்பாடல்களே திருப்புகழ் முறையுள் அதிகமும் உள்ளன. சிற்றின்பத்தின் முடிவு கூறிப் பின் பேரின்பத்தின் முடிவு கூறுவதே அவரது கோட்பாடு என்பது இங்ஙனம் உணரக்கிடப்பதொன்றாகும்.

போந்த விதியினாலே, துள்ளல் எனப்பட்டதே தொங்கல் எனவும்படும். இஃது அவ்வக்கலைக்குப் பின்னே வருவது. திருப்புகழில், **எனவோதும், அடியேனே, பெருமாளே** என வருவனவற்றால் அதனை உணரலாம். இவ்வாற்றானே திருப்புகழ் பாடலெல்லாம் வண்ண நடையின என்பது ஏற்புடைத்தாம்.

''கொந்துகுழற்கோல்வளையார் குவிமுலைமேல்வீழ்வேனை'' என மாணிக்கவாசகப் பெருமான் கூறியவாறு, பெரியோர்கள் தங்களை இழிவின் பாற்படுத்தோதல் வழக்கமாகலின், அவ்வாறு அருணகிரிநாதனார் பாக்களிலும் சிலவுளவாம் என்க. அவர், கல்வியும், ஒழுக்கமும், கடவுள் பத்தியும் நிரம்பியவராகவே இருந்தார் என்பதும் ஏற்புடைமையாம்.

அம்முன் பிறந்தாள் அன்பின் முதிர்ச்சியினால் மனம் சலியாமே தாயின் மொழிகளைக் கடவாமே சகோதரரைப் பெரிதும் ஓம்பிவந்தனரேனும், அருணகிரியார் தமக்குற்ற பெருநோய் வலியையும், தம் முன்னவட்குற்ற சிரமத்தையும் எண்ணிஎண்ணி இடுக்கணுற்றார்.

பின்னர், அண்ணாமலை சிவாலயத்தின் கோபுரத்தே வடபுறத்திலுள்ள முருகப்பெருமானது சந்நிதியைக் கண்டார். காண்டலும், கண்ணீருங் கம்பலையுமாய் நின்று கதறி, அப்பெருமானைச் சரணடைந்து அங்கேயே இருந்தனர். அவரது உள்ளம் பள்ளத்துத்தங்கிய வெள்ளம் போல் ஓடாது முருகப்பெருமானையே சிந்தித்திருக்கும் ஒரு தியானத்தில் ஆறு நாட்கள் இருந்ததன்பின் அப்பெருமான் அவரை ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டு,

''முத்தைத்தரு பத்தித் திருநகை யத்திக்கிறை சத்திச்சரவண முத்திக்கொரு வித்துக்குருபர - வெனவோதும்''

என அடியாரம்பம் எடுத்துக் கொடுத்துத் தன்னைப் பாடும்படி கட்டளையிட்டனன். அங்ஙனமே அருணகிரிநாதரும் அதுகொண்டு பாடத் தொடங்கினார். பாடிவரும்போதே உற்ற குட்டம் ஒழிவடைந்ததையும், உடம்பில் முன்னிலுமிக்க எழிலொளி இலங்குவதையும் கண்டு அதிசயித்தனர்.

இறைவன் எடுத்துக் கொடுத்த மொழித் தொடரின் முதற்கண், முத்து எனவிருக்கும் மங்கல மொழியின் முதல் எழுத்தானது மகாரத்தணைந்த சிருஷ்டியாகிய அகார மாத்திரையை உள்ளடக்கித் திதியாகிய உகாரமும், அகங்கார சங்கார மகாரமும் திகழ நிற்கின்றது. இஃது இவரால் பாடப்படுவன எல்லாம் தமிழ் வேதமாம் வீட்டு நூலாம் என்னும் துணிபு உணர்த்துவதாகும். அன்றி, முத்து என்னும் அம்மங்கல மொழிக்கண் காயத்திரியின் முதல் எழுத்தாய தகாரமிருத்தலும் அம்மொழி அருணகிரிநாதருடைய அன்னை பெயராய் இருத்தலும் நன்கு கருதத்தக்கனவாகவேயுள. அவ்வன்னையின் அருந்தவத்தையும் வெளிப்படுத்தும் கருத்தானே இறைவன் அம்மொழியை எடுத்துவைத்தனன்போலும்!

பின்பு தம்மை ஆட்கொண்ட முருகப்பெருமானுடைய சந்நிதியையே தமக்குரிய வாசத்தானமாகக் கொண்டு எள்ளற்குரிய இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து, அவனுடைய திருப்புகழ்களை எடுத்துப் பாடுவதே தமக்குரிய தொண்டு என எண்ணி அந்நிலை நிற்குமவர், முழுமுதற்கடவுளாகிய முருகவேள் திருக்கோயில் கொண்டுள்ள பல தலங்கள் போந்தும் அவனைப்பாடிப் பழிச்சிவருவா ராயினார். இங்ஙனம் உலக வினையடங்கலும் ஒருவித்தம்மை யாட்கொண்ட ஐயனையே இடையறாது எண்ணி அவனைத் தரிசிக்க வேண்டும் என்னும் பேரவாமீக் கொண்டவராய் அவர் இருந்தார்.

அவ்வொரு குறையினாலேயே அவரது நல்நெஞ்சம் நைந்து நைந்து உருகுவதாயிற்று. பின்னர் அக்குறை நீங்காமை கருதிப்பின் வருமாறு செய்யத் துணிந்தார்.

பல்லாயிரம் திருப்புகழ் பாக்கள் அடங்கிய தம்புத்தகத்தைக் கையிலேந்தித் திருவருணைக் கோபுரத்தின் மீதேறி நின்றார்.

இறைவனை நினைந்து அழுதார். அப்பாக்களையும் ஒருமுறைப் பாராயணமாகப் படித்து முடித்தார். அப்போதும் இறைவன் தரிசனம் அவருக்குக் கிடைக்கவில்லை. உடனே அருணகிரிநாதர் அங்ஙன் நின்றபடியே திருப்புகழ் வரைந்துள்ள ஏடுகளை உருவிக்கீழேவிட்டு, எம் அடிகளே எனக்கீழே குதித்தனர்.

குதித்திடலும், கருணாமூர்த்தியாகிய குமாரபகவான் மனிதவுருக் கொண்டுவந்து அவரைத் தாங்கிவிட்டு எதிர்நின்று, ''இளம்பூரணனைத் தரிசித்து உய்யப் பிராணனை விடுவதாயிற் பயனின்று; இன்னும் தவம் செய்தல் வேண்டும்'' எனக்கூறி, சடக்கர உபதேசம் செய்து உருத்திராக்கம் கோக்கப்பட்ட செபமாலை ஒன்றளித்து மறைந்தருளினார். பின்னர் இவ்வாறு வந்தருளினவன் அவனே என்றுணர்ந்து கொண்ட அருணகிரியார் அரிய தவத்தைச் செய்திருந்தார். பெருமான், அங்ஙனமே ஞானம் கிரியை எனப்படும் தன்னுடைய தேவிமாருடன் மயூரவாகனத்தின்மீது தரிசனம் தந்து சோதிசுடரக் கோயிலுட்புக்கு மறைந்தருளினன்.

பின்னர், பெருமான் மாமுனிவராய அடிகளார்குழாம் புடைசூழ நாதருக்கு தரிசனம் கொடுத்து, ஓங்காரத்தை உபதேசித்து, **சும்மாவிரு சொல்லற** என்றபடி மோனநிட்டையிலே அவரையிருத்திப் பரிபூரண சுவானுபூதிமானாகச் செய்தருளி மறைந்தனன்.

திருஞானசம்பந்தர் முதலிய பெரியார், நோய்தீர்த்தல் முதலிய பல அற்புதங்களைச் செய்து ஐம்முகச்சிவபெருமானுடைய அருட்பாட்டினையும் விளக்கியருளியவாறு அருட்பெருங்கடலாய அறுமுகச்சிவனாரது பெருந்தகையை விளக்க எழுந்த ஆசிரியர் அருணகிரிநாத முனீந்திரரும், குருடு குட்டம் முதலிய நோய்களை நீக்குதலாதி பல அற்புதங்களைச் செய்து, அவன் ஒருவனையே வழிபட்டு வீடு பேறு உய்வது திண்ணம் என்பதையும் நாட்டுவாராயினார்.

ஆசிரியர் அருணகிரியாருக்குப் பெருமான் வயலூரில் தரிசனம் தந்தும் அவரை விராலி மலைக்கு அழைத்ததும் கொடுங்குன்றம், சிதம்பரம் முதலிய திருப்பதிகளில் முருகப்பெருமானே நிருத்த தரிசனம் காட்டியருளியதும், வேறு பலவும் உடையானுக்கும் உடைப்பொருட்குமுள்ள தொடர்பினை விளக்குவனவாயுள.

வில்லிபுத்தூராழ்வார் என்னுமொரு வைணவர் திருவண்ணாமலைத் தலத்தையெய்தி, அருணகிரிநாதர் சந்தம் பாடுதலில் வல்லார் என்று ஓர்ந்து, ஆண்டு சிவபக்தி, சிவனடியார் பக்தியால் இன்னல் ஒழிய இனிது வைகியிருந்த பிரபுடதேல மகாராஜாவினது விருப்பத்தின்படி அந்நாதரோடு வாதிழைக்கும் அவ்வாழ்வாருடன் நாதர் கந்தரந்தாதி பாடிவர ஆழ்வார் பொருள் கூறிக்கொண்டு வந்து தகரவிகற்பயமகச் செய்யுள் ஒன்றற்குப் பொருள் கூறாது மயங்கித் தோல்வித்தானம் அடைந்து, தம்முன்னம் தோற்றார் செவிகளைத் தம் வாளால் அரிந்து வந்தவாறு தம்முடைய செவிகளையும் அங்ஙனம் அரிந்து கொள்ளலாம் என்று அவ்வாளை எதிரில் வைத்துக் கூறினார். அது கண்ணுற்ற நாதர், இனி ஒருவர் காதையும் அரிவதில்லை எனும் வாக்கு எமக்கு நல்குக; காதுகளோடு செல்குக, என்று கருணை மொழி மொழிந்து கர்ணதானம் செய்து நின்றார்.

ஆழ்வார் ஆங்குற்ற தமது இருக்கையினை அடைதலும், திருவண்ணாமலைச் சிவாலய கோபுரம் தமது கண்ணிற்குப் புலப்படுவதாயிற்று; உடனே அது தெரியா திருக்கத்திரையிடும்படி செய்தனர். அஃதுணர்ந்த அருணகிரிநாதனார், அக்கண் மறைகவென்றலும், ஆழ்வார் பார்வையிழந்து வருந்தி மீட்டும் அவரை தரிசித்துக் காது கொடுத்தவாறு கண்ணும் கொடுக்க வேண்டும் என்று பணிந்தார்.

அருணகிரியார், அருணைநாதனைப் புகழ்ந்து பாடும்போது கண்கள் பெறலாம் என்றபடி ஆழ்வாரும் சிவனைப் புகழ்தல் பொருந்தத்தாம் பாடிவரு பாரதத்தில்,

"ஓரேனந்தனைத்தேட வொளித்தருளு மிருபாதத்தொருவன்", என்ற தொடக்கத்துச் செய்யுள் பாடும்போது இழந்த பார்வை மீண்டும் பெற்றனர்.

பின்றை அவ்வண்ணாமலைப் பதியின் கண்ணே, பொறாமைப்பேய் பிடித்தவனும், மந்திர மூலமாகச் சத்தி உபாசனை சித்தித்தவனுமான சம்பந்தாண்டான் என்னும் ஒரு சமணன், முருகப்பெருமானுடைய திருவருட்பிரகாசம் நிரம்பியிருக்கின்ற அருணகிரிநாதப் பெருந்தகைக்கு இன்னல் பல விளைவிக்க எண்ணினான். உடனே அவன் அந்தப் பிரபுடதேவ மஹாராஜர்பால் சென்று,

''யான் தேவியை நேரே அழைத்து நுமக்கு தெரிசனம் தரச் செய்வல், என்றும் அங்ஙனமே முருகவேளையும் அழைக்கும்படி அருணகிரிநாதரைக் கேட்கவேண்டும்.''

என்றுங் கூறி இராஜாவைத் தூண்டி நிற்போனாயினான். பின்னே அவன், யான் தேவியை அழைக்கத் தவறுவனேல், இந்நகருள் யான் பிரவேசியாது நீங்குவது உண்மையென்றுங் கூறி நின்றனன்.

இவ்வாற்றானே அவனுடைய தீயகுணங்களையும் அருணகிரியாரது பேராற்றலையுமறிந்த இராஜா, இவனை ஒழிக்குந் தருணம் இதுவே என எண்ணினவராய்ச் சமணன் கருத்தை ஆசிரியர் அருணகிரிநாதர்க்கு அறிவித்து, ஒரு பெருஞ்சபையும் கூட்டினார். ஆண்டு சம்பந்தாண்டான் உரையின்படி தேவிதெரிசனம் கொடாமையினால் அவன் தோல்வியுற்றான்.

அஞ்ஞான்று அருணகிரியாரின் அண்புவலைப்பட்ட செவ்வேள், ஒரு கல் கம்பத்திடை மயில் மீது தரிசனம் தந்தருளினன். இச்செய்தி அப்பொழுது பாடப்பட்ட, ''அதலடேசனாராட'' என்ற தொடக்கத் திருப்புகழில், ''மயிலுமாடி நீயாடி வரவேணும், உதயதாம மார்பாட பிரபுடதேவமாராசனுளமுமாட வாழ்தேவர் பெருமாளே.'' எனவரும் தொடர்களைக் கொண்டு அறியலாம்.

அருணையம்பதி ஆலயத்தில் கம்பத்திளையனார் எனத் திருக்கோயில் கொண்டிருக்கின்றவன் அத்தரிசனமூர்த்தியே என்க.

இறைவன் தெரிசனம் தந்தவுடன், அருணகிரியார் அவ்வொளிமிக்க தெரிசனத்தை ஒரு கண்ணால் காணுமாறு இராஜாவுக்கு அறிவித்தும், அவர் தமது இரண்டு கண்களாலும் நோக்கினார். உடனே அவ்விரு விழிகளும் நோக்கின்றி மாழ்கின. அருணகிரியார் விபூதி பிரசாதித்துப் பார்வை உண்டாகுமாறு செய்தனர். இராஜாவும் முருகவேளுக்கு அடிமையாயினர்.

பின்பு சம்பந்தாண்டான், அரசர்பால் கூறியவாறு திருவண்ணாமலையை நீத்துப் பிறிதோரிடம்புக்கிருந்தனன். பெயர்த்தும் அவன் வருந்தி இராஜாவை நட்பு செய்து கொண்டு அருணையம்பதியை அடைந்தனன். அடைந்த அவன் விண்ணுலகத்துக் கற்பகமலரை அருணகிரியாரைக் கொண்டு தருவித்துக் கண்ணுறலாம் என்று அரசருக்கு யோசனை சொல்லினன்.

அது செவிகொண்ட வேந்தரும், அருணகிரிநாதரைத் தெரிசித்து நிகழ்ச்சியை விண்ணப்பித்துக் கொள்ள, நாதரும் அது தருவல் என்று உறுதியுரைத்தார்.

பின்பு இம்மண்ணுலகிலிருந்து விண்ணுலகிற்கு இம்மானுட உடலோடு செல்லல் கூடாது என்பதை முன்னிட்டுத் தாமே ஒரு கிளி உருவத்தைக் கொண்டு விசும்பில் தாவிப் பறந்து, அவ்வுலகடைந்து ஒரு கல்லையில் சில கற்பக மலர்களையிட்டு வாயில் கௌவிக் கொணர்ந்து, மலர் மணம் நகர் முழுதுங் கமழ அரசர்க்களித்து, அவ்வுருவத்தை மாற்றித் தமது பழைய உருவத்தைக் காட்டி நின்றனர். இஃது அவருக்கு ஒரு விளையாட்டாயிருந்தது. அவர், தம் உடலைக் கோபுரத்தின் மீது விடுத்துக் கிளி உடலுள் புகுந்து சென்றார் என்பதும், அவ்வாறு விடுத்த உடலும் சம்பந்தாண்டானுடைய தூண்டுதலால் எரிக்கப்பட்டது என்பதும், சுவாமிகளுடைய அருள் தகைமைக்கும் ஆற்றலுக்கும் முரண்படுவனவாகவுள.

அந்நாதர், குகப்பிரமத்தினது அருளால் சருவஞ்ஞத்துவம், சுவம்பிரகாசத்துவம் முதலிய கலியாண குணங்களையடைந்த பெருந்தகையினர் என்பதுவே உண்மை. அவர் இழிதகையுடை வாயு கும்பக யோகத்தைக் கண்டித்து ஒதுக்கியவர். அவர் அந்த யோகத்தால் செய்யவல்ல பரகாயப் பிரவேசம் செய்யத் துணியார் என்னும் நிச்சயத்தாலும், ஸ்ரீமத்ஸ்காந்தமகாபுராணம் எனும் முதல்வன் புராணத்துச் சம்பவ காண்டத்து 41-ம் அத்தியாயத்தில்,

''உலகில் எம்மைச் சரணடைந்தோர்க்கு அச்சம் யாது? இச்சகத்தே எம்மடியார்க்குப் பகைஞர் யாவர்? பிணியுமுண்டோ? மனிதப் பதடியாயுள்ள ஒருவன் அறிவீனத்தால் எம்மடியாரைப் பகைப்பானாயின், அவன் எம்மையே பகைத்தவனாவான். எமக்கு அபராதம் செய்தானது செய்கையை யாம் மன்னிப்போம். அந்தத் துராத்துமாவின் செய்கையை ஒருபோதும் மன்னியோம். இந்திரனால் ஆதரிக்கப்படினும் அவனைக் கண்டனம் செய்து விடுவோம்.''

என வரு கட்டுரைகள் கந்தப்பிரானுடைய திருவாக்காய் இருத்தலின், அப்பிரான் தம் மெய்யடியவன் உடம்பிற்குப் பகைஞன் அழிவுபுரியப் பார்த்திரான் என்பதினால் முரண்படுவனவாகவுளவென்றும், இம்முடிவு பெரிதும் கொளக் கிடக்கின்றது.

சொற்சுவை, பொருட்சுவை, யாப்புச்சுவை, அணிச்சுவைகளோடு சந்தம் பல் செறிந்து விளங்கா நின்ற திருப்புகழும், சீர்பாத வகுப்பு முதலிய பல வகுப்புகளைக் கொண்ட திருவகுப்பும், கந்தரந்தாதியும், கந்தரலங்காரமுமாகிய இவற்றைப் பாடியருளிய இவ்வருணகிரிநாதனார் இறுதியாகத் தமது பிரமானுபவத்தைக் கந்தரனுபூதி என்னும் நூலால் நன்கு பிரகாசப்படுத்தியருளினார்.

இந்நூல், ''ஆடும்பரிவேல்'' என்று தொடங்கப்பட்டு, ''பேசாவனுபூதி பிறந்ததுவே'' என முடித்தமையின், 43 பாடல்களையே உட்கொண்டது. இத்திற நூலனைத்தும் உலகினர் பெரிதும் பேணிக்கொள்ளத்தக்கத் திருநெறித் தமிழ்வேதமாயுள்ளன.

திருப்புகழ் பாடல்கள் பதினாறாயிரம் எனப்படும். அவை ஒரு புத்தகமாக இல்லாத காரணம், முன்மொழிந்தபடி நாதானார் அருணைக் கோபுரத்தில் நின்றபடியே அப்புத்தக ஏடுபலவும் பூமியில் சிதறிவீழுமாறு உருவிவிட்டனர் என்பதை வலியுறுத்துவதாம். அவைகள் பல்லோர் வயப்பட்டுப் பலப்பலவாய் பல்லிடம் போயின வென்க.

மயில் விருத்தம் என்பதொன்று சம்பந்தாண்டான் வாத காலத்திலே இத்திருப்புகழ் முனிவரால் பாடப்பட்ட ஒரு பிரபந்தம் எனப்படுகின்றது.

பின்பு கந்தரனுபூதி இறுதி மொழிகளின்படி மோன நிட்டையிலிருந்த ஆசிரியர் அருணகிரிநாத முனீந்திரர், ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகளைப் போல சிதாகாசப் பெருவெளியிலே மறைந்தருளினார்.

(நாதனார் சரித்திரச் சுருக்கம் முற்றிற்று.)

மேற்சொன்ன விவரமனைத்தும் அருளிச்செய்தவர், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் என அடியவர்களால் போற்றப்படும் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார்.

இதன் காலம் கி.பி.1918-க்குச் சரியான காளயுத்தி வருடம், ஆனி மாதம் 11-ம் நாள், 24.6.1918.

இடம்: சென்னை புதுப்பாக்கமெனும் குமாரபுரத்துச் சிவசுப்பிரமணிய பக்த ஜன சபா மண்டபம்.

8. பாம்பனார் புகழ்ந்த அருணகிரிநாதர்

15-ம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் தோன்றிய ஸ்ரீமத் அருணகிரிநாதர், செவ்வேட்பரமனைப் பாடவந்த பணியை நிறைவு செய்து சிதாகாசப் பெருவெளியில் மறைந்தருளினார். 19-ம் நூற்றாண்டில் இராமேஸ்வரத்தில் தோன்றிய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் **"அப்பாவு"** எனும் பெயருடன் பாம்பன் பதியில் வளர்ந்து ஒருநாள் தமது தந்தைக்குச் சொந்தமான தென்னந்தோப்பைப் பார்வையிடச் சென்றார். கீழ்த்திசையில் அருணோதயங் கண்டார். அருணகிரிக்கருளிய தமிழ்போல் கருணையால் எனக்குக் கடாக்ஷம் அருள்வாய் என அருமறை புகழ்ந்த திருமுருகனை வேண்டி நின்றார்.

இறைவா, நின்னையே பல பாக்களாலும் பாடக்கடவேன். அருணகிரிநாதர் பெயரைப் பதித்துப் பிரபந்தங்களை நிறைவு செய்யக் கடவேன் என வேண்டி நின்றதும், அவர் உள்ளே தோன்றிய ''கங்கையைச் சடையில் பரித்து,'' என்ற சொற்றொடர் தொடக்கமாக ஒரு ஆசிரிய விருத்தப் பாடலை இயற்றி, அதைத் தம் வசமிருந்த எழுத்தாணியைக் கொண்டு பனை ஓலையில் வரைந்து இறைதிருமுன் ஓதுவதுபோல ஒரு முறை படித்து முடித்தார்.

ஸ்ரீமத் அருணகிரிநாதரை ஞானகுருவாக ஏற்றுக்கொண்ட ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளுக்கு நாதனாரின் இறையாண்மையை உணர்த்தியவர் யார் என யாருமறிகிலர். அவரின் இதயத்தில் குகேசனும், நாதரும், எள்ளுக்குள் எண்ணெய் போல, பாலில் நெய்போல, மணலுக்குள் நீர் போல, பூவில் மணம் போல விளங்கியிருந்தார் போலும்!

500 ஆண்டுகள் இடைவெளியேற்பட்ட நிலையில், மாந்தர் பலர் மறந்து விட்ட சுத்த அத்துவிதபோதகராய் விளங்கிய ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளை வாயார வாழ்த்திய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்வோம்.

தக்கோரைப் புகழ்வதும், ஒருவகைத்தவம் என நினைவோம். அவ்வாறான தவமும் ஒரே நாளில் பலனளிப்பதில்லை.

பண்டை நல்லூழ் கூட்டவும், நிகழ்பிறவியின் நெறியான வாழ்வு உதவவும், சிலர் சிலவகை இறையனுபவங்களைப் பெறக்கூடும். தவப்பயன் அத்துடன் நிறைவு ஆவதில்லை. மேலும் மேலும் இயற்றும் தவமே மேன்மையையருளும். வாழ்நாள் எல்லைவரை தவம்புரிவது சிறப்பு நல்கும்.

ஸ்ரீமத் அருணகிரிநாதருக்கு ஒரே நாளில் இறைகிருபை பூரணமாகக் கிடைக்கவில்லை. தமக்குற்ற தொழுநோயின் வேதனையினின்றும் நீங்க, முருகன் கிருபையை நினைந்து, அவரைத் தஞ்சமடைந்து ஆறு நாட்கள் இடைவிடாத தவத்தின் பின்னர் **''முத்தைத்தரு''** என்ற அடி ஆரம்பம் அருளப் பெற்றார். பாடல்கள் பாடப்பாட உடற்பிணி நீங்கிற்று. தேகப் பொலிவு உண்டாயிற்று.

மேலும் மேலும் இறை புகழ் பாடினார்; இறை காட்சிக்கு ஏங்கினார். காட்சி கிடைக்காததால் வருந்தி, கோபுரத்தின் மீதிருந்து கீழே குதித்தார்; காப்பாற்றிய கந்தப்பரமனின் ''மேலும் தவஞ்செய்,'' என்ற கட்டளையையும், செபமாலையும் சடக்கர மனுவும் வழங்கப் பெற்றார். தவம் தொடர்ந்தது.

ஒருநாள் தேவியர் இருவரும் உடன் விளங்கப்பரமர் நாதனார்க்குக் காட்சி நல்கி மறைந்தருளினார்.

மற்றொரு நாள் இறைவர், அடியவர் குழாம் சூழ நாதனாரின் முன் தோன்றி பிரணவ உபதேசம் புரிந்து, ''சும்மாவிரு சொல்லற,'' என உணர்த்தி மோன நிலையில் நிறுத்தி, நாதனாரைப் பரிபூரண சுவானுபூதிமானாகச் செய்தருளி மறைந்தார்.

இடைவிடாத தவத்தின் மாண்பு பற்றி ஓரளவு தெளிந்தோம். ஸ்ரீமத் பாம்பன் சுவாமிள், தாம் பாடிய 6666 பாடல்கள் விளங்கும் ஆறு மண்டல நூல்களில் 400க்கும் அதிகமான பதிகங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஸ்ரீமத் அருணகிரிநாதரின் திருப்பெயரை பதித்துப் பாடி மகிழ்ந்தார். அவ்வாறு பாடிய பாடல்கள் முழு வடிவுடன் இந்நூல் இரண்டாம் பாகம் என வெளியிடப்படுகிறது.

அவ்வாறு பாடப் பெற்ற பாடல்கள்:

பாடல்கள்:

1. அருவமொரு நான்காகி யுருவமொரு
நான்காகி யறையி ரண்டும்
மருவியுள வுருவருவ மொன்றாகி
முத்திறமும் வழுத்த வொண்ணாப்
பெருவெளிக்கு மப்பாலா யுள்ளபொரு
ளீதெனவே பெரிதுஞ் சேயோன்
ஒருவனையே புகழந்தவரு **ளருணகிரி**
சேவடிப்போ துளத்துள் வைப்பாம்.

(தகராலய ரகசியம்) (மூன்றாம் மண்டலம்)

2. இந்திரன் முனிவர்க ளேத்துபொற் சரணான்
செந்திரு நகரிடஞ் சேர்ந்ததில் வாழ
அந்**திருப் புகழ்பா டினவருக்** கபயம்
தந்ததைத் தருவது சரவண பவவே.

(இரண்டாம் மண்டல முதற்கண்டம்)

3. உம்பரும் புகழ்**வகுப்பு ரைத்தவன்** றொடுத்த சீர்ப்
பம்புமாலையைத் தினந்தினம் புனைங்க பாவகீ
எம்பிரா னெனக்கருள் நிற்கும் ஏரகச் சுரேசனே
சம்புவென் றடுத்த வென்றனைப் புணர்ந்து கொள்வையே.

(இரண்டாம் மண்டல முதற்கண்டம்)

4. **திருப்புகழ் நாவலன்** திருப்புக ழணிக்கு
விருப்புடை வேலுடையா யுனை மறவாக்
கருத்துளர் பிறிதொரு கருப்புகு வாரோ
உருக்கிய வுடம்புட னுனையடை யாதே.

(இரண்டாம் மண்டல முதற்கண்டம்)

5. குற்றம் யாவும் பொறுத்தருள் கூர்தியால்
அ**ற்ற மற்றலங் காரம திர்த்துளோன்**
முற்றும் வாழ்த்திய மூர்த்திநல் லாலவாய்
உற்ற வொப்பி லருட்குகப் பிரமமே.

(இரண்டாம் மண்டல முதற்கண்டம்)

6. ஆரெப்படி முனினும்மது போலத்திரு வருள்கூர்
நாரப்பெரு மானாயழ னாகப்பெய ரானாள்
தாரப்பொருள் வேலற்பணி தகைமைக்குண வீர
தீரப்பெய ரோணைப்புகழ் தெருளர்க்கிலை சிறுகே.

(நான்காம் மண்டலம்)

7. கற்ற தாற்பய னென்பரன் காறொழாப்
பற்ற ரென்றொரு வன்சொன் பண்டுரை
அற்ற மன்றது போற்கலை யாளரும்
பற்று வார்புக ழத்தன் பதத்தையே.

(ஐந்தாம் மண்டலம்)

8. ஆகமத்தின தந்தமிச் சைவ சித்தாந்த
சாகரஞ்சிவ ஞானபோதாதி களதுவே
ஆகுமென்றறி வாயருணைப் பெயரடிகள்
வாகுயர்ந்திட வாழ்த்தொரு வனைநினை கருத்தே.

(ஐந்தாம் மண்டலம்)

9. பசியினு மிகுந்தவாதை யிலதெனும் பான்மை தேர்ந்தார்
பிசியறு மயில்வே டொண்டர்ப் பேணுவாருணவே யூட்டி
நிசிதபு புகழாம் வேத நிகழ்த்திய முனிவ னேத்தும்
உசிதவ ளாகத்தான் பங்கன துணமுவப்ப வாழ்வார்.

(ஆறாம் மண்டலம்)

இவ்வாறு, ஸ்ரீமத் அருணகிரிநாதனாரின் திருப்பெயர் விளங்கும் பாடல்கள் நானூறுக்கும் அதிகமாக, ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்துள்ள ஆறு மண்டல நூல்களில் உள்ள பாடல்களை மண்டல வரிசையில் இந்நூல் இரண்டாம் பாகத்தில் காணலாம்.

தவராஜ சிங்கம், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் அருள்ஞான வாழ்வு, அவர்களின் சித்தாந்தம் மற்றும் போதனைகள் அனைத்தும் குகேசன் கட்டளை என்று ஏற்றுக் கொள்வோம்.

9. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் வாழ்க்கைக் குறிப்பு

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் இராமேஸ்வரத்தில் கி.பி.1848ல் ஒரு சுக்கிரவாரம் சூரியோதய வேளையில் உதித்தார். பாம்பன் பதியில் **'அப்பாவு'** என்னும் பெயருடன் வளர்ந்து உள்ளூர் கிறிஸ்தவப் பள்ளியில் கல்வி கற்றார். வித்துவான் முனியாண்டிப் பிள்ளையிடம் தமிழ் பயின்றார். முருகன் ஒருவனையே முழு முதற் பரம் எனத் தேர்ந்து, ஸ்ரீ அருணகிரிநாதரை ஞானகுருவாக மானசீகமாக ஏற்றார். அதியிளமையில் கவிபாடும் ஆற்றல் செவ்வேளின் கிருபையால் வாய்க்கப் பெற்றார்.

சுவாமிகள் அருளிய நூறு பாடல்களைக் கண்ணுற்ற பெருமாள் கோயில் அர்ச்சகரும், சுவாமிகளின் குடும்ப நண்பருமான சேது மாதவ ஐயர் அவர்களால் திருவாறெழுத்தை உபதேசிக்கப் பெற்றார். வேறு மந்திரங்களை ஓத வேண்டாம், வடமொழி கற்க வேண்டாம் என்ற ஐயர் கட்டளையை ஏற்றார்.

சேஷகிரிராயர் என்னும் பிராமணோத்தமர், சுவாமிகளுக்கு **''குமரகுருதாசர்''** எனப்பெயர் சூட்டி மகிழ்ந்தார். பாம்பன் பதியில் இனிய இல்லறம் நடாத்தியதனால் அன்பர்கள், சுவாமிகளைப் **பாம்பன் சுவாமி** எனப் போற்றினர்.

முக்கட்பரமனுக்கு உபதேசம் செய்த மூல முதல்வனுக்கு முந்து தமிழ்ப்பாமாலைகள் புனைந்து, தல யாத்திரை புரிந்து, நின்மலச் செஞ்சோதி வடிவுடைய நிமலனை அனவரதமும் சிந்தித்த வண்ணமிருந்தும் அடியவர்களுக்கு அவன் கிருபையை எடுத்தியம்பியும், அன்பர்களுக்கு இயன்ற உதவி புரிந்தும் இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தார்.

உப்பு, புளி, காரம் நீக்கிய பச்சைப்பயிறு கலந்த பச்சரிசிச் சோறு மட்டும், ஏக கால மதிய உணவாக உண்டு வாழ்ந்த சுவாமிகள், மற்போர், சிலம்பாட்டம், நீர் நீந்துதல் போன்ற ஆண்மையாட்டங்களில் வல்லவராகத் திகழ்ந்தார்.

கி.பி.1891க்குச் சரியான கர வருடத்து ஆடி மாதத்தொருநாள் சுவாமிகள் பழநிக்குச் செல்ல ஆயத்தமானார்; அது கண்ட அவரது நண்பர், பழநிக்குச் செல்ல இறை கட்டளையோ என்ற வினாவுக்கு, ஆம் எனச் சிரமசைத்தார். அன்று மாலைப்போது, வீட்டு மேல்மாடியில் நின்று, தாம் அதுவரை இயற்றிய **''அமரர்கோ முதல் அமிர்தமதி''** என்னும் பதிகப் பாடல்களை இறை திருமுன் ஓதுவதுபோல ஒருமுறை படித்து முடித்து, இறைவா, நான் நாளைப் பழநிப்பதிக்கு ஏகவுள்ளேன்; என்துதியை ஏற்றருள்க, எனக் கூறியவுடன், வேற்பெருமான் மானிடவடிவுடன் சுவாமிகளின் முன் தோன்றி, ''பழநிக்கு வரும்படி யாம் கட்டளையிட்டதாக ஏன் பொய் புகன்றனை; இனி பொய் புகலேல்; எம் கட்டளை வரும்வரை பழநிக்கு நீ வர வொண்ணாது; வருவதில்லை எனக்கூறு,'' என அச்சுறுத்தி மறைந்தருளிய சம்பவங்களைத் தாம் அருளிய, ''செந்தமிழை செவிமடுத்து மகிழும் தேவை,'' என்ற தொடக்கப் பாடலாலும், ''பொய் சொலேல் இனிப் பொய் சொலேல்'', என்ற சொற்றொடர் பாடலாலும் நன்குணரலாம்.

சுவாமிகள், இல்லறம் நடத்திய காலங்களில், வமன பேதியால் மூன்றுநாள் வருந்தினார். எவ்வித மருத்துவ உதவியும் பயனளிக்கவில்லை. மூன்றாம் நாள் இரவு தன் வீட்டுக்கு வந்தார். மரணம் வாய்த்ததோ என்ற நிலையில் தரையில் வீழ்ந்து விட்டார். சுவாமிகளின் மனைவி, திருமதி காளிமுத்து அம்மையார் அதுகண்டு அழுது புலம்பி அறற்றி அவரும் மயங்கி வீழ்ந்த நிலையில், பூட்டியிருந்த வீட்டினுள் அந்நள்ளிரவில் ஆங்கே முனிவர் வடிவில் குமரவேள் தோன்றி, அம்மையாரைக் கைப்பிரம்பால் தட்டி எழுப்பி, ''அவன் மரணமாகவில்லை'' என்று கூறினார்.

''மாடத்திலுள்ள திருநீறு எடுத்து அவன் மேனியில் பூசி, அவன் செவியில், உன்னை விட்டு நீங்கினேனில்லை என நான் கூறியதாகக் கூறு; அவன் விழித்தெழுவான்,'' என்று கூறியவாறு அம்மையார் செய்யவும், துயில் நீத்தெழுபவர்போல சுவாமிகள் விழித்தெழுமுன் முனிவர் வடிவில் வந்த பிரான் மறைந்தார். இவ்வாறு, சுவாமிகளின் உள்ளும் புறமும் எஞ்ஞான்றும் விளங்கிய இளம்பூரணன், சுவாமிகள் வாயிலாக நிகழ்த்திய அருளாடல்கள் பல.

தலயாத்திரையின்போது, காஞ்சிபுரம் போந்து, தெய்வதெரிசனம் செய்து, ஜவுளிக்கடை சத்திரத்தில் தங்கி, ஊருக்குப் புறப்பட

யத்தனிக்கும் போது, வெள்ளை முண்டாசும் அங்கியுமணிந்த அழகர் ஒருவர், சுவாமி முன்பாகத் தோன்றி, குமரகோட்டம் தரிசித்த துண்டோ என வினவினார். அதுயாண்டுளது என்ற சுவாமிகளை அழைத்துச் சென்று, ''இதுவே குமரகோட்டம்; வணங்குதி,'' எனக் கூறி மறைந்த விவரம் சுவாமிகள் அருளிய பாடல்களில் காணலாம்.

கி.பி.1893க்கு முன் சுவாமிகள் உரைநடையில் 32 வியாச நூல்கள் இயற்றினார். அவைகளுள் சீவயாதனா வியாசம் என்ற நூல் பின்னாளில் 235 பாடல்களாக அமைத்து நான்காம் மண்டல நூல்களுடன் சேர்த்தார்.

சீவனைச் சாகும்படி அடித்தல், துக்கப்படும்படி கீறுதல், அறுத்தல், கயிற்றால் இறுகக் கட்டுதல் எனும் பலவகைச் செயல்கள் எல்லாம் சீவயாதனையே என்றும், கொல்லாமையே பெருந்தவமும் தருமமுமாம் எனச் சுவாமிகள் கூறியுள்ளார்.

செந்துக்களை இமிசை செய்ய விதிப்பவன், அவைகளை இமிசை செய்பவன், இறைச்சியை அறுத்தெடுப்பவன், அவைகளை விற்பவன், வாங்குபவன், இறைச்சியை நெருப்பில் பதம் பண்ணுபவன், பதஞ்செய்ததை பந்தியில் படைப்பவன், அவ்வாறு படைக்கப்பட்ட ஊனை உண்பவன் ஆகியோர் அனைவரும் **பாதகர்கள்** என மேற்சொன்ன நூலில் சுவாமிகள் கூறியுள்ளார்.

கி.பி.1894ல் பிரப்பன் வலசைப் பதியில் முப்பத்தைந்து நாட்கள் சுவாமிகள் தவமியற்றினார். தவம் மேற்கொண்ட ஏழாம் நாள், முண்டதமில் சிறு சிகையுடன் கௌபீன தாரியாய், குழந்தை வடிவ குமாரபிரான், அருணகிரிநாதர், அகத்திய முனிவர் உடன் விளங்கக் காட்சி நல்கி உபதேசமும் அருளப் பெற்றார். தமது தவத்தை இறைவன் கட்டளைப்படி சுவாமிகள் நிறைவு செய்தநாள் சித்திரை மாதத்து நிறைமதி நாள்.

''மாடாடுகள் பல்கும் திருவளமேவுபிரப்பை'', ''எத்தனையோ தலம் சுற்றி வந்தேன்'', ''மாணிப்பிரப்பன்வலசை'' என்பன போன்ற சொற்றொடர்கள் தொடக்கப் பாடல்களிலும், சுவாமிகள் சரித்திரத்திலும், சுவாமிகள் மனத்தையும் பிராணவாயுவையும் எவ்வாறு அடக்கித் தவமியற்றினார் என்ற விளக்கம் கூறக் காணலாம்.

கி.பி.1895ல் துறவு ஏற்று சென்னை வந்தடைந்தார். பின்னர் சிதம்பரம் சென்று ஸ்ரீ நடராஜர் தெரிசனம் செய்து, பின்னத்தூர், வரகூர் போன்ற சிற்றூர்களில் வதிந்து தமது தவ வாழ்வைத் தொடர்ந்தார். திருவருட்சகாயத்தினைக் கொண்டு, சுவாமிகள் நூல்கள் பல இயற்றினார். அவைகளுள் 117 பாடல்கள் விளங்கும் தகராலய ரகசியம் எனும் அநுபூதி நூல் இயற்றிய காலம் கி.பி.1896. 'சதானந்த சாகரம்' என்ற பெயரில் 150 பனுவல்களை ஆதாரம் காட்டி விளக்க உரையுடன் அந்நூலை சுவாமிகள் கி.பி.1916ல் வெளியிட்டார்.

தகராலய ரகசியம் எனும் நூலில் ஸ்ரீமத் அருணகிரிநாதர் துதிப்பாடலாக அமைந்துள்ள, ''அருவமொரு நான்காகி'' எனத் தொடங்கும் பாடலின் பொருள் காணவேண்டியதே. அது வருமாறு:

''சிவம், சத்தி, விந்து, நாதம் ஆகிய நான்கும் அருவம்; பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன் ஆகிய நான்கும் உருவம்; சதாசிவம் அருவுருவம்.

இவ்வொன்பது நிலைகளையும் உடையவன் முருகன் என உணர்வார்க்கு, அக்குகேசன் ஏகனாயிருந்து இனிது அருள்புரிவான். அவ்வொருவனையே புகழ்ந்த அருள் நிறை அருணகிரி சேவடிகளை உனத்துள் பதித்து வாழ்வாம்'' என்றவாறு.

வைணவர்களால் சுவாமிகளுக்குற்ற கேடுகள் பல. மற்றும் சிவநிந்தை, சிவனடியார் நிந்தை, சிவசாஸ்திர நிந்தை கண்டு, சுவாமிகள் இயற்றிய சைவ சமய சரபம் மற்றும் நாலாயிர பிரபந்த விசாரம் எனும் உரைநடை நூல்களும் வெளிவந்துள்ளன. மேலும் பல்வேறு நீதிமன்றங்களில் வாதம் புரிந்து, சைவத்திற்கு வெற்றி பெற்றுத் தந்த தாசரை நாளும் நினைவோம்.

''சைவர் என்பவர் முத்திவேட்கையுடையவர்,'' மெய்ம்மை, ஈகை, தயை, கொல்லாமை, பொறுமை, சீலம் ஆகியவை பொருந்தியவர் பிராமணர் என சுவாமிகள் கூறியுள்ளார். சாதியை வெறுத்த சுவாமிகள் பிற மதகுருமார்களை மதித்து வணங்குவது இகழ்வன்று எனக் கூறியுள்ளார். தல யாத்திரையில் தாம் கண்டு தெரிசித்த மூர்த்திகளைத் தம் வழிபடு கடவுளான குகப்பிரமமாக பாவித்து வணங்கி ஏகதெய்வ வழிபாட்டு நெறியைப் போதித்து, தாமும் அவ்வாறே ஒழுகி வாழ்ந்தார்.

கி.பி.1891ல் தாம் இயற்றிய பரிபூஜன பஞ்சாமிர்தவண்ணம் எனும் ஐந்து பாடல்களை திருச்செந்தூர் கவுண்டர் மண்டபத்தில் கி.பி.1919க்குச் சரியான சித்தார்த்தி வருடம் சித்திரை மாதம், இரண்டு அந்தண சீலர்கள் சில நாட்களாகத் தொடர்ந்து பாராயணம் செய்து வந்தனர். ஒருநாள் அம்மண்டபத்தில் நிகழ்த்தப்பட்டு வந்த பாராயணத்தை சிறுபிராயச் செம்மேனியுடைய ஒருவன் மறைவாக நின்று கேட்டதை முத்தம்மை எனும் பெயரினள் கண்டனள்; உடனே அத்திருவுரு மறைந்தது. மறுநாள் இரவு அம்மூதாட்டியின் இருக்கையை எய்திய செந்திலாதிபதி ஒரு நவயுவனாகத் தோன்றி, அவளை உடன் அழைத்துப் போய் கவுண்டர் மண்டபத்தையும், திருச்செந்தூர் திருக்கோயிலையும் காட்டி, அவை தமது இருப்பிடம் எனக் கூறி, வண்ண பாராயணத்தில் தமது விருப்பை வெளிப்படுத்தி, அவை இயன்றவரை இன்னோசை எழப்பாடப்பட வேண்டும். அப்பாடல்கள் எங்கெங்கு பாடப்படுகின்றனவோ அங்கெல்லாம் வருவேன் எனக்கூறி மறைந்தருளினார். இவ்விவரம், சுவாமிகள் அருளியுள்ள ஆறாம் மண்டல நூல், பெருவேண்டுகோள் பதிகத்தில், ''பரிவாளர்கள் அங்கோதொரு பஞ்சாமிர்த வண்ணம்'' என்ற சொற்றொடர் தொடக்கப் பாடலாலும் சுவலாமிகள் அருளிய பிற நூல்களாலும் அறியலாம்.

இறை பிரீதிக்குற்ற பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணப் பாடல்களில் விளங்கும் விண்ணப்பங்களை இனி காண்போம்.

1. பால்வண்ணம்: ''தனந்த தந்தன தனந்தனா'', என்று தொடங்கும் சந்தத்தில், ''இலங்குநன்கலை,'' எனத் தொடங்கும் பாடல்.

திருமுருகப் பெருமானே, எளியேன் பல் பிணிகளால் வருந்தாமலும் மீண்டும் இம்மண்ணுலகில் பிறக்கும்படியும் செய்யாதே; என்மனம் ஒன்றி, தேவரீரின் திருவடியை நினைந்து உய்யும்படி கிருபை செய்தருள்வாயாக.

2. தயிர்வண்ணம்: ''தனத்தன தந்தன'', என்று தொடங்கும் சந்தத்தில், ''கடித்துணரொன்றிய'' என்ற தொடக்கப் பாடல்.

அமரர் தொழு பாதா, அடியேன் பிறவிக்கடல் கடக்கவும், தேவரீரின் நற்றுணை பலனளிக்கவும், எளியேனுடைய குற்றங்கள்

அனைத்தும் ஒழியவும், நான் பாடவும், நீ ஆடவும், என்முன் எழுந்தருள்வீராக.

3. நெய்வண்ணம்: ''தந்தந்தா தந்தந்தா'', எனத் தொடங்கும் சந்தத்து, ''வஞ்சகஞ்சூது'' என்று தொடங்கும் பாடல்.

முருகோனே, வஞ்சனைசூது உடையவர், மது துய்த்துச் சுழல்பவர், உயிர்களை வதைத்துப் புலால் உண்பவர் போன்ற தீய குணமுடையவரை அணுகி இருக்கும்படி செய்யாமலும், எம்மைக்கை விடாமலும், எனது துன்பங்களை ஒழித்து, பொய் பேசுதல் போன்ற எளியேன் பிழைகளைப் பொறுத்து, தெரிசனம் தந்து, தேவரீரின் திருவடியை அடைய அடியேனுக்குக் கிருபை புரிவீர்களாக.

4. சருக்கரை வண்ணம்: ''தான தந்தன'', எனத் தொடங்கும் சந்தத்தில், ''மாதமுந் தினம் வாரமும்'' என்று தொடங்கும் பாடல்.

ஆறு திருப்பதிகளையும் அமர்விடமாகக் கொண்ட அயிற்கையா, புகழ், சித்தி ஆகியவைகளை அருள்வீர்களாக. எனது புத்தியில் அறிவை விளங்கச் செய்வாயாக. நிறைவான முத்தியின்பத்தைத் தருவாயாக. இவ்வுலகில் பிறந்து செத்திடல் ஆகியவை ஒழிய தேவரீரின் திருவடியை நாளும் தியானிக்க அருள்புரிவீர்களாக.

5. தேன் வண்ணம்: ''தானதன தானான'', என்று தொடங்கும் சந்தத்தில், ''சூலதரனாராட'' என்ற தொடக்கப் பாடல்.

திருவருள் முருகோனே, கலைமகள், அலைமகள் மற்றும் தேவர்கள், நவவீரர், இடும்பன், ஸ்ரீமத் அருணகிரிநாதர் போன்ற ஞான அடியார்களுடன், இப்பாடல்களையருளிய குமரகுருதாசன் என்னும் அடியேனுடனும் சேர்ந்து ஆட, இறைவா, இதுவே தருணம்; இதை எண்ணி எம்முன் எழுந்தருளி எம்மை அடிமை கொள்வீர்களாக, என்றவாறு.

பஞ்சாமிர்த வண்ணப் பாடல்களைப் பாராயணம் செய்பவர்கள் மேற்கண்ட விண்ணப்பங்களைத் தம்முடையதாக இறை திருச்செவிகளுக்கு ஆக்கி, உரிய பயனையடைவார்களாக.

தமிழ் மொழியின் சிறப்பைப் பல பாடல்களில் சுவாமிகள் கூறியுள்ளார். சேந்தன் செந்தமிழ் எனும் நூலில் தமிழ் மொழியின் உயர்வை வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

பெண்களும் வேதம் ஓதலாம்; ஆண்-பெண் இருபாலரும் முத்தி எய்தத்தக்கவர்களே; அறுபத்து மூன்று நாயன்மார்களும், உமாபதி சிவாச்சாரியார், தாயுமானவர், சிதம்பர சுவாமிகள் போன்ற அருளாளர்களும் குகேசனடியார்களே; சிவகுக பேதம் கூற வொண்ணாது; அரனும் அறுமுகனே என்றருளியுள்ளார்.

'திருப்பா' என்னும் ஐந்தாம் மண்டல நூலின் முதல் நாற்பத்தி மூன்று பாடல்களுக்கு சுவாமிகளே விசேட விளக்க உரை அருளியுள்ளார். அவைகளை ஒன்றிய உள்ளமுடன் ஓதுபவர்களின் கருப்பை வாசம் அற்றுவிடும். இது உறுதி.

கி.பி.1894க்கு முன் இயற்றப்பெற்று, சில திருத்தங்கள் செய்து மறுமதிப்பாக கி.பி.1922ல் சுவாமிகளால் வெளியிடப்பட்ட சிவஞானதீபம் என்னும் உரைநடை நூலின் சிறப்பை,

''சிவஞான தீபமிதைப் படித்தோர், கேட்டோர்,
செப்பினவர், சிந்தைதனிற் பதித்தோர்,
மேலாம் தவமான நோன்பெல்லாம் முடித்தோராவர்;
சண்முகவேள் அருளில் இது சாற்றினேனே,''

எனச் சுவாமிகள் பாடியுள்ளார்.

சென்னை தம்புச் செட்டித் தெருவில் நிகழ்ந்த விபத்து, சுவாமிகளின் இடைக்கணைக்கால் எலும்புகள் முறிவு, சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை, சுவாமிகளின் சீடர் சோதிடர் சின்னசாமி பிள்ளையின் சுவாமிகள் அருளிய சண்முக கவச பாராயணம், பதினோறாம் நாள் மேற்றிசை வானவெளியில் இருமயில்களின் திருநடனக்காட்சி, பதினோறாம் எண் படுக்கையில் குழந்தை வடிவ குமாரபகவான் சுவாமிகள் அருகே தவழ்ந்த காட்சி, ''இன்னும் பதினைந்து நாட்களில் குணங் காணலாம்'' என்ற அசரீரிச் செய்தி, தெய்வ வைத்தியம் நிகழ்ந்து பிணி நீக்கம் பெற்றது ஆகிய அனைத்தும் கி.பி.1923ம் ஆண்டின் சம்பவங்கள் ஆகும்.

சுவாமிகளுக்கு அருளப்பெற்ற மயூர நடனக் காட்சியை மயூர வாகன சேவன விழா எனக்கொண்டாடி, சுவாமிகள் அருளிய அசோக சால வாசம் எனும் பெயரில் ஆறாம் மண்டல நூலில் உள்ள எண்பது பாடல்களை ஓதவும், விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடவும்,

நூல்களை வெளியிடவும், தமது கோட்பாடுகளை எடுத்தோதவும் மஹாதேஜோ மண்டலம் எனும் ஒரு சபையை ஏற்படுத்தி கி.பி.1926ல் வில் சாசனமும், கி.பி.1927ல் அநுபந்த சாசனமும் செய்து வைத்தார்.

கி.பி.1929, சுக்கில ஆண்டு, வைகாசி மாதம், தேய்பிறை, சஷ்டி திதி, குருவாரம் அதிகாலை தம்மைச் சூழ்ந்திருந்த அன்பர் அறிய சுவாமிகள் நிஷ்டை கூடித் தமது சுவாசத்தை உள்ளுக்குள் இழுத்து உந்தியில் அடக்கிக் கொண்டார்கள். அந்நிலையிலே அடியவர், சுவாமிகளின் திருமேனிக்கு அபிடேகம் புரிந்து, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் அமர்த்தி, சென்னை நம்புலையர் தெருவிலிருந்து அடியவர் புடைசூழ ஊர்வலமாக, இராயப்பேட்டை அடையாறு வழியே உலாவந்து திருவான்மியூர் வடபால் அமைக்கப்பட்ட சமாதி நிலையத்தில் எழுந்தருளச் செய்த காலம் 31.5.1929 அதிகாலை எனவாம்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்துள்ள செய்யுள் மற்றும் உரைநடை நூல்கள், சேய்ப்பரமன் புகழ் கூறும் தமிழ் மறையாகும். அவைகள், ஞான அனுபவ ரத்னசபா மண்டபமாகக் கருதுவோம். அம்மண்டபத்தின் நுழைவு வாயிலில் நின்று விடாமல், குமாரஸ்தவ பாராயணம், சண்முக கவச பாராயணம் ஆகியவை கடந்து, அப்புனித மண்டபத்தினுள் பிரவேசிப்போம். ஆங்கே ஒளிவீசும் ரத்தினங்களின் தன்மையை அறிவோம். அதனால் நாம் நமது உள்ளொளியைப் பெருக்கிக் கொள்வோம். அந்நிலையில் பெறவுள்ள இறையனுபவங்களையும், தெய்வத் திருவருட்பேறு அனைத்தும் பெற்றுய்வோம்.

‘‘குகேசனையன்றி வேறு தெய்வத்தை யாமறியோம்’’ என்ற கொள்கையுடைய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அப்பரமன்பால் சமர்ப்பித்த நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களில் சிலவற்றை, அவர்கள் அருளிய நூல்களில் ஈடுபாடு கொள்ள அடியவர் ஆர்வத்தைத் தூண்டும் நோக்கத்துடன் இங்கு வழங்கப்பட்டுள்ளன. அவை,

1. பரமனார் வடநிழலில் நால்வர்க்கு உரைத்ததே முத்திமுடிவாம் அருணெறி, அந்த நெறியையே என் சம்மதத்து அறிவுநெறியாய்க் கொள்ள அருளினை. அதுவே இரண்டற்ற அத்துவித நிலையாய்

இரிபற இலங்கு சன்மார்க்க நலனாம். அதனையே எனக்கு அருளல் வேண்டும். **(I-3-3)** (மண்டலம், பதிக எண், பாடல் எண்)

2. பரிபூரணானந்த ஞானப்பிரவாகப் பரப்பாம் உன் அடிநாடி தனியேயிருந்து, இரும்பொத்த என் நெஞ்சமது சலரூபமாய்க் கரைந்து, சடமாய மெய் விதிர் விதிர்க்கக் குழைந்து, கண் தண்ணீர் பெருக்கெடுக்கத் தொனி செய்யும் நாத்தழுதழுக்க, நல்லன்பிலே சொக்கிக் கிடக்க அருளி. **(I-7-8)**

3. இடர் ஈயும் முன்வினைத் தொடர்பால், உனை மறக்கினும், என் இதயத்திருந்து தூண்டி, வெந்தழற் சருகென வினையை உருக்குலையச் செய்து விதேக கைவல்லிய வாழ்வாம் வீடுபெற ஞானபர யோகினில் நிறுத்தல் உன் கடமை. **(I-8-2)**

4. சம்பந்தர் முதல் தாயுமானவர் வரை, சுத்தமுறுவேதாந்த சித்தாந்த சமரச சுபாவமாய முதநெறியார் சொற்ற உயர் வாக்குகளும் என் சம்மதத்திலுள துணிபுக் கியைந்த துணிபே என்னை நீ அத்துணிபில் மாறாது வைத்தருளல் வேண்டும். **(I-8-8)**

5. எழில் மயிலேறும் சரவணபவ சிவ சுகதேவா; எனை ஒருபோதும் பிரிவற, இருளென உறைமலம் யாவும் கெடுகெடு கெடுகெடு; இகலிடர் யாவும் சுடு சுடு சுடு சுடு; கவலைகள் யாவும் பொடிபொடி பொடி பொடி; தொடர் பவம் யாவும் தடு தடு தடு தடு; கமழ் பதம் நாளும் கொடு கொடு கொடு கொடு, திருமுருகோனே. **(I-24-9)**

இவ்வாறான எண்ணிலா விண்ணப்பங்களைக் கொண்ட பாடல்களும், துயர் துடைக்கும் தகைமை வாய்ந்த துதிப்பாடல்களும், செவ்வேட்பரமனின் பரத்துவம் பகரும் பாடல்களும், உலகினர் உய்ய உறுதி உபதேசங்கள் விளங்கும் பாடல்களும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்துள்ள ஆறு மண்டல நூல்களில் அமைந்துள்ளன.

10. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் போதனைகள்

உலகினர் அனைவரும் உய்தி பெற, சுவாமிகள் அருளியுள்ள போதனைகளில் சிலவற்றை இங்கு வழங்கப்பட்டுள்ளன. அவைகளைப் பின்பற்றி வாழ்ந்து உயர்கதியெய்துவோம்.

1. அறிஞரொடு கூடி, உண்மைப் பொருளுணர்ந்து, நியாயம் தெரிந்து, மத தூஷணம் செய்வதொழிந்து, ஞானத்தால் சமாதானமுடையோராய், தத்தம் நிலை பிசகாது, அகமும் புறமும் அசுத்தம் நீத்த நெறியில் நின்றுய்வதும், தெய்வம் இன்று எனக் கூறித்திரியும் நாஸ்திகர்கட்கும் அஃது உண்டு எனும் நியாம் எடுத்து இனிது காட்டி, அவர்களை ஆஸ்திகர்களாக்க முயல்வதும் விவேகிகள் கடமையாகும்.

2. இறை வழிபாட்டில், துதிப்பாடல்களை அதிக சத்தமிட்டேனும் ஆலாபனம் பண்ணியேனும், அந்நியர் செவிக்கு இன்பமாயிருக்க வேண்டும் எனும் கருத்து கொண்டும் பாடவொண்ணாது. விரைவில்லாது இயன்றவரை இன்னோசையுடன் பாடல் நன்று.

3. இறை சன்னிதியில் பெருமூச்செறிய நின்று, மயிர்க்கூச்செறிய, என்பு நெக்குருகத் தேங்கித் திகைத்து, தியானித்துக் கண்ணீர் உகுத்து, இறைவனது திருநாமங்களை அடிக்கடி உருவாக செபிக்கவும்.

4. வேற்பெருமானை இழித்துரையாடும் கதைகளை இயற்றல், அவ்வாறு இயற்றியிருப்பனவற்றை உண்மையெனக் கோடல், அவைகளைக் கேட்டல், படித்தல், உரைத்தல் என்பனவற்றுள் எதையும் செய்யொண்ணாது.

5. கொல்லாமை பெருந்தவமும் தருமமுமாகும். கொலைக்குக் காரணமாக இருந்த உயிரை, அற்ப தேகத்தில் புகவைத்து நல்லறிவைக் கெடுத்து, நோயால் நொறுங்குண்டு, ஹீனரூபமான பிறவி வரும். மற்றும் கொலை செய்யப்பட்ட அப்பிராணியே தன்னைக் கொன்ற பாவியை மறுபிறப்பில் கொல்லும்.

6. இருள் உள்ள இடத்தில் உணவு கொள்ளவொண்ணாது. உணவு உண்ணும்போது தீபம் அவியின், அஃது ஏற்றப்பட்டு வருங்காறும், ஸ்ரீ சடக்கரத்தை மானசீகமாகச் செபித்துக் கொண்டிருந்து, அத்தீபம் கண்ணுற்றவுடன் எஞ்சிய உணவைப் புசிக்கலாம்.

7. நியாயாதிபதியாயுள்ளோன் நியாயம் வழங்காவிடில், அவன் செய்யும் அநியாயத்திற்கு அவன் வேறு தண்டனையை அடைவான்.

தகுந்த ருஜு ஏற்படாமல், தான் செய்த குற்றத்திலிருந்து ஒருவன் விடுதலையாவானேயாகில், அந்த ருஜுவை எவனால் கெடுக்கப்படுகிறதோ, அவனையும் அதற்கு உட்பட்டவனையும் தேவநியாயத்தில் தண்டிக்கப்படும்.

8. உன்னைப் பிறர் வணங்கற்கிடங்கொடாதிரு. பிறர் உனக்குச் செய்யும் வந்தனத்திற்கு நீயும் பிரதி வந்தனஞ் செய்து, அவ்விரண்டினையும் ஈசுவார்ப்பணம் பண்ணியிடல் வேண்டும்.

9. பிறன் மனைவி எத்துணைப் பேரழகியாயினும் அவளை இச்சியாதே. பெண்களைத் தாயாக மதிக்கவும்; பெண்கள் முன்னிலையில் பரிகாச பதங்களை மொழியாதிருப்பாயாக.

10. பிறர் உனக்குச் செய்த தீமையைக் கருதி, அது போன்ற தீமையை நீயும் அவருக்குச் செய்யாதிருப்பாயாக; பிறர் உனக்குச் செய்யும் பிழையைப் பொறுத்துக்கொள்.

11. நமக்குற்ற துன்பம் பிறருக்கும் வரல்வேண்டும் எனும் பொறாமை வேண்டாம். உன்னை இகழ்வார் செயல் பொறுத்தல் சால்பினும் சால்பிற்று. எக்காரணங்கொண்டும் எவரையும் சபிக்கவொண்ணாது.

12. உண்மையை மறைத்துப் பேசுவதே பொய் எனப்படும். பொய் பேசுதலால், நாம் இகபர சாதனமாக ஈட்டிய தவம் அழியும்.

13. பிறர் பொருளை, அவர் அறியாமல் அபகரிப்பது களவு ஆகும். களவு செய்பவன், தனது வருபிறப்பில் வசதியற்ற பெற்றோருக்கு, உதவி செய்ய இயலாத மகவாய்ப் பிறந்து அனந்தமாண்டு வறுமையில் உழல்வான்.

14. புலால் மற்றும் இலாகிரிப் பொருள் ஆகியவை உட்கொள்ளக் கூடாது. அப்பழக்கமுடையவர் எவ்வாறான பாண்டித்யம் பெற்றவராயினும் அவர் முத்தியெய்த மாட்டார்.

15. புறங்கூறலும், பொறாமையும், வஞ்சகமும், கபடமும், நஞ்சினுங் கொடுமையவாகலின், அவற்றையுடையோன், தன்னையும் தன்னைச் சார்ந்துள்ளவர்களையும் கெடுக்கும் மூரி மூங்கிலாக எண்ணப்படுகிறான்.

16. பிறர்புரி வந்தன வழிபாடுகளில் ஆசை தலைப்பட்டும், மரணமேயின் தன் உடலைப் புதைத்துப் பூசிப்பார் எனும் அவாவிலேனும், துறவி வேடம் பூண்டு நிற்பவரை மெய்யடியார் என நம்பி, நிறைவு விரும்பி நிற்றல், மின்மினிப் பூச்சியிடம் நெருப்பு கேட்டு நிற்றலொக்கும்.

17. நெருப்பையேனும் சாம்பலையேனும் மிதித்தலோ, தாண்டுதலோ கூடாது. இரவில் சானி சுத்தமிலதாகலின் அக்காலத்தே அஃது உபயோகித்தல் கூடாது.

18. அதிவாத தர்க்கங்களை விடல் வேண்டும்; வீண்வாதம் செய்வது கருக்கு மட்டையைக் கொண்டு கல் மலையை வெட்ட முயல்வதையொக்கும்.

19. தேவ கைங்கரிய தருமம் எதுவும் இடம்பத்தில் சேராமலே இரகசியம் பேணிச் செய்யப்படல் வேண்டும். சத்தியத்தின் பொருட்டு நாவைக் காத்துக் கொளல்போல, தருமத்தின் பொருட்டு இரகசியத்தையும் காத்துக் கொளல் தகுதித்தாகும்.

20. இராஜ துரோகம் ஈச்வர துரோகத்தில் வைத்தெண்ணப்படும்; இராஜ நீதிக்கெட்டாது போகும் குற்றமானது தேவநீதியில் எடுத்துக் கொள்ளப்படும்.

21. மானிடப் பிறவியைப் பெற்ற நாம் உய்யுமாறு ஒழித்தற்குரியது சாதி வேறுபாடேயாகும். சாதிபேதமற்ற சர்வகர்த்தாவின் சன்னிதியை சாதிபேதமுடையான் அடையாது விலகுநனாவான்.

22. நமது மேனாளிலிருந்த புலவர்களைப் புகழ்தலிலேயே நின்றுவிடாது, இந்நாளிலுள்ள பொய்யில் புலவர்களையும்

புண்ணியர்களையும் இனிது புகழ்ந்து, அவர்கட்கு எவ்வாற்றானும் இயன்ற உதவியீந்து, நறிய போதனைகளை நாள்தோறும் நனிநிகழச் செய்வித்தும், பிற மதத்திருப்பாரையும் தம் சமயத்தில் ஆதரவோடு சாரச் செய்து, சகோதரப்பான்மை பாராட்டத்தவறின், வைதீக சைவ சித்தாந்தச் சித்திரம் தீட்டப்பட்ட பெருஞ்சுவர், வெறுஞ்சுவராய் விடுபோழ்து அதிதூரமாயிராது என்பதை ஈண்டு சைவர்களுக்கு அறிவுறுத்துகின்றோம் கடமை பற்றி.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்துள்ள நூல்களில் இவை போன்ற அருளுரைகள் இன்னும் பலப்பல உள்ளன.

11. ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் சித்தாந்தம்

''கல்லா னிழல் மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே''

எனும் காப்புச் செய்யுள் விளங்கப் பன்னிரெண்டு சூத்திரங்களை உள்ளடக்கிய சிவஞான போதம் அருளிய மெய்கண்டதேவர் வணக்கப் பாடலுடன் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் சித்தாந்தம் எனும் பகுதி இது.

பாடல்:

பண்டைமறை வண்டரற்ற பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்துநாறக்
கண்டஇரு தயகமல முகைக ளெல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய்மேவும்
மெய்கண்ட தேவன் மிகுசைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

சித்தாந்த சாஸ்திரங்கள் வைத்துக் காக்கப்படும் பெட்டகம், அலமாரி ஆகியவைகளை நெல்லைப் பாபநாசம் சிவன் கோயில் சுற்றுப்புற வளாகத்திலும், மதுரை ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோயில் ஆடி வீதியிலும் திருமுறைக் கோயில் என வழிபாடு நிகழ்த்தப்படுவதைக் காணலாம்.

சைவ சித்தாந்த சாஸ்திரங்களில், கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் இயற்றிய எட்டுநூல்கள், உமாபதியஷ்டகம் என்ற பெயருடன் விளங்குகின்றன.

உமாபதி சிவாசாரியார், வழக்கம்போல கொற்றவன் குடியில் இருந்து சிதம்பரம் போந்து ஸ்ரீ நடராஜர் பூஜையை நிறைவு செய்து

விட்டுப் பல்லக்கில் அமர்ந்து, தீவட்டிகள் முன் செல்ல திரும்பும்போது **''பட்டமரத்தில் பகல் குருடு போகுது''** என்று தம் குருநாதர் கூறியதை கேட்ட அக்கணமே பல்லக்கிலிருந்து கீழே குதித்து விட்டார். உமாபதியாரின் ஆணவம் அக்கணமே அழிந்தது.

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு பூசை புரியும் தமது உரிமையை இழந்தார். சரியை கிரியை பூர்த்தியாய் விட்டது. கொற்றவன் குடியில் தங்கித் தமது தவத்தைத் தொடர்ந்தார்.

தில்லையின் எல்லைக் காவல் புரிந்தும், ஸ்ரீ நடராஜப் பெருமான் நிவேதனம் செய்ய எரிபொருள் வழங்கியும் சிவத்தொண்டு புரிந்த பெற்றான் சாம்பானுக்கு இறைவர் கட்டளைப்படி நயனதீக்ஷையும் நல்உபதேசமும் செய்வித்து சிவச்சோதியில் கலக்க உதவிய அருளாளர் உமாபதியாரைப் புகழ்ந்து, ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பல பாடல்கள் பாடியுள்ளார்.

ஐமுகச் சிவமாய் சனகாதி நால்வர்க்கும், அறுமுகச் சிவமாய் பராசரர் மக்கள் ஆறு பேர்க்கும், சின்முத்திரையால் சதுர்வேத உச்சிமுடிவை, வினைதீர்த்துத் தமக்கும் அருள, அதியிளமையில் தாம் பாடிய முதல் மண்டல முதல் பதிகப் பாடலில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் வேண்டியுள்ளதை நாம் அறிவோம்.

ஆற்றுவெள்ளம் வருவதன் முன் அணை போட அறியீர்; அகங்காரப் பேய் பிடித்தே ஆடுதற்கே அலைவீர்; கூற்று வருங்காலதற்கெது புரிவீர் ஐயே; கூற்றுதைத்த சேவடியைப் போற்ற அறியீரே, என்ற வடலூர் வள்ளலார் பாடலும் இங்கு சிந்திக்க வேண்டியது.

''கருணை நெருங்கடலென்கோ, கல்லாலின் அடியமர்ந்த கடவுள் என்கோ, அருணகிரிக்கருள் புரிந்த ஆறுமுக குரு என்கோ'', எனப்பாடிய வள்ளலார், உன் பதத்துணையே பிடித்தேன் விடமாட்டேன் என்ற மனஉறுதியுடன் நின்றார். மனதைத் தன் வசமாக்கிக் கொண்டார். மாசற்ற மனத்தில் இறை நிறைந்து விளங்கியதால் அவர் ஞான தேகம் அருளப் பெற்றார்.

கொடிய சனன மரண ரோகத்தை சங்கரிக்கும் வல்லமை குகேசனுக்கே உரியது. இதய நடுவண் அவனைத் துதித்து

வணங்காவிடில், எவ்வகைச் சிறந்த காரியங்களும் பயன் தருவனவாகா; அதனால் அகப்பூசையே சிறந்தது என்க.

காலனின் சூக்கும பாசத்திற்குள் சிக்கிக் கொள்ளாமல் இருக்க, மார்க்கண்டேயர் தமது சூக்குமத்தை சுத்தசிவத்துடன் இணைந்து அத்துவித நிலையில் இருந்தார். அவ்வாறு ஒன்றியிருந்ததால், கன்றிய காலனைக் காலால் கடிந்தார் காலகாலர்.

குகேசன் திருவடியே தஞ்சம் என அத்துவித நிலையில் நின்றால் யாரும் நீண்ட வாழ்வு பெற்றுத் திகழ்வார் என்ற பேருண்மையை உள்ளடக்கி, தெய்வப்புலவர் அருளிய திருக்குறள் பாடலையும் இணைத்து ஜகவீரபாண்டியர் பாடிய பாடல் வருமாறு:

நீடிய வாழ்வெய்தி நிலமிசையேன் மார்க்கண்டர்
கூடினார் பேரின்பம் குமரேசா – நாடி
மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இந்தியத் துணைக்கண்டத்தில் அந்த நாளில் ஆங்காங்கே அத்வைத சித்தாந்தத்தை அவரவருக்குற்ற முறைப்படி போதித்து வந்தவர்களில் சிலரை இங்கு சிந்தை செய்வோம்.

1. **ஆதிசங்கரர்:** இவர் அத்வைத மார்க்க ஸ்தாபகர். அமானுஷ்ய புருஷர். உபநிஷத்களிலிருந்து அத்வைத கருத்துக்களை திரட்டி நூல் வடிவாக்கி அருளியவர். மக்கள் அவரின் போதனையை முழுமையாகப் பின்பற்றவில்லை.

2. **வித்யாரண்யர்:** இவர் அத்வைத சன்னியாசி. ஞான்நூல்கள் பல அருளியவர். அவர் இயற்றிய, பிறவி நோய் நீக்கும் உபாயங்களடங்கிய பஞ்சதசி எனும் நூலை, சிதம்பரம் கேணி மடத்து நித்யானந்த சுவாமிகள் தமிழில் செய்யுள் வடிவாக்கி வழங்கியுள்ளார்.

3. **சமர்த்த இராமதாசர்:** இவர் பரம அத்வைதியானவர், பிரம்மச்சாரியாய் விளங்கியவர்; சத்ரபதி சிவாஜியின் வழிகாட்டியாய் மராட்டிய சாம்ராஜ்யத்தில் புகழுடன் விளங்கியவர்.

4. **கோவிந்த தீக்ஷிதர்:** வித்யாசாரியார் என்னும் பெயரிய கோவிந்த தீக்ஷிதர், ஒரு கிரஹஸ்தர். இவர் தஞ்சை நாயக்க வமிச சாம்ராஜ்யத்தை ஸ்தாபிதம் செய்ய உதவியவர். இவரும் ஒரு அத்வைத போதகராக வாழ்ந்தவர்.

5. **லீலாசுகர்:** இவர் சேர நாட்டில் அத்வைத சம்பிரதாயத்தை அனுசரித்து வாழ்ந்தவர். இவர் கிருஷ்ண கானாம்ருதம் பாடி மகிழ்ந்தவராயினும், சிவபஞ்சாக்ஷரி செபத்தை உறுதியாக கொண்டவர்.

6. **மதுசூதன ஸரஸ்வதி:** இவர் வங்காள தேசத்தவர். அத்வைத சித்தி எனும் கிரந்தம் இயற்றியவர், இவர் கிருஷ்ண பக்தராக விளங்கினவராயினும், சிவமஹிம்ந என்ற சிவஸ்துதி நூல் இயற்றி அத்வைத போதகம் புரிந்தவர்.

7. **நிச்சலதாசர்:** இவர் விசார சாகரம் எனும் நூல் அருளியவர். அந்நூலில், அத்வைதம் என்றால் கடவுள் மயமாவது என தர்க்க ரீதியாக விளக்கப்பட்டுள்ளது. இவரின் சமாதி புதுடெல்லியை அடுத்த சுகடோலி என்ற தலத்தில் உள்ளது.

8. **ஸ்ரீமத் அருணகிரிநாதர்:** ஞான அனுபவ நூல்கள் பல அருளி தயில நடையில் சேய்ப்பரமனுடன் இரண்டற்ற நிலையில் விளங்கி சிதாகாசப் பெருவெளியில் மறைந்தருளியவர்.

9. **ஸ்ரீ தாயுமானவர்:** இவர் அரசு பதவியைத் துறந்து, துறவு ஏற்று, சுத்த அத்துவித நிலையை, தூய மெய்ம்மைப் புணர்ச்சி ஆகிய பின்னல் எனும் அத்துவிதமே கிடைத்தற்கரிய பேறு எனக்கணித்து வாழ்ந்தவர். சும்மா இரு என்ற தமது குருநாதரின் திருவாக்கை ஏற்று தவமியற்றி முத்தியெய்தியவர்.

10. எள்ளினுள் எண்ணெய் போல இடையேதுமின்றி உள்ள குகேசனை தஞ்சமடைந்து, அப்பரமனின் புகழ்பாடி, போதனை புரிந்து சுத்த அத்துவித வைதீக சைவ சித்தாந்த ஞானபாநு என விளங்கும் **பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்** அருளிய செந்நெறியாம் சுத்த அத்துவித விளக்கம் இனி காண்போம்:

அத்துவிதம், ஏகமுமன்று, துவிதமுமன்று; அதற்கு உதாரணம்:

அலி என்னும் ஒரு மொழி ஆணுமல்ல பெண்ணுமல்ல;
வாயில் எனுமொரு மாற்றம் உள்ளுமன்று வெளியுமன்று;
சோறு எனுஞ்சொல் அரிசியுமன்று குழை கூழுமன்று;
மாலை எனும் கூற்று இரவுமன்று பகலுமன்று;

அத்துவிதம், பாம்பின் கட்டொளையில் கண்ணும் செவியும், யானையின் துதிக்கையில் நாசியும் கையும், பேய் பிடித்தான் உருவில் பேயும், பிடிபட்ட உயிரும், வௌவ்வால் வடிவில் பறவை வடிவும் விலங்கு வடிவும், சூரபதுமன் உருவில் சூரனும் பதுமனுமாகிய இருவர் இருந்ததை ஒக்கும்.

சுவானுபூதி நீத்துத் தன்னையே பெரிய தெய்வம் என கூறிக்கொள்ளும் ஏகவாதம் இழிந்தது இதற்கு உதாரணம் குழைந்த கூழ் ஆகும்.

உருவம் கருதுபு ஆண்டான் அடிமையாகக் கூறிக் கொள்ளும் த்வைதம் சிறந்தது. இதற்கு உதாரணம் அரிசியாகும். இதனினும் சிறந்தது அத்வைதம். பதச்சோறு உதாரணம்.

அத்துவிதத்திலும் சிறந்தது மோன முத்திரையில் நிறுத்தும் முடிவு. இதுவே ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் தலையாய சித்தாந்தமாகும். அதாவது,

மூலாதாரத்திலிருந்து, முதுகெலும்பின் நடுவாக மேலே செல்லத்தக்கதும், இடைபிங்கலை எனும் இரண்டு நாடிகட்கு நடுவண் விளங்கத்தக்கதுமான ·பிரமநாடியின் செயலை முன்னோக்கிக் கொள்ளும் கருமமும் அல்ல;

மூக்கு நுனி பார்த்தல் முதலிய காட்சிகளோடு அக்ஷரங்களை உச்சரிக்கும் புருவ மத்தியில் பார்க்கும் ஒளி விவகாரமும் அல்ல;

புண்ணிய கருமம் புரிதல், விரதம் நோற்றல், மூர்த்தி தலம் ஆகிய இவற்றினைத் தொழுதல், தீர்த்தங்களில் மூழ்குதல் ஆகியவைகளுமல்ல;

இம்மூன்றுமல்லாத, எட்டுத்திக்கும் அவற்றிற்கு அப்புறமும் நிறையும் ஒரு தன்மையாகவும், ஒன்று இரண்டு என்று வாதிக்கும்

குற்றமற்ற மௌன முத்திரை எனப்பட்டதும், கல்லால விருக்ஷத்தின் அடிப்புடைவைகிய இறைவன் கைகாட்டியாயுள்ளதுமாகிய தகராலயப் பேரிரகசிய சுகமார்க்கமே ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் முடிவான சித்தாந்தமாகும்.

இதுவே, சுவாமிகளுக்கு பிரப்பன் வலசைப்பதியில் நிகழ்த்திய தவப்பயனாய், முண்டிதமில் சிறுசிகையுடன் கௌபீனதாரியாய்த் தோன்றிய செம்மேனியெம்மான் போதித்த உபதேசமாகும். இவ்விவரமெல்லாம், சுவாமிகள் அருளியுள்ள பரிபூரணானந்த போதம், துறவற விளக்கப் படலத்திலும், தகராலய ரகசிய சாஸ்திரம் நூலாசிரியது பாயிரத்திலும், ஐந்தாம் மண்டல திருப்பா எனும் நூலின் 116, 117, 118-ம் பக்கங்களிலும் காணலாம்.

கைகட்டி வாய்புதைத்து அடங்கி செயலற்று, உரையற்று அமைந்த நிலையை மௌனம் எனக் கூறவொண்ணாது. மௌனத்தில், பேசாமௌனம், கேளாமௌனம், நினையா மௌனம், என்ற நிலைகளுண்டு. வாக்குமோனம், காயமோனம் கடந்த கரணமோனம் என்ற நிலையில் பரமேஸ்வர சிந்தை ஒன்றே நிற்கும். இந்நிலையை, மனதற்ற நிலை எனத் தாயுமான சுவாமிகள் கூறுகிறார்; எண்ணமற்ற சுகம் என ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பாடியுள்ளார்.

மனம் அடங்கிவிடின் பிராண வாயுவும் அவ்வழி அடங்கும்; அந்நிலையில் இறை காட்சி அருளப்பெறுவோம். அஞ்ஞான்று வழங்கப்பெறும் இறை கட்டளை எதுவாயினும் அதை ஏற்று அதன்படி நிற்றலே நமது கடமை. இவைகளின் விளக்கம் சுவாமிகள் அருளிய சிவஞான தீபம் எனும் உரைநடை நூல் இராஜயோகவியலில் காணலாம்.

ஆத்மபோதகராகிய பரமஞானியாம் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் சீவ சிருஷ்டிக்கு வித்தாகிய சித்த விருத்தியை உண்டாக்கும் காமக்குரோதாதி பதினான்கு எனக் குறிப்பிட்டு, அவைகள் நசிக்கப்பட வேண்டும் என்றும், ஞானபக்குவம் பெறக் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகள் பதினைந்து எனக் குறித்தும், தீமைகளைச் செய்யாமலும், செய்விக்காமலும், செய்ய உடன்படாமலும் நீங்கியிருக்க வேண்டும் என்றும் மேற்சொன்ன சிவஞானதீபம் எனும் உரைநடை நூலில் விளக்கியுள்ளார்.

நமது தூல சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், வந்தபிணி நீக்கம் பெறவும், மருத்துவர் வழங்கும் கசப்பு மருந்தை அவர் வகுத்த நியமனத்தின்படி உணவு ஆகியவைகளை ஏற்று பிணிநீக்கம் பெறுகிறோம். குடலில் ஏற்பட்ட வியாதி நீங்கினால் விருந்து ஏற்க இயலும். கிலேசம், பிரமை, கோபம், பொறாமை போன்ற மனோவியாதிகள் ஒழிந்த பிறகே ஆத்மானந்தத்தை அனுபவிக்க இயலும். உய்த்துணர்க.

அத்வைதம், பதி, பசு, பாசம் எனும் முப்பொருளும் ஒன்றற்கொன்று தூல சூக்குமங்களாய் வியாப்பியமும், வியாபகமாய் நிற்கும் நிலை என்பர். அத்வைதம் இறை கலப்பாய் ஒன்றாய், பொருள் தன்மையால் வேறாய், உதவுந் தன்மையால் உடனாய் நிற்குநிலை எனவும் கூறுவர்.

சுவாமிகள் அருளிய அட்டாட்ட விக்ரக லீலை என்ற தலைப்பில் உள்ள பாடலில் நான்காவது மூர்த்தமாகக் குறிக்கப்பெற்ற மூர்த்தியின் வடிவம் தக்ஷிணமூர்த்தமாகும். இம்மூர்த்தியைப் பிரதானமூர்த்தமாக ஆலங்குடி, கோவிந்தவாடி, காளஹஸ்தி, சுசீந்திரம், மணப்புரம் போன்ற தலங்களில் வழிபடுகிறோம்.

ஆயிரக்கணக்கான சிவஸ்தலங்களில் தக்ஷிணாமூர்த்தி திருவுருவைப் பரிவார தேவதைகளில் ஒன்றாக பிரகாரத் தென்புறம் எழுந்தருளச் செய்துள்ளதை நாம் அறிவோம். அந்த சந்நிதியில் வரையப்பட்டுள்ள, ''கல்லாலின் புடையமர்ந்து'' என்ற தொடக்கப் பாடலில் குறிக்கப்பெற்ற சதுர்வேத முடிவு, சொல்லாமல் சொன்ன உபதேசப் பொருள், சொன்னவரை நினையாமல், நினைவது ஆகியவைகளுள் விளங்கும் பொருளை உணர்ந்தவர் பலர் எனக் கூற இயலாது.

மோன முத்திரையில் நிறுத்தல் எனும் சுத்த அத்துவித நெறியில் நின்றால், கருவில் உருவாகாத கதியை உடல் போகுமுன் கண்டு அடையலாம் என்ற சுவாமிகள், சுத்தம் என்ற பதத்திற்கு விளக்கம் கூறுமாறு, தாம் அருளியுள்ள முதல் மண்டல நூல், சண்முகானந்த சிவம் என்னும் பதினைந்தாம் பதிகத்து ஆறாம் பாடலில்,

''கரும மல பரிபாக இருவினையின் ஒப்பு நீ கண்ட காலத்தவைகளைக் காருண்ய மெய்க்குரவனாக வந்தருளில்

கடாக்ஷித்து, மலமறுத்துத்தருமநிமிர் தண்ணளியில் வைத்தல் உயர்சுத்தம்; அதுதானே எனக்கும் வேண்டும்'' என விண்ணப்பித்துள்ளார்.

களிம்பு நீங்கப் பெற்ற செம்பும், செழும்பசும்பொன்னோடு நேரே இணைக்க இயலாது; இரு உலோகங்களும் இளகும் வண்ணம் உஷ்ணம் உருவான நிலையில் அவையிரண்டும் ஒன்றெனவாகும். ஆகவே நமது நிலையை செம்மை செய்து, அந்த மாசிலாக்கதியை எய்த குருவருளை வேண்டுவோம்.

கத்ய பத்ய ரூபமாய் அமைந்துள்ள நுட்ப, திட்ப, நிபுணத்வம் நிறைந்து விளங்கும், சுவாமிகள் அருளியுள்ள பன்னூல்களில் பரந்து கிடக்கும் பொருளும், சுருங்கி நிற்கும் பொருளும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் சித்தாந்தமேயாகும். உயிரையும், உடலையும் பிரிப்போராகி, ஊன் அருந்துதல் அடாது என்னும் முடிபும் சுவாமிகளின் சித்தாந்தமேயாம்.

மேற்சொன்ன சித்தாந்தக் கருத்துக்கள் விளங்கும் நூற்றுக்கணக்கான பாடல்களில் சிலவற்றை இனி காண்போம்:

1. ஆலி னீழலினாலு பேர்தொழ வாசிறென்முக மாயிருந்
தோல மாமறை யுண்மை யீதென வோதியாண்டவர் சேயெனும்
கோல வேலவன் ஞாலவாதனை கொண்டு நான்தொலை யாவணம்
சீல மாங்குண மீந்ததே எங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

(முதல் மண்டல 53-ம் பதிகம் 7-ம் பாடல்)

2. அதுவாம் பரப்பிரம மான்மாவுக் கான்மா
அதனாலே யத்துவிதமாகு - மிதுதானே
உண்மைச் சிவானுபவ முள்ளடக்கி நின்றீ
தறியா ரிரண் டொன்றென் பார்.

(இரண்டாம் மண்டலம் 2-ம் பதிக 44-ம் பாடல்)

3. ஏகந் துவிதமெனு மெண்ணிருப்ப வத்துவிதந்
தோகமறு வேதஞ் சொன்னதாலவ் - வேதந்
துவிதமு மல்லாத சொற்பொருடா னேயத்
துவிதமென் றோர்த றுணிபு.

(மூன்றாம் மண்டல காசி யாத்திரை 70-ம் பாடல்)

4. அரனுயர் கல்லாற் கீழத் துவிதமென் றறைந்தா னல்லன்
உரனுறு துவித மேக முரைத்தில னுரைக்க டங்காத்
திரனுறு மோன மாமுத் திரையிது காண்டி ரென்ற
நிரனனி தேர்வார் மோன நிலையிலே முடிவென் னாரோ.

(நான்காம் மண்டல செ.செம். 66-ம் பாடல்)

5. சனகனே முதலா நால்வர் தட்சிணா மூர்த்தி காட்டக்
கனகமா வொளியைக் கண்டார் கலக்கமுந் தீர்ந்தார் வீட்டை
அனகவா றறவர் செவ்வே ளனுக்கிர கத்தாற் கண்டார்
இனையவா றணையார் கூற லெந்நலம் பயக்க வல்லும்.

(நான்காம் மண்டல செக்.இறுமாப்பு 6-ம் பாடல்)

6. விரதரோர் நால்வர்க் கந்நாள் மிளிர்வட விருக்கத் தின்கீழ்
விரலினை யொன்றா யேனும் விரித்துமற் றிரண்டா யேனும்
அரமுனி காட்டி டாம லங்குலி யிரண்டுஞ் சேர்த்துத்
திரிபறக் காட்டி னானஃ தேதெளி மோக்கத் தீர்வை.

(ஐந்தாம் மண்டலம், 44-ம் பதிகம், 8-ம் பாடல்)

இவ்வாறான பாடல்களில் பொதிந்துள்ள பேருண்மைகளை உலகபுத்தி, குரு, சாஸ்திரம் ஆகிய முத்திற ஏதுக்களாலும் சுடரும் பெற்றிமையர்களைக் கொண்டு, எடுத்தியம்பக்கேட்டு, அவைகளை நன்குணர்ந்து அனைவரும் உயர்நிலை எய்துவார்களாக.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் சித்தாந்தமாகிய சுத்த அத்துவிதம் பற்றி அடியவர்களுக்கு அவசியம் போதிக்கபட வேண்டும் என்ற தமது விருப்பை சுவாமிகள் வெளிப்படுத்தியுள்ளார். அவ்வாறு செய்யாதவர்களைத் 'துரியோதனனுக்கு ஒப்பிட்டுத் தாம் பாடியருளியுள்ள திருப்பா எனும் நூலின் மூன்றாம் பதிகம், பத்தாம் பாடலான, ''ஒன்றெனு மபேதமு மிரண்டெனும் பேதமும்'' என்ற சொற்றொடர் தொடக்கப்பாடலின் பொழிப்புரையை சுவாமிகள் அருளிச் செய்துள்ளவாறே இங்கு வழங்கியுள்ளதைக் காண்க:-

பொழிப்புரை:

இறந்து பிறத்தல் இல்லாத என் பரமபிதாவே! ஆசிரியர் அருணகிரிநாத வள்ளலாரின் கடவுளே! பரிபூரண கருணை இன்பத்திற்கு இருப்பிடமே! அனுபூதி நிலை நீத்து, வத்து ஒன்றென்னும் அபேதவாதமும், வத்து இரண்டென்னும் பேதவாதமும் பொருந்தாத மோன சாந்தமுடிவை மொழிகின்ற சுத்தாத்துவைத சித்தாந்தத்தைச் சொல்லாமலே, அதற்கு முரணான ஒன்றைச் சொல்லி, உலகத்தைக் கெடுக்கும் கருமமுடையார், சுத்தாத்துவைதம் சொல் சித்தாந்த மார்க்கத்தை நாம் நம்மை அடுத்தார்க்குச் சொல்லாமல், நமதுண்ணுக்குள்ளே நாடி நிற்கின்ற தன்மையினாலே, நம்முழை நமன் அதிகாரம் செல்ல மாட்டாது என்னும் துணிவு கொள். ஒரு நடையையும் இங்கே நன்றாக உணர்ந்தக்கால், அது, வெற்றிப்பாட்டினை விரும்பிய துரியோதனனுடைய வஞ்சக ஆலோசனையையும் ஆசையையும் ஒக்கும். இவ்வீணான வஞ்சகமானது உள்ளும் புறமும் ஒத்துள்ள உண்மையாளர்பாலும் உண்டோ? என்றவாறு -

(துரியோதனனுடைய சூழ்ச்சியும் வெற்றி விருப்பமும், தனது ஆளுகையில் பாண்டவர்கட்கு யாதும் கொடுப்பதில்லை என்னும் பிடிவாதத்தனமேயாகும். அப்பிடிவாதத்திற்கு ஆதாரம் ஒருதிற ஆசையாகலின் அஃது வேட்கை எனப்பாடலில் குறிப்பிடப்பட்டது.)

12. தொண்டர் சீர் போற்றுதல்

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் புகழ் பரவப் பல்லாற்றானும் தொண்டு புரிந்துவரும் அன்பர்களைப் பற்றி சிந்திப்போம்.

அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களை கௌரவ ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ஓம் சக்தி மாத மலர் ஒன்று ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளைப் பற்றிய செய்தியை ஏந்தி வந்துள்ளது. அதன் விவரம் வருமாறு:-

''எய்தற்கரிய அருட்சுடரை இதயத்தில் கொண்டு, செய்தற்கரிய திருநூல்கள் பல இயற்றி, உய்தற்கரிய வழியை உணர்த்தியபெருமான் தவத்திரு பாம்பன் சுவாமிகள் சிலகாலம் மதுரையில் தங்கி, நாள்தோறும் திருப்பரங்குன்றம் சென்று வழிபாடு செய்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.''

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவைகள் இளஞ்சொற்களல்ல; அவை காலத்தால் அழிக்க முடியாத செஞ்சொற்களாகும்.

அருட்செல்வர் அவர்கள், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பால் ஆழ்ந்த பக்தி பூண்டவர். யாரிடமிருந்தும் எந்நாளினும் எதையும் பெறாதவர்; இறை தமக்கு வழங்கியதிலிருந்து தம்மால் கொடுக்க முடிந்ததைப் பிறர்க்குக் கொடுத்துக் கொண்டேயிருப்பார். நூற்றுக்கும் மேற்பட்ட திருப்பணிகளை நிறைவு செய்த தவத்திரு சுந்தர சுவாமிகள் மற்றும் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், அமெரிக்காவில் தாமரைக் கோயில் அமைத்து உலகெங்கும் இறைதொண்டு புரியும் தவசீலர் ஸ்ரீ சச்சிதானந்த மகராஜ் சுவாமிகள், பொள்ளாச்சியையடுத்த வால்பாறையில் தியான மையம் அமைத்த தவத்திரு வேதாத்திரி மகரிஷி அவர்கள் போன்றோர் புரியும் தொண்டுக்குத் துணைபுரிபவர்.

சென்னிமலை சிரகிரி வேலவருக்குத் துதி நிகழ்த்தும் அடியவர் மலைப்பயணம் செய்து தெரிசனம் புரியப் பேருந்து ஒன்று வழங்கியவர். திருப்பழநி மலை மீது சிரமமின்றி ஏறி ஸ்ரீ ஞான தண்டாயுதபாணியை தெரிசனம் செய்ய மின்சக்தி இழுவை வண்டிகளைப் பெரும் பொருட் செலவில் அமைத்துக் கொடுத்தவர்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்துள்ள பாடல்களை உரிய பண்களில் கலைவல்லுநர்களைக் கொண்டு பாடவைத்தும், அருளாளர்களின் புகழ் பேசவைத்தும், ஒவ்வொரு வருடமும் விழாக்கள் நிகழ்த்தி, அறிஞர்களை கௌரவித்தும் அருஞ்செயல் புரியும் அருட்செல்வர் அவர்கள் திருத்தொண்டு போற்றத்தக்கது. அவர்களை அனைவரும் உளமார வாழ்த்தி வணங்குவோம். ஸ்ரீ இராமலிங்கர் பணிமன்றத்தின் செயல்வீரர் அனைவரையும் வாழ்த்துவதும் நமது கடமையாகும்.

சென்னையில் பிரதி வருடமும், தேவாரம், திருவாசகம், திருப்புகழ் மற்றும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்துள்ள பாடல்களை உரிய பண்களில் பாடவைத்து, அறிஞர்களை கௌரவித்தும் வரும் தொழிலதிபர்கள் திருவாளர் M.A.M.இராமசாமி செட்டியார், திருவாளர் A.C.முத்தையா செட்டியார் மற்றும் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் நினைவு அறக்கட்டளை நிர்வாகஸ்தர்கள் திரு.A.R.இராமசாமி அவர்கள் திரு.L.சபாரத்னம் போன்றோர்களின் சேவை அனைவராலும் பாராட்டத்தக்க திருத்தொண்டு ஆகும். அவர்களை வாழ்த்தி வணங்குவோம்.

சிவசக்தி நாயகனுக்கும், சிவகுமாரனுக்கும் தொண்டுபுரிவோர் பெருஞ்சம்பத்து உடையவராவார்.

ஆலாசிய மான்மிய ஆடல்களை ஆடிக்காட்டிய காலாயுத கேதன புங்கவர் பரமர், நடனநாத சுவாமி, கோயில் கொண்டு விளங்கும் திருப்பரங்கிரியருகே ஸ்ரீமத் பாம்பன் சுவாமி திருக்கோயில் அமைத்து, பொட்டல் காடாக இருந்த இடத்தில் நகரம் ஒன்றை உருவாக்கி, அதற்குப் பாம்பன் நகர் எனப் பெயர் விளங்கச் செய்து, கல்விச்சாலை, தியான மண்டபம், அன்னகூடம் போன்றவைகளை நிறுவி, தமிழ்நாடு மட்டுமின்றி, கிழக்கு ஆசிய நாடுகளிலும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் புகழ் விளங்க பல்லாயிரம் அன்பர்களைப் பக்குவப்படுத்தி வரும் ஸ்ரீ ல ஸ்ரீ இராமச்சந்திர சுவாமிகள் அவர்களையும், அவர்கள் ஆற்றும் திருத்தொண்டுக்குத் துணை நிற்கும் அருள் உள்ளங் கொண்ட அன்பர் அனைவரையும் நன்றியுடன் வணங்கி வாழ்த்துவோம்.

மேலும் பல தலங்களில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளுக்கு திருக்கோயில் எழுப்பி, அவர் பாடல்களை ஓத வகை செய்யும் அன்பர்

அனைவரையும் வாழ்த்துவோம். குறிப்பாக, சுவாமிகள் தவமியற்றிய பிரப்பன் வலசைப்பதியில் ஸ்ரீ மயூரநாதர், ஸ்ரீ பாம்பன் சுவாமிகளுக்குக் கோயில் கட்டிய திரு.ந.ஜெயராமன் மற்றும் அவர் தொண்டுக்குத் துணைபுரிந்த அன்பர்களையும் வாழ்த்துவோம்.

பிரப்பன் வலசைப்பதியில் உள்ள திருக்கோயிலில் நித்திய மாதாந்திர, வருடாந்திர வழிபாடுகள் அனைத்தும் சிறப்பாக நிகழ்த்திவரும் திரு.பா.பூபதி அவர்களுக்கும் அவருக்கு ஊக்கமளித்து வரும் அடியவர் அனைவருக்கும் நல்வாழ்த்து கூறுவது நமது பொறுப்பாகும்.

இராமேஸ்வரம் தீவில், பாம்பன் பதியில் சுவாமிகள் வாழ்ந்த இல்லத்தைப் பளிங்கு மாளிகையாகப் புதுப்பித்து தொண்டு புரிந்த ந.ஜெயராமன் மற்றும் அவருக்குத் துணைபுரிந்த அன்பர் அனைவருக்கும், சுவாமிகளின் பெயரர், அமரர், திரு.நா.பாலசுப்பிரமணியம் அவர்களின் திருக்குமாரர்கள் மூவர் மற்றும் உறவினர்களுக்கும் குரு கிருபை புரிய வேண்டுவோம்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் எழுந்தருளியுள்ள சென்னை திருவான்மியூர் மயூரபுரத்தில் அறச்சாலை முதலியவைகளை அமைத்துக் கொடுத்த திரு.மாசிலாமணி முதலியார், சமாதி நிலைய நித்திய பூஜை மற்றும் விழாக்களை சிறப்பாக நிகழ்த்திவந்த சோதிடர் சின்னசாமி பிள்ளை, அவரைத் தொடர்ந்து சுவாமிகள் சமாதியில் பூசைகள், விழாக்கள் நிகழ்த்திவரும் அன்பர்கள் தொண்டு போற்ற வேண்டியது நமது கடமை.

சுப்பிரமணியதாசர் எனும் தீக்ஷா நாமம் வழங்கப்பெற்ற திரு.சின்னசாமி சோதிடர் சமாதி பூஜைகளை நடத்திவரும் அவர் குமாரர் திரு.குரு மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகிய அனைவரையும் வாழ்த்துவோம்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளால் கி.பி.1926ல் நிறுவப்பட்ட மஹாதேஜோ மண்டல சபையைத் தொடர்ந்து நிர்வகித்துவரும் பேரன்பர் அனைவரையும் வாழ்த்துவோம்.

திருவான்மியூர் மயூரபுரத்தில் விளங்கிவருவது கோயிலல்ல; சமாதி நிலையமே எனப் பல்வேறு நீதிமன்றங்களில் வாதம்புரிந்த

சொல்களைச் செல்வர்களுக்கும், சத்தியம் பிறழாது நல்ல தீர்ப்பு வழங்கிய நீதியரசர்களுக்கும், அரசு உயர் அலுவலர்களுக்கும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் நற்கருணை பாலிக்கப் பிரார்த்தனை புரிவோம்.

மற்றும் இலைமறை காய்போல இருந்துகொண்டு குருசேவை புரிந்து வரும் ஜோதிட ரத்னா **திரு.சௌமா** அவர்கள் மற்றும் திரு **C.V.சதானந்தன்** அவர்கள், **டாக்டர்.M.K.விஸ்வேஸ்வரன்** அவர்கள் போன்ற தொண்டு உள்ளங்கொண்ட அனைவரையும் இனிவருங்காலங்களில், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் எழுந்தருளியுள்ள இப்புனித பூமியில், அமைதி சாந்தம் நிலவ, அறங்கள் ஓங்க செயல்புரியவுள்ள சந்ததியினர்களையும் போற்றிப் பணிவோம்.

''முருகனை நினைந்து, நித்தியானந்தக் கடல் எனும் குமரா என்று விளித்துத் துதிப்பவர் துன்பம் நீங்கும்'' என சுவாமிகள் தாம் அருளிய தகராலய ரகசியம் எனும் நூலில் வழங்கியுள்ளார். (பக்கம். 237)

ஆக, இத்தி தன்னின் கீழ் இருமூவர்க்கும் அன்றொரு நாள் கிருபை புரிந்த அரசைப் போற்றி வணங்குவோம்.

திருவண்ணாமலையில் தோன்றிய ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளையும், திருத்தேவையில் திகழ்ந்த பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளையும் சிந்தை செய்து புலன் வழி மனத்தை அலையவிடாது, உள்ளூரில் பூக்கும் அட்டமாமலர் கொண்டு, ஊன் இடங் கொண்ட குகேசனை வழிபாடு புரிந்து, பிறவாப் பேறு பெற விழையும் அன்பர்கள் அனைவரும் நலம் பெற வாழ்த்தி குகேசனை வணங்குவோம்.

13. நிறைவு உரை

அருளாளர்கள் பலர் திருவருணையைப் புகழ்ந்து ஏத்திப் பாடிய பாடல்களில் சிலவற்றை இந்நூல் முதற்பகுதியில் வழங்கப் பெற்றுள்ளன. ஸ்ரீமத் அருணகிரிநாதரை, ''இன்பக்கடல் படிந்த எந்தை அருணகிரி'' எனப் புகழ்ந்து பாடிய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், தாம் அருளியுள்ள முதல் மண்டல நூலில் திருவண்ணாமலையின் சிறப்பை, ''திருஅருணை'' என்ற தலைப்பில் ஆறுபாடல்கள் இயற்றி, அந்நூலின் பத்தாம் பதிகமாகப் பதித்து மகிழ்ந்துள்ளார்.

சுவாமிகள், திருவண்ணாமலையை, அருணைநீள்கிரி, மாலயன் அறியாவோர் மாமலை, அயன் அரிவெருவவெழுகிரி, அரிதாதா தேடும் பொருப்பு, சோணசயிலம், வன்னிச்சிலை, அருணைப்பதி, தீவரை, அருணாசலம், ஒளிவரை, எரிவரை, சிகிவரை, சோணகிரி, அழல்நாகம், வன்னிவெஞ்சிலை போன்ற திருப்பெயர்களால் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

சுவாமிகள் முருகன் கருணைக்குற்ற அன்பர்களை அதமருள் அதமர், அதமர், மத்திமர், உத்தமர், உத்தமருள் உத்தமர் என ஐவகையினராகக் குறிப்பிட்டுள்ள விவரங்களை அவர்கள் அருளிச் செய்துள்ள இரண்டாம் மண்டலம், இரண்டாங்கண்டம், வஞ்சியியல் பகுதியின் 63 முதல் 67-ம் பாடல்களில் காணலாம்.

உத்தமத்துக்கெல்லாம் உத்தமமான உயர்பொருளாம் குகேசனை வழிபட்டு உயர்வடைய ஊக்கமுடையவர்கள் மேற்சொன்ன பாடல்களை ஓதித்தக்க தகுதி பெற்றுய்வார்களாக. குகன் என்னும் பெயர் குமரக்கடவுள் ஒருவருக்கே உரியது. இதுமறை முடிவாகும். ஆன்மாக்களின் இதயக்குகையில் இறைவன் எழுந்தருளியிருப்பதால் அவ்விறைவனுக்குக் குகன் எனப் பெயர் வடமொழி நூல்களிலும் தூய தமிழில், உள்ளிருப்போன் என்றும் வணங்குகிறோம்.

விருப்பு வெறுப்புகளாலான மனம் அடங்க மனனம் தேவை; இறை நாமாக்களில் ஒன்றை இடைவிடாது செபித்து வந்தால் மனமடங்கும். சிக்கலிலிருந்து விடுபட, தூய உள்ளத்தால் புரியும் தியானமே சிறந்த வழியாகும். மனமடங்கும் உபாயம் ஏற்குமுன் பஞ்சமா பாதகங்களினின்றும் நாம் நீங்கி நிற்றல் முறைமையாகும்.

பசி வேதனை நீக்க, அரிசிச்சோறு, இலைக்கரி, காய்கறி, தானியம் மற்றும் கனிவகைகளை ஏற்கலாம். உயிரைக் கொன்று தின்று உடல் வளர்த்திடுவோர் பல்கோடி வித்தகர் எனினும், அவர் மலமுண் பன்றிக்கும் கடையாகுவர் என சுவாமிகள் கடிந்து கூறியுள்ளார்.

மாந்தர் அனைவரும் ஆற்றவேண்டிய கடமைகளை சுவாமிகள் போதனைகளாக அருளியுள்ளார். அவர்களின் சித்தாந்தங்களும் மனிதப்பிறவி ஏற்ற ஆண்-பெண் ஆகிய இருபாலரும், எக்குலத்தவராயினும் எத்தேயத்தவராயினும் பிறவி நோய் நீங்கப் பின்பற்றக் கூடியவைகளாகும். சத்தியம் பிறழாது வாழ்ந்த அரிச்சந்திரனின் வரலாறு கூறிய பெரியவர், அவ்வுத்தமனைப் ''பாருக்கொருவன்; பரதார சகோதரன்'' எனப்புகழ்ந்து பாடியுள்ளார். நாம் பிறன் மனைவியின் உடன்பிறப்பு என்ற எண்ணம் நம்முள் நிலைத்தால், நம் மனம் சலனப்பட வாய்ப்பில்லை. ஏலக்கருங்குழலார் யாவரையும் தாய் எனக் கருதுதல் முருகன் அன்பர் இயல்பு என சுவாமிகள் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் வாழ்ந்து, கி.பி.1931ல் சித்தியெய்திய சமர்த்தகுரு ஸ்ரீ இராமச்சந்திர மகராஜ் சுவாமிகள், உலகின் எதிர்காலம் பற்றி பல உண்மைகள் கூறியுள்ளார். அவைகளில் சிலவற்றை இங்கு நினைவோம்.

''இந்தியா, தனது சொந்த அரசாங்கத்தின் கீழ் உன்னதமான நிலைக்கு உயரும். உலகம், இந்தியாவை ஒரு கலங்கரை விளக்காக எதிர்நோக்கியிருக்கும். வருங்காலத்தில் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒருவிதமான நாகரீகம் முளைத்தெழும். காலப்போக்கில் அதுவே உலக நாகரீகமாகிவிடும். இனி எந்த நாடும் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பிழைத்திருக்க முடியாது.''

புதுவையில் தவமியற்றி முத்தியெய்திய ஸ்ரீ அரவிந்தர் அருளியுள்ள அறவுரைகளையும் நாம் நமது சிந்தனைக்கு ஆக்குவது நன்மையருளும். ஸ்ரீ அரவிந்தரின் அருளுரை வருமாறு:-

''மனிதகுலம் மகிழ்ச்சியாக இருக்கவும்,
அமைதியுடன் ஒன்றாக இருந்து வாழவும்,

மனநிம்மதியைப் பெறவும், இன்றுவரை
கண்டுபிடிக்கப்பட்ட பௌதீக ஆராய்ச்சி
முடிவுகளும், சாதனங்களும் உதவமுடியவில்லை.
சௌகரியத்தையும் வசதியையும் தரும்
சாதனங்கள், சாந்தியையும் போதுமென்ற
மனநிறைவையும் தரமுடியவில்லை.
அதனால் மனிதன் தன்னை உள்ளூரப்
பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.
அதுதான் உண்மையான வளர்ச்சியாகும்.
தன்னுடைய மனத்தை வெல்லுபவன்,
தனது உணர்ச்சிகளை ஆட்கொள்ளும்
திறமை படைத்தவனாகின்றான்.
ஆபாசங்கள், விருப்பு, வெறுப்பு, ஆகியவற்றைக்
கடந்து நிற்பவன் எவனோ அவனே
உண்மையில் முழு மனிதனாவான்.
இதற்குரிய சாதனத்தை நாம் தேடி
அலைய வேண்டியதில்லை. அலை பாய்ந்து
ஆராய்ச்சி செய்யவும் வேண்டியதில்லை.
உன் பார்வையை உள்முகமாகத் திருப்பிப்பார்.
உன் மனத்தை நீ அடக்கி ஆள்வதற்கு
முயற்சி செய்; அங்கே ஆட்சி செய்யும்
பரம்பொருள் உனக்கு எல்லையில்லாத
அமைதியையும் நித்தியமான ஆனந்தத்தையும்
வழங்கக் காத்திருப்பதை நீ உணர்வாய்.''

மனமே அனைத்து செயல்களுக்கும் ஆதாரம் என்ற கருத்தை உள்ளடக்கிய, ''மனமே சனனமு மனமே மரணமு,''மென்ற தொடக்கப் பாடல் ஒன்று, சுவாமிகள் அருளிச் செய்துள்ள மூன்றாம் மண்டலத்தைச் சார்ந்த தகராலய ரகசியம் எனும் நூலில் உள்ளது. மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம் என்ற வள்ளுவர் வாக்கு நன்கு சிந்திக்க வேண்டியது. (கண்=இடம்).

நமது எண்ணங்கள் அளக்கப்படுகின்றன. எண்ணிலாத பல கால்களைக் கொண்டு உலகெங்கும் ஓர்கணத்தேகும் மனத்தை ஓம் என்ற கண்ணி வைத்துப் பிடித்து வளைத்து உள்ளே கட்டினால்

எண்ணமற்ற சுகத்தை எய்தலாகும் என ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் தாம் அருளிய முதல் மண்டல கருணாகரவேலன் என்னும் பதிகப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கையின் சீற்றத்துக்கு ஆளாகமலிருக்கவும், சீர்கேடுகளால் பாதிக்கப்பெற்ற நிலமங்கை நடுங்காமலிருக்கவும், மற்றும் பல விபரீத விளைவுகளைத் தவிர்க்கவேண்டி, அனைவரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் வகுத்துத் தந்துள்ள நற்பண்புகளை ஏற்போம்; நடைமுறைப்படுத்துவோம்; நலன் பெறுவோம்.

இனிவரும் வாழ்த்துப் பாடலுடன், குரு கிருபையால், இந்நூல் முதல்பாகம் இனிதே நிறைவு பெறுகிறது.

வாழ்த்துப்பாடல்:

விழுமிய பொருளாய் நாளு
மிளிர்குகக் கடவுள் வாழ்க
குழுமிய தொழும்பர் வாழ்க
குருவுடன் சீடர் வாழ்க
தொழுகுலத் தவர்கள் வாழ்க
துகளறு தவங்கள் வாழ்க
வழுவறு மறையு மாக
மமுஞ்சொன முடிவும் வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

அருணகிரிநாதரும், பாம்பன் சுவாமிகளும்

(இரண்டாம் பாகம்)

நூன்முகம்

அருவமொரு நான்காகி யுருவமொரு
நான்காகி யறையி ரண்டும்
மருவியுள வுருவருவ மொன்றாகி
முத்திறமும் வழுத்தவொண்ணாப்
பெருவெளிக்கு மப்பாலா யுள்ளபொரு
ளீதெனவே பெரிதுஞ் சேயோன்
ஒருவனையே புகழ்ந்தவரு ளருணகிரி
சேவடிப்போ துளத்துள் வைப்பாம்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள், தாம் இயற்றியுள்ள ஆறு மண்டல நூல்களுள், மூன்றாம் மண்டலத்தைச் சார்ந்த தகராலய ரகசியம் எனும் பெயருடன் விளங்கும் அனுபூதி நூலில், ஸ்ரீமத் அருணகிரிநாதர் துதி என இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலின் கருத்து வருமாறு:-

''சிவம், சத்தி, விந்து, நாதம் ஆகிய நான்கும் அருவம்; பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன் ஆகிய நான்கும் உருவம்; சதாசிவம் அருவுருவம் ஆகிய இவ்வொன்பது நிலைகளையும் உடையவன் முருகன் என உணர்வார்க்குக் குகேசன் ஏகனாய் இருந்து அருள்புரிவான்.

அவ்வொருவனையே புகழ்ந்த அருள் நிறை அருணகிரிநாதனாரின் சேவடிகளை நமது உளத்துள் பதித்து வாழ்வாம்,'' என்பதேயாகும்.

இனி, இப்பாடல் இயற்றியருளிச் செய்துள்ள அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதீக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளைப் பற்றி சிந்தை செய்வோம்.

செந்தமிழ் நாட்டின் தென்கீழ்த்திசையில் விளங்கும் திருத்தேவை என்னும் திருவிராமேச்சுரம் பண்டை நாளில் கந்தமாதன பர்வதம் என்ற பெயர் பூண்டிருந்தது.

பத்துத் திசைகளுக்கும் இரதத்தைச் செலுத்தும் ஆற்றல் பெற்றிருந்த தசரத சக்கரவர்த்தியின் திருக்குமாரரான இராமச்சந்திரமூர்த்தி, தென் இலங்கையை ஆட்சி செய்த இராவணாதியரை சம்ஹாரம் புரிந்த தோஷ நிவர்த்திக்காக மணலால் இலிங்கம் பிரதிஷ்டை செய்து வழிபாடு புரிந்தார். அந்த இலிங்கம் இராமலிங்கம் எனப் பெயர் பெற்றது. அத்தலம் இராமேச்சுரம் என வழங்கப்பட்டது.

திருஇராமேச்சுரத்தின் வடபால் பாம்பன் என்று ஒரு சிற்றூர் பண்டை நாளில் துறைமுகமாக செழுமையுடன் விளங்கியிருந்தது. இங்கு பாம்பணையில் பள்ளி கொண்ட பெருமாள் கோயில் ஒன்றிருந்தது. கடல் கொந்தளிப்பால் அக்கோயிலும் அதைச் சார்ந்த நிலப்பகுதியும் கடலில் மூழ்கி விட்டது. எஞ்சிய நிலப்பகுதி, பாம்பணை என்றாகிப் பிறகு பாம்பன் என மருவி வழங்கப்பட்டு வருகிறது.

பாம்பன் பதியில், சிவாலய அகத்திருப்பணி வேளாள குல திலகவள்ளல் திரு.சாத்தப்பப்பிள்ளை என்பார் இல்லறம் நல்லறமாக நடத்தி வந்தார். அவர் தமது இல்லத்திற்கு விஜயம் செய்த அடியவர்கள் தேவையை அறிந்து தக்க உதவி புரிந்து வாழ்ந்து வந்த புனிதர் ஆவார்.

திரு.சாத்தப்பப்பிள்ளைக்குத் திருவிராமேஸ்வரத்தில் ஒரு சுக்கிரவாரம் சூரியோதய வேளையில் ஒரு ஆண் மகன் உதித்தார். அக்குழந்தைக்கு அப்பாவு எனப் பெயர் சூட்டிப் பெற்றோரும் உற்றோரும் உளம் மகிழ்ந்தனர்.

அப்பாவு உள்ளூர் பள்ளியில் கல்வி கற்றார். தமிழாசிரியர் முனியாண்டிப் பிள்ளையிடம் செந்தமிழ் பயின்றார். அவர் தமது தந்தைக்குச் சொந்தமான தென்னந்தோப்புகளைப் பார்வையிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அவ்வாறு ஒருநாள் அதிகாலையில் சென்றபோது தென்னந்தோப்பைப் பார்வையிடத் தமது தந்தை வந்துள்ளதைக் கண்டு தென்னந்தோப்பின் வாயிலின் பக்கமே நின்றார்.

அந்நேரம் அப்பாவு தம் கைவசமிருந்த தேவராய சுவாமிகள் பாடிய சஷ்டிகவசம் எனும் புத்தகத்தைப் பார்த்தார். அக்கணம் அவரது உள்ளத்தில், ''யானும் குமரக்கடவுளைப் பாடுவேன்,'' என்னும் துணிபு தம்முள் துண்ணெனத் தோன்றியதை உணர்ந்தார்.

அவ்வேளை, இந்திரன் திசையில், புறத்திருளை அகற்ற அருணன் தனது கிரணக் கைகளால் கடவுளைத் தொழுவதைக் கண்டார். மாந்தரின் அகத்திருளை அகற்றவல்ல ஞானசூரியனாம் குகேசனை அக்கணமே அப்பாவு நனி சிந்தித்து விண்ணப்பிக்கத் தொடங்கினார்.

''என் ஆண்டவனாகிய குமாரபகவானே! பாடியே அறியாத யான், தேவரீரைப் பல பாக்களாலும் பாடக் கடவேன். அருணகிரிநாதரின் பெயர் வைத்தே பிரபந்தம் முடிக்கக் கடவேன். அவர் வாக்குபோலவும் எனக்கும் வாக்குண்டாகும்படி அருள்வீராக,'' என வேண்டிக் கைகூப்பி நின்றார்.

அக்கணமே தம்மை அறியாமலே தமது வாக்கில், ''கங்கையைச் சடையிற் பரித்து'' என்ற விசேட மங்கல மொழித் தொடர் தோன்றுவதாயிற்று.

உடனே தமது அரையில் செருகியிருந்த வெள்ளிப் பூக்களிட்ட தந்த எழுத்தாணியை எடுத்து ஆங்கே கிடந்த பனை ஓலையை வகிர்ந்து ஏடாக்கிக் கொண்டு, அம்மங்கல மொழித்தொடரை ஆரம்பமாகக் கொண்டு ஒரு பாடலைப் பாடி, அதனை பனைஓலை ஏட்டில் எழுதி முடித்தார்.

அப்பாடலை எழுதி முடித்ததும், இறைவன் சன்னிதியில் ஓதுவதுபோல அப்பாடலை ஓசையுடன் படித்துவிட்டு, ''இறைவா! இப்பாடலை ஒப்புக்கொள்ள வேண்டும்; இனித் தினமும் உணவு ஏற்பதன் முன் ஒவ்வொரு பாட்டு பாடக் கடவேன்'', எனக்கு குகேசனை வேண்டிக் கொண்டார்.

அவ்வாறே தினமும் ஒரு பாடலாகப் பாடினார். அவைகளை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்தார். பாடல்கள் நூறு ஆயின.

அப்பாடல்களை எழுதியிருந்த நோட்டுப் புத்தகத்தைத் தமது தந்தையார் புரிந்துவந்த வாணிபப் பணப்பெட்டி மீது வைத்திருந்தார்.

ஒருநாள் அங்குவந்த சேதுமாதவ ஐயர் எனும் பெரியவர் அப்பாடல்கள் எழுதியிருந்த நோட்டுப் புத்தகத்தைக் கண்ணுற்றார். பாடல்கள் மகிமையை நன்குணர்ந்த அவர், அப்பாவுவைத் தமது இல்லத்திற்கு வரவழைத்து, விஜயதசமி இளங்காலை வேளையில் இரோமேச்சுரம் அக்னி தீர்த்தத்தில் அப்பாவுக்கு முறைப்படி திருவாரெழுத்தை உபதேசம் செய்து வைத்தார்.

தவசீலர், சேஷகிரிராயர் என்ற பிராமண உத்தமர், அப்பாவுக்குக் குமரகுருதாசர் எனப் பெயர் சூட்டினார். ஆயினும் அன்பர்கள் அவரைப் பாம்பன் சுவாமி எனப்பரிவோடும், பாசத்தோடும் போற்றி வருகின்றனர்.

நரை, திரை செய்யும் பிறப்பை ஏற்றுப் பரமன் புகழ் பாட வந்த அப்பாவுக்கு இதுவே கடைசி பிறவி; கரு நசிக்கும் பாம்பன் பதியில் வாழ்ந்துவரும் காலத்தில் மக்கள் அனைவரும் உய்தல் வேண்டி, இறைபுகழ் பாக்கள் பாடியவர், உரைநடையிலும் 1000 வினாக்களுக்கு விடை பகருமாற்றான் 32 வியாசங்கள் இயற்றினார்.

ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய பாடல்கள் பல இறை பிரீதிக்கு உற்றவைகள். தாம் பாடிய முதல் 52 பதிகப் பாடல்களை ஒருநாள் தமது வீட்டு மேல்மாடியில் மாலை வேளை, இறைதிருமுன் ஓதுவதுபோலப் பாடி முடித்த அளவில் சேய்ப்பரமன் மானிட வடிவுடன் அவர் முன் தோன்றி அருளுரை வழங்கி மறைந்த சம்பவம் நிகழ்ந்த காலம் கி.பி.1891க்குச் சரியான கர வருடம் ஆடி மாதத்து ஒரு சுக்கிர வாரமாகும்.

அதே கர வருடம், கார்த்திகை மாதம் வண்ணக் குழிப்புடை பரிபூஜன பஞ்சாமிர்தம் எனும் ஐந்து பாடல்கள் பாடினார். அப்பாடல்களை இரு அந்தண சிரேஷ்டர்கள் திருச்செந்தூர் கவுண்டர் மண்டபத்தில் தொடர்ந்து ஓதி வந்தனர். ஒருநாள் அப்பாடல்கள் ஓதுவதைக் கேட்டுக் கொண்டிருந்த முத்தம்மை எனும் மூதாட்டி காணுமாறு செந்தில் பெருமான் தோன்றி வண்ணபாராயணப் பிரீதியை வெளிப்படுத்திய உண்மைச் சம்பவம் நிகழ்ந்த காலம் கி.பி.1919க்கு சரியான சித்தார்த்தி வருடம் சித்திரை மாதத்து ஒருசுதினம் என்க.

இவ்வாறான, மகிமை பொருந்திய இறைபுகழ் பாடல்கள் இயற்றிய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் காலம் 19ம் நூற்றாண்டு

எனக்கண்டோம். அவர்கள், தமது ஞானகுருவாக ஏற்றுக் கொண்ட ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகளின் காலம் 15-ம் நூற்றாண்டு ஆகும்.

புகழ்முனியாம் ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் பால் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் கொண்டிருந்த ஈடுபாடு எத்தகையது என எவராலும் கணிக்க இயலாது.

ஞான உணர்வினைத் தந்து, பேரின்ப வீட்டினில் உறையும்படி உபகாரம் புரிந்த குருபிரானை மறக்கக் கூடாது என்ற உண்மையை உலகினர் உணர்ந்து உய்யவே அப்பேருபகாரியை நன்றியுடன் நினைந்து போற்றிப் புகழ்வதைத் தம் கடமையாகக் கொண்டு ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் தாம் அருளிச் செய்த ஒவ்வொரு பதிகத்திலும் ஸ்ரீமத் அருணகிரிநாதனாரின் திருப்பெயரை பதித்துப் பாடி மகிழ்ந்தார் எனக் கொள்வோம்.

ஸ்ரீமத் அருணகிரிநாதரின் திருப்பெயர் பதிக்கப்பெற்ற பாடல்கள் அனைத்தும் இந்நூல் இரண்டாம் பாகமாக முழுமையாக மண்டல வரிசையில் வழங்கப் பெற்றுள்ளன.

புகழ்மிகு சொற்றொடர்கள் விளங்கும் இப்பாடல்களை உள் உருக்கத்துடன் ஓதுபவரின் உள்ளம் களி கொள்ளும்; நா இனிக்கும்; வினை ஒழியும்; மலங்களும் ஓய்ந்துவிடும். செம்மையடைந்த மனம் அமைதியடையும். சீவன் உயர்கதியடையும்; ஐயமின்று.

அன்பர்கள் இப்பாடல்களை ஓதி, அவைகளில் பொதிந்துள்ள நுண்பொருள்களை உணர்ந்து அனைவரும் தம் வாழ்வைச் செம்மை செய்து கொண்டு வருங்கால சந்ததியினரும் வளம்பெற ஆவன புரிவார்களாக.

இன்னருள் புரியவல்ல இப்பாடல்கள் மண்டல வரிசையில் இந்நூல் இரண்டாம் பாகமாக அமைக்க அருளிய குரு கிருபையைப் போற்றி மகிழ்வோம்.

இங்ஙனம்

அடியார்க்கு அடியவன்

6.6.2002 **அ.கிருஷ்ணஸ்வாமி**

உ

முதல் மண்டலம் குமரகுருதாச சுவாமிகள் பாடல்

பதிக எண் **பாடல்கள்**

1. மூவர்மறை யாகம புராணேதி காசாதி
முனிவருங் கணநாதரும்
முப்பத்து முக்கோடி தேவரும் பணியுநின்
முக்கியபத வாரிசத்தைக்
கேவல மயக்கவெளி யேன்பணிய வோதரங்
கிஞ்சித்து மில்லைநின்றாட்
கிருபைகொண் டுன்பதம் பெறல்சுலப மென்றுனைக்
கிட்டினே னிட்டம்வைத்துத்
தீவிர தரப்பெரிய கருணைசெய் தளியரிய
திவ்வியமெய்ஞ் ஞானமௌன
சிவராஜ யோகனே தவராஜ ராஜனே
செப்பரிய முத்திமுதலே
ஆவியர் சுவாமியே **யருணகிரி நாதனுக்**
கருடந்த குருநாதனே
அருமறை புகழந்ததிரு முருகசிவ சரவணத்
தாதியே யமரர்கோவே.

2. வெள்ளறுகு ளான்விண்டு விதியண்ட ரனைவரும்
விறப்புழுவ லோடுபணிய
வேதமுனி வோர்புகழ வெள்ளிமலை யமருமலை
வில்லிக் கரும்பொருள்சொன
வள்ளலே யென்கவலை வாடவொரு தந்திரம்
வகுக்கவரும் விமலவித்தே
மருமலர் கதம்பகத் தூரியணி பணிபந்த
வன்னவே டகமிலைந்த
கள்ளிக டருங்காம வெறியேறி வீணுய
காலங் கழித்திடாது
கருணைபுரி பதமலர்க ளுளமிசை யிருக்கக்
கருத்தொன்று நல்கியருளாய்
தெள்ளறிஞ **னருணகிரி** யுள்ளத்தி லொழியாது
தித்திக்கு மின்பரசமே
சிறைப்புண்மலி காவடர் திருப்பரங் கிரிமேவு
சேயே சிவானந்தமே.

3. திரளாய திரவியப் பிரபுவை யடுத்தெளிஞர்
சீவனஞ் செய்யுமுறைபோல்
தேவாதி தேவனெனு முனைநா னடுத்தெனது
சிந்தையி னலக்கணெல்லாம்
அரைநொடியி லேயவித் தத்துவித முத்திநிறை
வடையவென் றுறுதிகொண்டேன்
அறையுமிம் முறையிலொரு நீயுநா னுந்தொந்த
வாட்டியனும் பூத்தியனுமென்
றுரையிடற் கோரைய மின்றுன தியற்கையின்
னுவகையென் கண்ணில்வளர
ஒருகிருபை புரிதியரு ளருணகிரி புகழீச
வுபநிடத முனைவர்முதலே
இரவுபக லற்றபர வெளியிலெக் காலமு
மிருக்குமின் பப்பெருக்கே
இஞ்சிவளை மந்த்ரமலி செந்திலி லமர்ந்தவெழி
லெந்தையே கந்தசிவமே.

4. உலகிலெச் செல்வமுந் தவவிழுப் பத்தினா
லுண்டாகு முன்பினாக
உறவுள்ள துன்பெலா நீதிமு னநீதிபோ
லொழியுமென் றிறைவனூல்கள்
சொலும்வண்மை யானுமற் றுத்தியனு பவமெனச்
சொல்லளவை யானுமந்தத்
துகளறு தவத்தினின் றுஞ்செல்வ மிலையென்று
துணிவதுந் தவமானது
நலனற்ற பொய்யுரை வியர்ப்பிவைக ளாலழிவு
நண்ணுமென வுய்த்துணர்வதும்
நாணாளு நற்றவத் துயர்வதுந் தவமுள்ள
நல்லவர்க் கேயுண்டிநாள்
உலைகின்ற வெற்குமவ் வூழுள்ள தோசொலா
யுரனருண கிரியடிகளே
உலகனைத் தும்புகழ் திருப்பழநி மலைமேவு
மோங்கார குருநாதனே.

5. மின்னெறியு மணியோக நிறைமௌலி யாறினும்
விளங்குபிர காசமல்க
வீரமுள வாகுவணி பளபளென மின்னியுயர்
விண்மணெங் கும்பிறங்க
அன்னமென் னடைபயிலெ னன்னையிரு வருமினிய
வன்புகெழு மொழிகள்பன்ன
அருணகிரி முனிகண்டு பூசித்த வடிகளி
லனந்தகிண் கிணிகளலற
வன்னமயின் மீதிவர்ந் தென்னெடிய குறைதீரும்
வரநல்க நீவரவினம்
வைகலோ வாரமோ மாதமோ வருடமோ
வயசுமுடி வோவறிகிலேன்
மின்னனந் தங்கோடி யென்னநடு வெளியிலெழு
மெய்ஞ்ஞான வாதிக்கமே
வீரமுள தேவர்தவ மேவுறுவர் தொழுததிரு
வேரக மமர்ந்தவேளே.

6. மின்னாயி னும்வந்து வந்தவ ணொளித்திடும்
விடக்குட லொரீஇயாவி
வெளியேறின் மீண்டுமதி லேவருவ தின்றிதனை
மெய்யென் றிருந்துசௌரி
தன்னாணை யின்படி பிடிக்கவுட் பட்டுறுவல்
சானிலையி னானுழலவோ
சராகவுல கினரிவன் பேயனோ பித்தனோ
சனியன் பிடித்தவுயிரோ
எந்நாளு மறிவற்ற பேதையோ வென்றிகழ
வெம்பிரா னுன்னைநாடி
இகத்தைத் துறந்துதுற வறவிருஞ் செல்வத்
திருக்கவரு ளாய்கொல்விபுதர்
மன்னார் குழாமடு கணாளதிரு **வருணகிரி**
மனதுக் கியைந்த குருவே
மங்காத வின்பர் செறி குன்றுதோ றாடல்வதி
மஞ்சார் பெருந்தகையனே.

7. தக்கோர்கள் சந்ததமு முழுகுசிவ கங்கையிற்
றலைமுழுகி யுள்ளூரிலே
தகையாக மலர்திவ்விய மலர்களை யெடுத்தரிய
தலமெனும் புலியூரிலுன்
பொக்கமி லடிக்கணெழி லர்ச்சனை புரிந்தெனது
புந்தியி னினைந்தவெண்ணம்
போலநிறை வேறிநல் லானந்த மண்ணவருள்
புரிவதினி யென்றுபுகலாய்
சக்கிரதரன் முதலான புத்தேளிர் சுகர்வாமர்
தசரத விராமன்மொய்ம்பு
தங்குமுசு குந்தனுஞ் **சந்தமுனி யெந்தையுஞ்**
சாலவந் தித்ததேவே
துக்கமண வாதபர தத்வப்ர காசமே
சுத்தவெண் குணவத்துவே
தோகைமயி லேறிநட மாடுவள நீடுநற்
சோலைமலை மேவுகுகனே.

8. கல்லிலு மிரும்பிலுங் கடுவயிர வாயிலுங்
காசினியி னாருரிக்கக்
கற்றவர்கள் வந்தாலு மென்மனக் கல்லினைக்
கண்டுபின் னிடுவரந்தோ
சொல்லரிய நின்சரண பங்கேச மக்கலிற்
சுகமாக மலருங்கொலோ
துகளற்ற வொருகருணை புரியினா னுய்யும்வகை
தோன்றுமிஞ் ஞாலவாழ்வு
நில்லா தெனக்கருதி முதனூ லுரைக்குநெறி
நிஜமென் றுணர்ந்தனுதினம்
நேசித்த வாருணியு **நிஜவருணை முனிவனு**
நிரம்பவந் தித்தபெரிய
வல்லப மிகுந்தவொர் சிதாகாச ராசவென்
மனவெம்பல் காதியருளாய்
வளமொழு கிராமேசர் தளிமேலை வாயிலில்
வளர்குமர குருநாதனே.

9. சலிலநா ரச்செறி வொதுக்கினவை யிருகரந்
தட்டுமுன் கூடுமந்தத்
தன்மையினு மதிவிரைவு கொண்டுகுவி நீருள்ள
சஞ்சலக் குப்பைநாளும்
மலிகின்ற வன்றிம்மி யுங்குன்ற வில்லையே
மலவிருளி னானிருந்து
மாதவஞ் செய்யவிட மாமோ விளக்கின்றி
மையிருளி லுள்ளபொருளை
உலகிலெவ ரறிவருன் னருளலா தேவர்மெய்
யுத்தியோ கத்துயர்ந்தார்
உயர்கருணை செய்துகவ லட்டிடா **யருணகிரி**
யுள்ளத் தமர்ந்தகுருவே
மெலிவினல் ஷட்சமய தேவாகி யவைகட்கு
மேலாகி நின்றநிறைவே
வீடுதரு ஞானநட மாடுபுலி யூரில்வளர்
மீளிவடி வேலிறைவனே.

10. வெள்ளைமலி வெள்ளைமிலை வெள்ளைவிடை வள்ளலுடை
வெள்ளைமலை ஞெள்ளலாய
விபூதியெல் லாமருளு மபிராமி சிவகாமி
விதரணச் சித்திபலவும்
உள்ளநல சித்தர்கண மெல்லாமு னடிமையே
யோங்கார வுருவமுற்றிவ்
வுலகினி லுலாவுமுயிர் முத்தரொடு பத்தர்களு
முன்னடிமை யன்றிவேறோ
வள்ளிபுனை வள்ளிசுர குஞ்சரி மனோகரா
மதர்வருண கிரிபுங்கவா
வாசா மகோசர விலாசகரு ணாலயவென்
மனதிடை நிமிர்ந்தபொல்லாக்
கள்ளவலி காதியுய ருள்ளந் தனைத்தந்து
கரிலற்ற நிலையில்வையாய்
கருணையடி யவர்பரவ விலகுதிரு வருணைவளர்
கருதரிய முருகையனே.

11. சீவஞா னக்கிரியை களைமறைத் துளவாம
தேவரது திரோதசத்தி
சிறிதுமா றியபோது மர்த்தபா கந்தணந்
திடுபோது மற்பபாகம்
ஓவுறா தெஞ்சிநின் றிடுபோது முயிர்கட்
குயர்ந்தசத் தினிபாதமாய்
ஓதுகுறி யுண்டாகு மென்றுமிரு கேந்திர
முரைக்கின்ற விவரத்திலே
பாவியே னுக்கேது மிலைகொலோ நின்னருட்
பவுள்சினை யவாவியொன்றும்
பலியாது வறியனா நிற்கவோ விப்பெரிய
பாழுருவம் வந்ததென்று
கூவியிங் கழுமெனக் கார்தஞ்ச மாமோகை
கூரருண கிரியீசனே
கூற்றனுயி ருண்டபர மேட்டிசுத னென்குமர
கோட்டம தமர்ந்தகுகனே.

12. என்னைநீ பணியென் றெனக்கறிவு தந்தநா
ளெந்தநா ளந்தநாடொட்
டிந்தநாள் வரையுமுன் றன்னையே கூவினே
னெவனென வுசாவினாயின்
றுன்னுடைய சமுகத்தி லேனுமென் குறையெடுத்
தோதிவதி லறியவெனினும்
உரியவர்க ளில்லையெளி யேன்மிக மயங்கிட
வொளித்தவிட முந்தெரிகிலேன்
இந்நிலந் தன்னிலே நின்னறிவு கொண்டவர்க
ளெவரையுங் கண்டிறைஞ்சி
இன்னநடை யின்னபடி யென்றுணர வென்றானு
மிதுவரையி லுங்கண்டிலேன்
சொன்னமொழி விபலமா குங்கொலோ **வருணகிரி
சுவாமியே** சுகநேமியே
சுப்பிர மதர்ப்பவிர் திருத்தணிகை வெற்பிலுறை
சுப்பிரமணி யப்பிரமமே.

13. தனியே யிருந்துகண் மூடியைம் புலவழித்
தடமடைத் துள்ளியங்குஞ்
சதுர்வித மனாதிகர ணங்களை யொடுக்கியொரு
சமநிலையி னின்றுனருளிற்
கனிவுற் றிராதபுன் மதியனே னெனினுமுன்
கருணைப்பிர தாபமகிமை
கழறுநன் னூல்களின் சம்மதப் படிநிதங்
கத்துவதை விட்டதுண்டோ
புனிதமொடு கேட்டவர்கள் கண்டவர்கள் பாலினுன்
புகழினை மதித்துவிரிவாய்ப்
போதித்து மகிழ்முறைமை நீத்ததுண் டோநீ
புறம்பென் றெனைக்கழிக்க
அனிமாலி னஞ்சனிப் பற்றபர தெய்வமே
யருணகிரி புகழண்ணலே
அளிசெறிந் தறைவளம் பெருகுதிரு மலைமிசை
யமர்ந்தசிவ குகசம்புவே.

14. பருவமொரு மூன்றனையு மாறுவார் விண்ணிற்
பறப்பார்த முடன்மறைப்பார்
பகலையிர வாக்குவா ரிரவுபக லாக்குவார்
பார்ப்பரிய பரமாணுவைப்
பெருமுண்ட மாக்குவா ரதனையணு வாக்குவார்
பின்னுமுன் னுஞ்செல்லுவார்
பீதகத் தட்டையோ டாகவனை வாரதைப்
பீதக மெனப்பண்ணுவார்
அருமையா கியவட்ட சித்தியுங் கண்டுள
மடங்கிமெய்ஞ் ஞானபீடத்
தமர்ந்துனது பதநலன் சேருவார் நின்சீட
ரருளிலேன் யாதுசெய்வேன்
தெருளருண கிரிநாதன் மளமளென வென்றறை
திருப்புகழ் துளைத்தசெவியோய்
திருநீடு பதியாய கயிலாச மலைமேவு
சிவஞான குருசாமியே.

15. துயரார் புறப்பற் றறாதவர்க் குள்விழைவு
தொலையாது தொலையுமாயிற்
சுத்தவீ டடைவதுஞ்ச சத்திய மசத்தியந்
துவ்வாத துறவெய்துபு
முயனிலையி லெய்தறிவு பொன்னிற் பதித்துள்ள
முழுமணியை யொக்குமாதர்
மூசிவளை யில்லறத் தெய்துபே ரறிவா
முதுக்குரை விரும்பின்மணியாம்
இயலிவ் விரண்டறிவும் வழிபடுதெய் வத்தினுடை
யிணையடித் தகவுகொண்டே
ஏற்றுய்ய வேண்டுமில் லாவிடி லவம்போ
மெனுந்துணிவி னிற்குமெற்குன்
தயவிரங் காவிடின் வருங்கதி யெதோசோண
சயிலநா மத்தனரசே
சராசர மெலாநிறை பராபர சதாநடன
சண்முகா னந்தசிவமே.

16. பலபுருடர் போகத்தை நச்சுபொது மாதெனப்
பலதேவ லோகபோகப்
பரிவைநச் சாதுகற் புடையபெண் ணொப்பவொரு
பரகதியை நச்சியிச்சை
திலமளவு மில்லாம லாங்கார மதனிற்
செனித்தூதை யைப்போலவே
திரிதரா நின்றசுழன் மனதினை யடக்கிவரு
திமிரம் பிளந்தருளினால்
இலகியரு ளறிவிக்க வறிவிழி மலர்ந்துன்னை
யிடையறா மற்கண்டுகொண்
டெந்நாளும் வாழ்வதே நல்லுத்தி யில்லுத்தி
யேதுக்கு நித்திரையினும்
நிலவுமுணர் வொன்றுமே துஞ்சா திருப்பதெனு
நிச்சய மறிந்துமெந்தாய்
நிறைகருணை யருணகிரி புகழ்பெரிய தெய்வமே
நிட்களா னந்தகுகனே.

17. பிறப்பிறப் பென்பவை தரும்பல விருப்பொடு
பிணக்கார் வெறுப்பகன்று
பேதக வழக்குஞ் சழக்குங் கடந்துட்
பிணைந்தவிருண் மலமகன்று
விறப்பென்னு மச்சமு மகிழ்ச்சியு மகன்றுயிர்
விளங்குதரி சனமகன்று
மேல்கீழ் புறஞ்சிறிது பெரிதுநீ ளங்காலம்
வினையிரண் டொன்றெனாது
துறக்கமே லோர்புகழ் வியோமபரி பூரண
சுகப்பிரம மாமுன்னொடு
தோயுநா ளெந்தநா ளந்தநா டூரமோ
சொல்லியரு ளல்லலணையிற்
சறுக்கிநிதம் வீழ்கிறே னாளருண கிரியெந்தை
சாமியே யருணேமியே
சலனமறு மெய்ஞ்ஞான நிமலசுக சன்னியாச
சரவண பவானந்தனே.

18. சுத்தமா நல்லறிவு தோன்றாத பாதகன்
றுதைபொய் யுளேனென்னினுஞ்
சொல்லுறுதி யில்லாத பொல்லாத வஞ்சகன்
சூதக விநாசனெனினுப்
பத்திநெறி பழகாத பாமரன் கொடுமையே
பண்ணுமுழு மட்டியெனினும்
பழிபாவம் யாவுமொன் றாகக் குழீஇயவொர்
பருவுரு வுளேனென்னினும்
எத்தனை சழக்கிங னிழைத்திருந் தானுநா
னின்னுமறி யாதுசெயினும்
எப்படியு மாதரித் திமிழரு ளிகைத்துநீ
யெனையாள லுன்பரங்காண்
முத்திமுத லேபுகழ் படித்தகோ னாடுமறை
முடிவான கர்த்தவ்வியமே
முத்தரொடு சித்தரும் பருகுமமிர் தம்பொழிய
மூடுமா னந்தமுகிலே.

19. பொய்வாழ்வு வையகம் பொய்யென் றடங்கவென்
புரைமன தடங்கிநிட்டை
புரியவொரு காலத்து நனிகண்டி லேனெனது
புதையிடை யிருந்துநிமிரும்
மெய்வாய் கணாதியிந் திரியங்க ளெல்லாம்
விரும்பியென் சம்மதத்தை
மேவியோ தூங்குகின் றனவிவை யனைத்துக்கு
மேலாய துட்டமனது
செய்கைவிட் டுள்ளடங் கித்துரிய நித்திரை
செயுங்கொலோ செய்திடற்குச்
செய்யுமொரு தந்திரஞ் செய்யவென் றாலுநான்
செய்யும்வகை யேதுமறியேன்
மையல்கொண் **டருணகிரி வந்தித்த கடவுளே**
மயறபுத் தென்னையாளாய்
மதிவளரு மிதயமரை மலரிலொளி யாயென்று
மருவொரு குகப்பிரமமே.

20. இனியவட மொழியமுத முண்டுதென் மொழிவார
மென்றகட லைக்குடித்தோ
ரிணையிலா வுன்சரிதை கூறும்வலி கொண்டன்பி
லேறுமொரு கச்சியப்பர்
மனதிடை வதிந்தபொரு ளேவீணை நாரதன்
மனக்கவ றபுத்தபதியே
மாணா றெழுத்துச்ச ரிப்பவர் நினைப்பினி
மதித்தரு ளருட்பரவையே
கனிமலர்க டந்தம்பர் நளிர்நிழல் செய்யருங்
கானமார் மலயமுனிவன்
கருதுமொரு கடவுளே கருணைபெரு **கருணகிரி
கவிகளி லமர்ந்தபரம**
புனிதனே குமரகுரு தாசனென வெற்குமொரு
புகழ்தந்த வாபுணர்ந்தாள்
பொற்புறுவர் நச்சுமொரு சிற்பர வெளிக்குள்வளர்
பூரணா னந்தகுகனே.

21. உப்பேறு சிந்துத்தி ரைத்தூவல் விஞ்சிப்பொ
னொப்பாய்ம லிந்தெங்குமா
ஒப்பேறு மண்டிட்டு றச்சேத ரங்கிற்க
ணுட்காவி ருங்குந்துகால்
எப்போது நன்குற்றி டக்காவல் கொண்டடத்த
வெஃகோடி யங்கும்பிரான்
எட்டேறு பந்தக்கு ழுப்பாற வன்பர்க்கு
ளெக்கால முந்தங்குவோன்
அப்பாவு சந்தத்தி லிப்பாவி ளம்பிக்கொ
ளத்தாவெ னுங்கந்தவேள்
அஃகாத வின்பத்த ருட்டேவ னென்றுட்கொ
ளச்சோடி றைஞ்சன்புளோர்
தப்பாது துன்பற்றி மிழ்ப்பாவி னஞ்சொற்ற
தக்கோனு ரங்கண்டரோ
சற்போத சம்பத்து மெய்ப்போக மும்பெற்றார்
சத்தாவ ரிங்கங்குமே.

22. அஞ்சு ரும்புவிழு முண்ட கக்குரவ
னப்ப னுக்கிளைய சேயெனும்
ஐங்க ணைக்கிழவன் வந்து லாவுமக
மான விச்சட மெடுத்துநான்
பஞ்ச ரப்பறவை போல வீதறுதி
பட்ட பங்கமது போதுமால்
பாவ நாசமெனு நின்வி ழிப்பரிசு
பற்றி யென்றளைக ளாயுள
பஞ்ச பாசமு மறுத்தெ னைப்பெரிய
பார்வை கொண்டுதரி சித்தவண்
பரம னாமுனை யறிந்த ளாவிமிகை
பாற்று மார்க்கமினி வேண்டுமீ
கஞ்ச வீயடியி னருளி னின்றுபுகழ்
கழறி னோற்கருள் புரிந்துளோய்
காம நாசர்குரு நாத னேயமரர்
கர்த்த னானகதி ரேசனே.

23. ஓதிம மேசில் பிகஞ்சிவ றூதுண
மொகர முலாவுவளம்
உயரொர் சிவேதை மலைக்குறு முனிவ
னுவந்து பணிந்தபத
நாத வுபாசகர் நேச கிருபாகர
நாயக மாமௌன
ஞான நிதான சதாசிவ தாரக
நாயகி மாதேவி
காதல பாதல பூதல மீதல
காரண மாயைமுதால்
கருணை மலர்ச்சியி **னருண கிரிக்கொரு**
கதியருள் சிற்கடவுள்
பூத சைந்ய புராண புராதன
போத விலாசவருட்
போக சமரச விசாக வெனக்கருள்
புரிசர வணபவனே.

24. சிவையணி யார்சங் கரிபயி ரவிதிரி
புரைபரை மீனங் கணிமர கதவலி
சிலைநுத லாரம் பிகையுடை யொருதிரு - முருகோனே
திசைமுக னார்தங் கெருவம ழியவுயர்
பிரணவ மாகும் பொருளைவி னவனக
சிறுமையி லாவின் **பருணகி ரிபுகழு - மிறையோனே.**

25.

26. **அருணகிரியென்று** மலையைக் குறிப்பிடப்பட்டுள்ளது.

27. பரமுத்த னானதிரு வாதவூ ரன்சென்ற
பாதையைத் தெரிவதென்றோ
பட்டினத் துப்பிள்ளை பத்திரகிரி யார்நின்ற
பண்பையினி துணர்வதென்றோ
திருவுளத் திற்கினிய **வருணகிரி** நக்கீரர்
சென்றநெறி சேர்வதென்றோ
சேக்கிழார் நம்பியதி ராவடிகள் கல்லாடர்
திருநெறியி னிற்பதென்றோ
உரவிளம் பெருமா னறுங்கபிலர் நற்பரண
ருற்றநடை பற்றலென்றோ
உயரறி விலாவேழை யறிகிலே னுன்னையே
யுள்ளபடி நம்பினேனால்
தெரிவரிய வறிவான தெய்வமே யாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

சரியையுங் கிரியையும் புதுமணக் கோலச்
சடங்கென நினைந்துகொளவும்
சகயோக மணவறையுண் மணமகளு மகனுமுள
தரமென வறிந்துகொளவும்
அரியமெய்ஞ் ஞானமபி மானமச் சந்துறந்
தணைதலென வுய்த்துணரவும்
அங்கணுண் டாகுமின் பதையிருவ ருஞ்சொலா
வதிகுய்ய மென்வோரவும்
எரிநிரய யாதனையை **நூறருண கிரிநிலையு
மிதுவே** யெனத்தெளியவும்
எண்ணினே னெண்ணக் குறிப்பினை யறிந்தென்று
மிவனமக் கடிமையெனவே
திரிபுகே டில்லினிய வருள்புரிந் தாளரோ
தித்திக்கு முத்திமுதலே
தெள்ளறி வெனுஞ்சலதி பொங்குமுள் ளூரில்வளர்
சிவசுப்பிர மணியதேவே.

28. வழிவிட்டு விசுவத்தி லுழனிற்கு ளுளபெரிய
மருளிரிய மாதவமிலார்
மொழிபற்றி மருவுற்ற பவமற்று ளலைவுபடு
முரணிரிய வாதைமிகவீ
கழிவற்று வரவற்று நிலைநிற்க **வருணகிரி**
கவியணிய வாவியணிதே
அழிவற்ற பரனொப்பி றுடிகொட்டு முருகனயி
லரையனடி நாடுமனமே.

29. பையலோ டிணங்கே லென்னும் பழமொழிப் படியோ வுன்றன்
துய்யமெய் யுளத்து ளுள்கித் தோன்றிடா திருப்பாய் நல்ல
மெய்யுணர் வாய மேலும் பையலென் றுள்க லாங்கொல்
செய்ய**தீ வரைப்பே ரெந்தை தெய்வமே** கருணை செய்யே.

30. கன்னி மாரறு வர்க்கட்ட சித்தியைக்
காத லாயன் றதிர்த்த பிரானுறை
கன்னி நாட்டங் கயற்கண்ணி தன்னகம்
கண்கு ளிர்ப்புற வுள்ளகைக் கிள்ளையே
தென்ன விர்ந்துயர் தென்கயி லைப்பதிச்
செல்வ னுக்குந் **திருப்புகழ் செப்பிய**
என்னை யாளுடை யானுக்குஞ் சாமியே
யென்னை யீகரு ணுகர வேலனே.

31. பொன்னுக்கு மண்ணுக்கு மின்னுக்கு மாகப் பொருந்துமனந்
தன்னைக் கெடுத்திடல் வீடென்று தேராச் சழக்குநெஞ்சர்க்
குன்னைத் துதிக்கு நெறிகசப் பாமவ ரொட்டெனக்கேன்
வன்னிச் சிலைப்பெய ரோன்பர மாசிகி வாகனனே.

32. இருளாமல மறுத்தாயிடை யென்னைநீதர வருளின்
குருவாய்வர வேண்டுங்களி கூர்ந்தேகொள வேண்டும்
அருளாலுயர் **தண்ணந்தமி ழனுபூதி யறைந்தோன்**
மருமாமலர் கொடுபூசைசெய் வலியாரயி லரசே.

33. அணுவான சீவன் பிராரத்து வத்தை யனுபவிக்குங்
குணமேற்ற போதங்க ணாகாமி யத்தையுங் கூட்டுமிது
மணமாதைப் புல்கு பவன்வேறு மாது மருவலொக்கும்
உணர்வோது **கந்தரனுபூதிடி யத்தனெஞ் சுற்றபொன்னே.**

34. சண்முக நிச்சய மோர்ந்து **திருப்புகழ் சாற்றினவன்**
தெண்மதி யோங்கவிழைத்த குகாநெடுந் தீயவினை
கண்மடித் தாளரு டான்பதி வானெக் கருளுமெல்லும்
உண்முகத் துன்னைவைத் தேநிற்ப ரன்ப ருலகிலன்றே.

35. ஆசேதுமி லாநின்னுடை யனுபூதி யடைந்தே
தேசோடுன தடிமேயவொர் **தெருளாரரு ணகிரி**
ஆசானென மிளிர்தாரக வரசேயெனை யாளென்
றேசாதனை புரியாயினி யெய்தாய்துயர் மனதே.

36. கரியா னனத்த னிளையோ னெனத்திகழுமேசகத்துளுமலிப்
பரியோ யுனொப்பிலருளா னினைத்தபடியே சுகிக்க **வருண**
கிரியார் தமக்கு நெடுவாழ்வளித்த கிருபாளு நித்த நினையே
பிரியாத நட்பிலடியேனை வைத்தபெரியோ யணைத்து மருளே.

37. இல்லா னென்னறி வில்லாத பேதைபோல்
நில்லா துன்னடி ஞேயத்தில் வைத்தருள்
அல்ல நீர்த்தரு **ணைப்பெய ரான்சொலுஞ்**
சொல்லிற் காசைகொடுத்திருத் தோன்றலே.

38. வீட்டிலிருக்கும் விளக்கைவிட் டேவெளி யேநெருப்புக்
கேட்டுத் திரியு மதியிலி போலுனைக் கீழ்நிலையோர்
நாட்டிற் கருதகிறாரந்த நாட்டமெ னாட்டங்கொலோ
பாட்டிற் புகழரு ணைப்பெய ரோற்குற்ற பண்ணவனே.

39. தீரன் சுகனேர் கிளரொள் **ளருணைப்**
பேரன் குகன்வீ ணைவரன் பிரமன்
சூரன் முசுமா முகனீள் சுகமே
சேரும் படிசெய் பவனென் சிவனே.

40. வெண்ட லைக்கைய ராடறக் காட்டழல்
விவர்ண மாயையைச் சுட்டடக்குந்தரம்
தொண்ட னேன்கண் டகங்களி கூர்ந்துனைத்
தொழுமெ னாதுரு வைத்தெரிந் தங்ஙனே
கண்டி டுந்தெளி வாலுன் னருட்பிர
காசத் தோடுங் கலந்துய்ய வேண்டுமால்
அண்ட வாண வணாமலைப் பேருடை
யானை யாளறு மாமுகத் தெய்வமே.

41. பசுவே றரன்சுதனைப் பக்குவந்தா னுள்ள
பசுவைவதைத் துண்ணும் பரனைப் - பசுவெல்லாங்
காப்பவனைக் **கந்தரலங் காரஞ்சொன் னோனிறையை**
நீப்பின்றி நெஞ்சே நினை.

42. வேத நெறிக்குப் புறம்புளோ ரூனுண்டு மெய்யறிவாம்
வேத மடைய விலைகொலென் பாரந்த வேதமுயர்
வேத மிலையிழுக் கென்றுண ராது விமலர்தந்த
வேத வழிநின் றுள**சந்த மாமுனி மெய்யிறையே.**

43. அறிவின் பெருமா ணறிவீ ருளர்பால்
அறியா மையினீ ரறிவீ ரிலர்பால்
அறிவாய் நிறைவா னினைமின் களறா
அறிவா ரருணைப் புதனா தியையே.

44. எஞ்சா வருணைப் பதியிருந்த **வெந்தை யருண கிரிக்கன்றால்**
அஞ்சே லஞ்சே லெனுமபய மளித்த வேலிற் கிறைவனடி
கஞ்சந் தன்னை நினையாநாள் கசட்டு நாளந் நாளதனைப்
பஞ்ச மாக்கிக் கண்ட வெல்பண் டிகைநாள் பரிவுப் புவியாரே.

45. எப்பொரு ளினுமிக் குயர்வுடை மதியை
யெவர்பரி பூரண மாக
ஒப்பொடு முளரோ வவர்பிரா மணரென்
றோதிடு நான்மறை முடிவை
இப்படி மிசைமுற் நூலுடைப் பார்ப்பா
ரென்பவர் மட்டுமோ வடைவார்
அப்பனல் லருண கிரியிறை யருளா
லனைவரு மினிதடை வாரே.

46. அருட்கச நாயகி யருட்குற மாதரு
கிருப்ப மணித்தவி சிருக்குமெம் பெரும
என்று மிளைஞனா யென்று முதுவனாய்
என்றுமுள்ளோய் **இன்புகழ் முனிக்கு**
நீசொன நிட்டை நிலையை
ஏசறு வாய்மலர்ந் தெற்குஞ் சொல்லே.

47. அஞ்சொனயம் விஞ்சிய வருட்புகழ்க ளந்நாள்
நெஞ்சுருக வோதினவ னெஞ்சுழி யிருந்தோன்
தஞ்சமென நிற்குநர் தயங்குவர்கொ லென்றும்
சஞ்சலம் லந்தநிலை தன்னையடை நெஞ்சே.

48. அருணைநாத னறிவினால்
மருவு தேவ மணியருள்
முருக வேளை முழுவதும்
கருதும் யோகு கமழுமே.

49. அன்பிறை யினியவுட் சமயவொண் பகலுக்கு
மளியில் பரசமய நிசிக்கும்
அன்புடைய யிறையென வமைந்தவை களுக்குயர்
வாயசித் தாந்தவிண் மணியாய்
இன்படைந் தவருண கிரிகுரு வெனச்சொலு
மேதமின் முருகைய னாகி
நன்குடை யீசனுக் குரைத்தது துணிபென
ஞாயவா திகள்விளக் குவரே.

50. நாயக மானார்க் கெல்லா நாயக மானாய் போற்றி
தாயென வருவாய் போற்றி சண்முகத் தரசே போற்றி
தீயரிப் பெயரோற் கன்று தெய்வமுங் குருவுமான
நீயெனைக் கலந்தாள் போற்றி நித்தனே போற்றி போற்றி.

51. நிற்குமெ னுருவைக் காட்டி ஞேயமோ டருளிற் கூட்டிச்
சிற்பர மளித்தி தேவ தேவனே சரண நாளும்
பொற்பதம் விழைவார்ப் போற்றும் புண்ணியா சரணமெம்மான்
அற்புத வருணைப் பேரா னத்தனே சரண மன்றே.

52. ஏழையிங்கே யினிப்பிறக்க ஞாயமில்லை
காணெவையு மினிமை யில்லாப்
பீழையெனத் தோன்றிநினை யடைதனிஜ
மெனுங்குறிப்புப் பிறங்க லானும்
ஊழுறுதி போழ்ந்தாளு முருத்திரனா
முனையடுத்த தானு மோவா
ஆழவருட் கடலருணை யான்வாழ்வி
லென்னையும்வை யமிர்த விண்ணே.

53. **ஓது செந்தமி ழானி ரம்பனு பூதி சொன்னவ னோடு**நல்
மோத மாமொழி பேசியேதமு டங்கு கொன்றருள் சேயவன்
வேதன் விண்டுவ லாரி செம்பதி வேட்பு றாதவன் வாழ்வவாஞ்
சேத னந்தழை வுற்ற தேயெங்கள் சிறுமை நீக்குயர் செல்வமே.

54. அரியசெந் தமிழை விரிசடைப் பொதிய
வாரியற் கருளி**வெள் ளேனம்**
தெரிவரு மலைப்பேர் முனிநவி றமிழ்ப்பாச்
செவிமடுத் துளமகிழ்ந் தவற்குத்
தரிசன மான சரவண பவனே
தாசனைத் தடுத்தாட் கொள்ளும்
திருமலி யுன்காற் றுணைதனை நம்பித்
திரியவெ னாவலித் தேனே.

55. நேசமுற் றோர்பா னிறையுநல் லறிவே
நினைவினி லெழுந்தொளிர் சுடரே
மாசினல் லருணா சலத்தவ னிறையே
மலரடி பணிகுமர குரு
தாசனைக் காப்போ னானெனுந் தேவே
சரவண பவசிவ குகனே
பேசிய பேச்சா னானிங னிழைத்த
பிழைபொறுத் தாள்வதுன் கடனே.

56. ஐந்துதிற நவிலவுள வுலகினடை தரவுரிய
வனவரத வுயிர்கஞ்யி ரெனவுமறிவி
லைந்தினர செனெவுநிறை யமலவருண் மயவனக
வவிசனவி சமதுவித ரகிதவுசித
விந்தைமிக வுள**வருண கிரிதமிழி னிரத**நுகர்
மிகையில்செவி யினனெனுமெ னிறையருளினான்
விந்துமன வொழிவடைவ னெனையடைவ னருளடைவன்
மிளிரமலை பரமகதி யினையடைவனே.

57. செந்தமிழைச் செவிமடுத்து மகிழுந் தேவைத்
திறலிடும்ப னுயிர்முருக்கி யெழுப்புந் தேவைப்
புந்திநிறை வுடை**யருண கிரிசூழ் தேவைப்**
புகரிகந்த கரவருடங் கடக மாதம்
வந்தவொரு புகரிரவிற் பழநிக் கோவில்
வரவிஞ்ஞான் றருளவில்லை யருள்வே மந்நாள்
பந்தமற வருதியெனப் பணித்துப் போந்த
பண்ணவனைப் படர்பவரெம் பரமர் தாமே.

58. கொடுநிழ லவிய வந்த குறையோவ வின்பு
குறையாத பேறுமுறவே
வடுவறு கவிகள் சொன்ன வருணகிரி யென்று
மறவாது கொண்ட சரணம்
குடிகொளவு ளஞ்சி யஞ்சி யிவைபாடு கின்ற
குமரகுரு தாசனாளம்
அடியடைய நேடி நிற்கு மருளார் குகேச
னடியவர்க் கடிமைநாமே.

59. கனலிகண் ணிழல்கொளல் கடுப்பமுக் கட்டையும்
நினைவையும் விழுங்கியே நிருவிகற் பப்பலன்
தனையிடற் **கருணையன் சாமிதா ணம்பிடே.**

60. **சுமதியுடை யருணகிரி** தோத்திரித்த மாட்சிமையே
குமரகுரு தாசனுக்குக் கோதிலரு ணீட்டிறையே
சமரசசு பாவநிலை தனிலமருங் குகதேவே
திமிதநிலை தந்தருளாய் சிவலோக சுந்தரனே.

61. ஆளு நின்னடி யன்றிமண் ணாசைபொன் ணாசை
நீளு மென்குழன் மங்கைய ராசையி னீங்காக்
கோளு ளோர்களு ஞானிக ளோ**புகழ்குயின்றோன்**
நாளு நாடிய தெய்வமுள் கெனைவளை நபமே.

62. அகண்ட பூரண வருட்பெருஞ் சோதியை
அகண்ட பூரண வானந்த வாரியைச்
சொல்லற நிற்குந் தூய வெளியைச்
சொல்லின் மதுரஞ் சொரியருட் கனியை
நினைக்கி னினைந்து நிகழ்ந்து பற்றுபு
நினையா தேனீங் கிடுமோ ரியற்கையைத்
திருவரு ணகிரி சிந்தித்த தேவை
உருவரு வின்றி யொளியிரு ளின்றிச்
சுத்தசித் தாகச் சூழ்ந்து
சத்திய முத்தி தானடை வாயே.

63. மூச்சுமன மற்றிருப்பார் வேட்புறு
பராபரமா முதல்வா நீதான்
மாச்சரிய முடையென்னோ டிருந்துமதி
தூரமென மறைந்து நிற்றல்
ஆச்சரியத் தாச்சரிய மேயதனை
யானறிய வருளல் வேண்டும்
பூச்சனிப்பி லாவருண கிரியிறைவ
நான்புகழும் புனித வேளே.

64. ஏர்த்தமி ழாலுனை யேபுகழ் வோரைப்
பார்த்தரு டேவப **ரஞ்சுட ரோதிப்**
பேர்த்திரு வாளன டைந்தவொர் பேற்றிற்
சேர்த்தரு ளாயெனை யுஞ்சிவ சேயே.

65. ஊறுவி லங்கினமே மன மேக லங்கினமே லெத
னாலுய் வேனநி யாயமே யிது கூறு மேலொர்நி யாயமே பசி
வாடிவ ருந்தினனோ கனி காய ருந்தினனோ வெயில்
வாடை யாலயர் வேகொள்வா னினியாவ தேதுயர்வே
கொள்வானெனும்
ஓர்சுர குஞ்சரியா னுரியோர்சொன் மஞ்சரியா **னனு**
பூதி மாமுனி யாதியா ரடியார்வி டாதகி யாதியானறை
யீகவே லவனடி யீகவே.

66. உருவளர் கட்டழகா
நரநிமிர் கொக்கரியே
எரிவரை மற்குகனே
வரமருள் சிற்பரனே.

67. அன்றருணை நாதற் களித்த பெருநலமே
இன்றெனக்கு மீந்தா ளிறையே பரஞ்சுடரே.

68. இன்பக் கடல்படிந்த வெந்தை யருணகிரி
அன்புக் கிசைந்தவனை யாளவுரை பொன்மயிலே.

69. அண்ண லருணகிரி யன்புக் கிரங்கியவோர்
தண்ணளிதந் தாளெனையுந் தாய்போற் குருபரனே.

70. எம்மா னருணகிரி யீசா வுனைமருவும்
செம்மாப் பெனுள்விரியச் செய்யாய் சதாசிவமே.

71. ஆனந்த வாழ்வை யருணகிரி நாதனுடை
யீனமறுத் தாண்டகுக னீயுமென்றுந் தேர்ந்தேனே.

72. சொல்லே றரும்புகழ்கள் சொன்னபெரி யோனடைந்த
எல்லா நலமுமெனக் கீந்தாள் பரம்பொருளே.

73. ஈரெண் சகச்சிரசந் தப்பா வியம்பியமெய்
ஆரியனை யாண்டவின்ப வன்பேசம் பூரணமே.

74. சேரணி யோயுயர் தேகமு ளோய்போர்வெந்
திரிசூ லதரா சிகிவரை யொலிமுனி தேசிகனே
சாரிய னேகுண சாகர மேசார்திண்
சருவா பரஞ தகைகெழு புலிமுனி தாழ்பெரியோய்
தேரது லாவறு சேகர னேசீர்வண்
டிருநீ றணிவோய் திகில்வெலும் வலியருள் சீறடிதா
கோரமி லோயொரு கோகருள் கோனார்வங்
குரவார் புயனே குகையுரு மலைவளர் கோமகனே.

இரண்டாம் மண்டலம் - முதற்கண்டம்

பதிக எண் **பாடல்கள்**

1. தன்னையறி வேனேற்கொளுன் றன்னையறி வேனின்
றென்னையறி யாதேயினிச் செயுமாறென நொடியாய்
மன்னேமயி லேறுங்குரு மணியேகிரி புகழ்ந்த
அன்னேயெனை யாளுந்திரு வருளேதிரு வருளே.

2. ஊரும் பேருரு வுஞ்செல் லாகவென் றூரும் பேருரு வுந்தரித்
தாருஞ் சொல்லற் கருஞ்சொல் லொன்றை யருள்செய் தங்கிச
மாக்கொளுஞ்
சீருடைக்குரு மூர்த்தி யேயிவன் செய்யும் விண்ணப்ப முய்யவே
சாரு டைப்புகழ் பாடி னோன்கண்ட சண்மு காவறி வாயரோ.

3. வாளா ரக்ஷியெழில் வளர் வள்ளி மனோகரமே
நீளா திக்கமெனுஞ் சிவ நேசகிர் பாகரமே
கோளீ னங்குறுகாப் புகழ் கூறின வன்பரனே
ஆளா தேபோனா லணுப் போதினி யுய்யேனே.

4. சிட்டி காவ லொடுந சிப்புந் திரோப வஞ்செவ் வருட்ட யாவும்
மட்டி லாம லேந டாத்த வல்ல மையுள் ளோய்வி னோதச்
செட்டி யாக வடிவு கொண்டோய் சீத்தி சொனவற்கருள் புரிந்தோய்
தட்டி லாவுன் னடிப்பண் போதுந் தாசனானின் னடைக்க லம்மே.

5. விண்ணா டுறைநா ரதனா சிரியா வியன்வா ருணியீசா
மண்ணார் முசுமன் னனையாள் சிவனே மதியீ புண்ணியனே
பண்ணார் புகழ்பா டினவன் பதியே பரனார் குருநாதா
அண்ணா வடிபே ணியவென் கவலை யறநீ யருள்வாயே.

6. இந்திரன் முனிவர்க ளேத்துபொற் சரணான்
செந்திரு நகரிடஞ் சேர்ந்ததில் வாழ
அந்திருப் புகழ்பா டினவருக் கபயம்
தந்ததைத் தருவது சரவண பவவே.

7. நீண்ட வாழ்வுடை நித்த வகத்தியன்
பூண்ட மாவனு பூதி புகன்றவன்
காண்டல் கூர்பலர் கண்ணா யிருந்தவை
ஆண்ட வன்பெய ராறக்க ரங்களே.

8. இட்டமா மருடா னில்லையே யாயி
னிங்கியா னுய்ந்திலே னந்தோ
சிட்டர்பா லனனே திகழ்விழுப் பொருளே
திருப்பரங் கிரியுறை சிவனே
கட்டுமா ணவமாங் கயிற்றினை யறுத்தென்
கவலையின் றிறங்கடி யாயோ
மட்டிலா வகுப்பை யுரைத்தவ னிறைவா
மதியயிற் சுயம்பெரு மாளே.

9. பவமழிப் பவனே சிவமளிப் பவனே
பரிவுடைத் துவிநவ நயனா
நவமொழிப் புகழ்ப்பாச் சொலினவர்க் கிறையே
நச்சினார்க் கினியவெம் பரனே
உவமையிற் படியா வடிவுடைத் திருவே
யுறைநிலைச் சீரலை வாயா
தவவருட் சனகா வுனைமறக் கினுநா
சாற்றிடுஞ் சரவண பவவே.

10. உம்ப ரும்பு கழ்வகுப் புரைத்த வன்றொ டுத்தசீர்
பம்பு மாலை யைத்தினந்தி னம்பு னைந்த பாவகீ
எம்பி ரானெ னக்குணிற்கு மேர கச்சு ரேசனே
சம்பு வென்ற டுத்தவென் றனைப்பு ணர்ந்து கொள்வையே.

11. முரணறு புகழ்சொன வருணகிரியைநிஜ முடிபுடை யறிஞனெனத்
தரணிய ருவவீணயர் புகழ வருளினவொர் தகரவெ ளியிறைவனே
பரவரு நெடுவள மலிய முகில்கள் கவி பலகிரி யுறைமுருகா
இரிபறு புரிவுட னெனையு மடிமைகொள விதுநல தருணமரோ.

12. பன்னொணாப் புகழ்தான் படித்தவன் றனைத்திருப் பரிவால்
இன்னனீத் திருக்க வுரைத்தசின் மயதின வெழிறான்
மின்னுமா சோலை மலைமனா நின்னருள் வேண்டற்
கென்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநன் நெஞ்சே.

13. மண்ணார் சீவனெலா மினு மாண்டெ ழாதவகை
பண்ணா நிற்குமருட் பர மேயண் ணாமலையான்
அண்ணா வென்னுயிரே யெனை வாவென் றேயழைய்ாய்
தெண்ணார் தென்பழநித் திருக் கோவி லுள்ளாயே.

14. அரியசித்தி யவிர்மதங்க ராசிறந்த வகுளி
யனாதிநத ராதிநத ரழகுமச்சேந் திரரும்
கரிலறுகோ ரக்கரொடு கககனநடை யுடைய
கடேந்திரர்ச தோகநதர் கருத்துறுசத் தியரும்
அருணகிரி யானுநினைந் தனந்தசித்தி படைத்த
அன்புகண்டு நின்பதத்தை யனுதினம்வந் தித்தேன்
பரிவுடனல் லருள்புரிதி பழநிப்பதி மேவும்
பவுடியதண் சரவணத்தம் பரமயவெம் மானே.

15. குலமி லாதவன் றலமி லாதவன்
கோளி லாதவ னாளி லாதவன்
மலமி லாதவ னாகு நீநெடு
மலையி லேறிய மார்க்க மென்கொலோர்
சலமி லாப்புகழ் பாடி னோனகந்
தாண்ட வம்புரிந் தாண்ட தேவெனைச்
சுலப மாகவிங் காண்டு கொள்வணந்
தூண்டு மாவினன் குடிச்சு ரேசனே.

16. மாயமா மளக்கர் வாழ்வினி லுழலு
மடனெனைத் தடுத்தருள் வணநீ
நேயமுற் றிடினிங் கெனகுறை யெனக்கா
நெறியிதன் மேலெது வருள்கூர்
வேயுறு தோளங் கயற்கணி மதலாய்
விரதர்கள் குருமணி **பதினா**
றாயிரம் புகழ்ப்பாப் படித்தவற் கருளிய
வப்பனே யொப்பிலா தவனே.

17. நற்றமிழ் பாடுநக் கீரன் **ஞானவெ ளியனு பூதி**
சொற்றவ னேத்தரு ளோனே தோகைம யிற்பரி யானே
இற்றையெ னக்கருள் வோனே யெங்கள் சிவபெரு மானே
குற்றமி லாமறைக் கோவே குன்றக் குடியுறை தேவே.

18. கயல்விழி மறிமகள் கணவனெனக்
கருதியிவ் வகிலமு ளேதமிழிற்
பயில்புகழ் சோடச நூறு தசம்
பன்னிய வறிஞனை யாளடிமை
தயவொடு கொண்டது போலெனையுந்
தடையறக் கொண்டிடு குருமுதன்மைச்
செயலுடை முருகென நிலவுவது
சிவசிவ சிவசிவ சிவசிவவே.

19. வாலுளக் குறமா னனிமதர்ச் சுரமா
மடவரன் மாமணத் தலைவா
வேலுடைச் சயத்தோய் விரைத்தொடைப் புயத்தோய்
வியன்புகழ் நொடித்தவன் பரனே
தோலுயர் வறுசொல் லுடையெளி யேனின்
றுயர்வலி கடிந்துநற் சுகமே
சாலுமா றருளாய் திருவுரு மலைவாழ்
சண்முகப் பெரும்பரம் பொருளே.

20. சங்கையி லுன்புகழைத் தினஞ் சாற்றிய வெந்தைபிரான்
இங்கெனை யுய்வித்தவ ருனை யன்றி யெவருளரால்
அங்கியின் மேனியனே நெல்லை யப்பர் விமானமுறை
பங்கமி லாயெனது வழிபாட்டினைப் பூர்த்திசெய்யே.

21. அரிய விண்ணவர் புன்கணை வீட்டிநல் லருண
கிரியி ருந்தவற் கருளிய கிருபைவள் ளாலுன்
உரிமை கொண்டுனக் கடைக்கலம் புகுந்துள நாயேன்
பரிவு கண்டரு ளாவிடி னெவரருள் பவரே.

22. துய்ய நின்றகவியி னாற்புகழ் சொன்னோன்
ஐய கேட்டிசெவி யகக்கர ணங்கள்
உய்யொ ணாமனனி யுறங்கிட நினைவேன்
மெய்ய னுன்புரிவை விடநினை யேனே.

23. விருப்புற் றுன்புகழ் பாடியு னருளை
    மேவி யேதமி லமுதமுற் றோற்கன்
றிருப்புச் சொல்லிய வெம்பெரு மானே
    யிணையில் பூரணத் திருமுரு காவல்
மருப்புப் பன்றியை மாய்த்தவல் லோயுன்
    மார்க்க மேகரு தார்சித டன்காற்
செருப்புக் குங்கடை யாகுவ ரன்னோர்
    செருக்கை நான்மதி யேன்மதி யேனே.

24. நீச்சுநிலை யற்றசன னக்கடலை நின்றனரு
    ளென்றபுணை கொண்டுகடந்து
பேச்சொடு பிணக்கில்சுக மேவியவெட் டாதமலைப்
    பேரனிறை யானதுரையே
ஆச்சரிய வாயிரம் பெயர்ப்பிரம மாகியடி
    யாரகமி ருக்குமுருகா
பூச்சியமி லாதவொரு பூச்சிய வகண்டபரி
    பூரண மெனக்கருடியே.

25. துப்புறழ் வாய்க்குறமா னினி தோடமு வுங்குகனே
அப்பனே யின்பநுகர்ந் தனு பூதிசொன் னோன்குரவா
ஒப்புட னெற்கருள்வோ ருனை யன்றி யெவருளரே
செப்பமொ டாட்படுவார்க் கருள் சிந்து புரத்தானே.

26. மண்ணும் வானமு மெச்ச வேபுகழ் பாடி னோனக மாமணீ
கன்னணி லாமட வோர்சி னேகித நீக்கி யுன்னொரு காமரே
எண்ணி நாளு மிருக்க வாக்கிய விட்ட நான்மற வேனினுஞ்
தன்னண றாவரு ளுந்தி மூழ்கியுன் றன்னே மேவ விழைத்தியே.

27. தெள்ளறி விற்சிறந்தே யனு பூதி தெரித்தவெந்தை
உள்ளறி விற்கலந்தே யொரு மோதநல் குங்குழகா
பொள்ளற் சடங்கெடுமுன் புரிவுற்றழுங் கென்னையுநீ
கொள்ளும் விதம்பணித்தா னனி கூடிக் களிப்பேனே.

28. வெள்ளிக் கயிலே மலேவாழ்வை வியனார் மோன ரகக்கழையைக்
கள்ளிற் பெரிய திருப்புகழைக் கழறி யிரியா வாக்கமுற்ற
வள்ளற் குள்ளங் குளிர்வித்த மழையா முகிலை வான்மணியை
உள்ளற் கரிய வெம்மானை யுள்ளத் துள்ளே வைத்தேனே.

29. காய்சரு கருந்து முவ்வோர் கருத்தினுக் கிசைந்து ளானை
ஓய்வறு புகழ்சொன்னோன்சொல் லொருவனைப்புறம்பா மார்க்கப்
பேய்கடா முணராச் சூரைப் பெருஞ்சிவ யோகர் பேணுஞ்
சேய்தனை யன்றி வேறு தெய்வநாம் வழிப டோமே.

30. உருநிலையிற் குழவிவடி வுடனி ருந்தே
யுயர்தந்தைக் கோம்பொருள்சொன் னதுவியப்பே
அருநிலையி லுயிர்தோறு மிருந்து மந்த
வாவிகட்கெட் டாதிருத்த லதிவி யப்பே
பெருநிலையி லரியனுமான் வீர வாகுப்
பெயருடையான் கொண்டவுருக் களைக்க டந்து
கரசிரங்கள் பலவோங்க நின்ற நீர்மை
கணிப்பவரார் **திருப்புகழ்சொன் னவனாண் மன்னே.**

31. **தேர்ந்தோர்துதி செய்யுந்திருப் புகழ்சொன்னவ னெஞ்சம்**
ஓர்ந்தேயருள் புரிந்தோனெனு முமையாள்சுத னடிக்கண்
வார்ந்தோடுநன் மதுநச்சிடு வரிபோலவ னன்பிற்
சார்ந்தேயிருப் போர்பானமன் றமர்தாநணு காரே.

32. **திருப்புகழ் நாவலன் றிருப்புக ழணிக்கு**
விருப்புடை வேலுடை யாயுனை மறவாக்
கருத்துளர் பிறிதொரு கருப்புகு வாரோ
உருக்கிய வுடம்புட னுனையடை யாதே.

33. கல்லாலி னிறைபோல வோங்குபர வோதிக்
கண்ணுறு பெயர்க்கறிவு தந்தோற்குத் தாசன்
வில்லாரும் பழநிமிசை வெண்கச்சை சார்த்தி
மிளிர்கின்ற வொருதண்ட பாணிக்குத் தாசன்
நல்லார்கள் போல்வைக்க நினைத்தென்னை நேடி
நன்னவிர முண்டிதமாய் வந்தோற்குத் தாசன்
எல்லாரு மேத்தருண கிரிகோற்குத் தாச
னெங்குநிறை விண்குமர குருதாச னானே.

34. மறந்தரிப் புற்றுளிர் தேடி நாடி மருவி யிப்புவியில்
இறந்துதிக் கின்றதை நீத்தி ருமினென் **றேசில் புகழ்பாடிச்**
சிறந்தவன் றம்பிரா னான கந்தர் திருவிற் சிறிதுகொளின்
பிறந்தலுத் திட்டநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே.

35. தேங்கிள ரண்டநிரை களைத் தன்பெருங் கர்ப்பமுட்
சிறு சிறு துக ளென நிறுவி யங்ஙனமே
தாங்கியு மப்பொருளி லுயிர் போலவி ராவியே
தகு குணங் குணி யெனச் சமைய வேவிரித்தும்
ஓங்கிடு மக்குணமொன் றிலி யென்னவு முள்ளதே
வொரு குக னென **வரு ணகிரி யுன்னிமகா**
வீங்கல ணைந்தபடி யவன் றுய்யநன் மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே.

36. **மோனர்கள் புகழருண் மொழியரு ணகிரியன்**
வானவ ரினுமதி யமுத மதியையுற
ஏனமி லருளரு ளினகுக னெனுமபி
தான னடிகணினை தளையிலை மனனே.

37. குற்றம் யாவும்பொ றுத்தருள் கூர்தியால்
அற்ற மற்றலங் காரம தீர்த்துளோன்
முற்றும் வாழ்த்திய மூர்த்திநல் லாலவாய்
உற்ற வொப்பில ருட்குகப் பிரமமே.

38. தத்துவா தீதத் தனிப்பொரு ணஞ்சிவ பெருமான்
வித்தைசால் புகழ்பா டியமுனி பாத்தொடை விரும்பிப்
பத்தர்பா டிடவே கன்னிநா டுறைதரு பாங்கைச்
சித்தமே நீயுள் கிடிலடை வதுவிழுச் சிவமே.

39. சொன்னய மிகுந்தகலை வேண்டுகில மேகலைகொள்
சுந்தரிக ளாசையுலகம்
பொன்னழி புலைப்புணர்வு வேண்டுகில மெய்யடி
பொருந்தவரு ளென்பவர்களின்
நன்னினை வறிந்தருள **வோபுனித சோணகிரி**
நாதர்குரு வாயவொருநீர்
தொன்னில வளங்கிளர் திருக்கொடும ளூர்நனி
துலங்குகிறி ரெம்மிறைவரே.

40. எரிந்தபுரி யைப்போல வுடம்பி ருந்து
மில்லாத வோங்கார சீவன்முத்தன்
பரிந்தவனு பவமதுதா னறையி னுள்ளே
பயில்கூத்தை யொக்குமந்த வுடம்பு நீங்கி
அரந்தையடு சிவத்தையடை விதேக முத்த
னனுபவமம் பலக்கூத்தை யொக்கு மென்றுள்
இருந்தறிவித் திட்டவரு ளறிவே **சந்த**
மியம்பியநல் லருணகிரி யிறையே போற்றி.

41. நாடரிய தெய்வமென வேமறைசொ லாறுமுக னஞ்சி வனெனாப்
பாடல்பல பாடியவெொர் சோணகிரி கண்டவிரு பத்ம வடியைக்
கூடவென நாமினிது கொண்டநடை கட்குதவி செய்த சுகுர்தர்
பீடணவி வாழிது பிரப்பன்வல சைப்பதி பிடித்த மனதே.

42. ஏசி லாத சுரேச ரோசக தீச ரோபர மேசரோ
காசி லாவரு ளாள ரோவுழல் கான டாத்தொரு தேரரோ
ஆசி லாவரு ணாச லப்பெய ரானி னைந்த குகேசரோ
பாச மாமல நாச ரோநமை யடிமை கொண்டவொர் பரமரே.

43. குமரா **நீடொளி யருணையின் பெயரோன்**
குருவே கோவே கூர்த்தவயில்
அமலா பாதக மடுசிவ மணியே
யடியேன் பாவிற் குரியோனே
தமமா நோவெனுங் கலிதனி லமிழ்ந்தோன்
றலைவா காவென் றொலித்தாலே
எமனீ வாவென வெடுத்தருள் புரியா
தவனோ நீவந் தருளாயே.

44. **தீஞ்சொ லருண கிரிசதா சிந்தை செய்ச டானனா**
ஓஞ்ச ரவண பவநம வோஞ்சி வாய நமகுகா
ஓஞ்ச ரவண குருபரா வோந மோந மவெனுமின்
பாஞ்சு சீலர் பதமலர் பரவச் சூர்கள் பாறுமே.

45. பத்தா மவ ரைச்சிந்தை பண்ணுதிசை
பத்தா மவ ருக்கிதிற் பாடுகவி
பத்தா படி யாயென் றவர்சொனசம்
பத்தார் புகழ்ப் பாவலர் தேவவரே.

46. **மட்டறு பத்தி கொண்டு புகழ்சொன்ன நாதன்**
மனம்போல வாக்க மளித்தோய்
சட்டியி னோன்பை முன்னாட் டவறாது செய்து
சயங்கொண்ட கோனுள் ளிறையே
தட்டறு மெங்க டேவே யடிநாடு வோரைத்
தயவாக நோக்கு முனையே
விட்டுவி டாம னன்கு பிடித்துக்கொண் டேனுன்
வியனீரத் தாலுய் குவலே.

47. கருத்தடங் காதார் ஞானங் கதைப்பது கருத்தி லாதான்
நெருப்பெனப் பொறித்த வேட்டை நேரடுப் பிடவைத் தூது
தரத்தினைச் சிவனு மென்றோர் பவரரி தாதா தேடும்
பொருப்பினா மத்தா னாள்சேய் பூரணப் பொருளே யன்றே.

48. கல்வியம்ப ரப்பினெல்லை காண்கினும்விண் வேந்தெனச்
சொல்விளங்கி னுந்தனுண்மை காணொணாது சோதியீ
நல்விவேக மஃதைநல்கு மென்றுசூழ்பு **கழ்க்கவிச்**
செல்வனேத்து தேவைவேளென் சிந்தையைக்கொள் கள்வனே.

49. பொன்றிக முங்குய மான்மகள் வான்மகள் புந்தி களிகூர
என்று மியங்கு**மெம் மான்புகழ்க் கோனிறை** யென்று துதிபாடு
கின்றவர் வெங்கவ னீங்கி நலங்கொளக் கேடில் புலியூரில்
நின்றரு ளுங்குக னென்மன தைக்கவர் நீர்மை யறியேனே.

50. பொய்த வாவுரை யேனை மேனிலை
போக வேயருள் கூர்**தென் மாகவி**
பெய்த ஞானவெளிப் பெய ரானு ளத்தேவே
பைத லாலிரு தேவர் தேடிய
பார மாதிரப் பேரன் மாதுதி
செய்த நாயகனே திருப் போரூ ரம்மானே.

51. உண்ணீ ரன்னஞ் செல்ல லின்றி யுயிரு ளடங்குமுனே
தண்ணீ ரென்று முள்ள வண்மைத் தணிகை நெடுங்கிரிவாழ்
தெண்ணீர் மைச்சு ரேசன் **சந்தத் தெருள னிறைஞ்சியகோன்**
கண்ணீ ராள ரன்பன் பாத கமலம் வணங்குதுமே.

52. சிந்தைமயங் காமலெனைச் சித்தாந்த வீட்டிடைவை
கந்தமணி தெய்வமகள் காட்டார் மகள்கொழுநா
சந்தமுனி நெஞ்சத் தடங்கமல மேயமுதால்
மந்திகுதி கொள்ளு மயிலமலை வாழ்குகனே.

53. மாறி லாக்கஜ நாயகி தன்னைநன் மணம்புரிந் திந்திரற்கோர்
ஊறி லாமுடி சூட்டுபு வள்ளியை யுவப்பொடு கைப்பிடித்துக்
காறி லாப்புகழ் பாடிய வெந்தையின் கருத்தினை நிறைவேற்றி
ஈறி லாதொளிர் கின்றவ னன்கிருப் பதுதிருச் செங்கோடே.

54. குருப்புகழர் விரும்புமருட் கூத்தினென்னை யாட்டாய்
கருப்புகழர் காணரிய கழுகுமலை முருகா
அருப்புகழர் நாடறிவி லனவரத மெனைவை
திருப்புகழர் புகழ்ந்தகந்த சிகரியுறை சிவமே.

55. நீறு மேலணி நேயர்க ணித்தலு மேத்துமோர்
ஆறு மாமுக னன்பரு ணப்பெய ராரியன்
கூறு மாதுதி கொண்ட பிரானொரு கோதிலான்
ஊறி லானுயிர் நாத னிருக்கை யுடுப்பையே.

56. சமாதான முடனுன்னை நினைத்தாலென் னுள்ளமெலாந்
தண்ணென் றாகும்
உமாதேவி சுதனாமுன் னடிபாடி வணங்கிலென துணர்வுள்
ளோங்கிச்
சமாராத னைக்குரிய வருணகிரி தண்ணளியுந் தானே யேயும்
குமாராய நமவென்னு மாறெழுத்து முச்சரிப்பார் குருவே
யன்றே.

57. அந்தத் தானடி யார்க்கினி யானல்ல
கந்தத் தான்கதிர் காலணி யானகைத்
தந்தத் தானறை தாங்கிய தாரினான்
சந்தத் தானளூர் சாடயி னாதனால்.

58. அன்னையின் மேம்படு கருணையி னாற்குக னடிகளைப்
புகழ்தாசன்
தன்னைமெய் யடியவ னாக்கவென் றகம்புறஞ் சார்ந்துவந்
தேற்றமதி
சொன்னவ னாயனு **பூதிசொன் னவற்குறு சூரறுத் தெவராலும்**
பன்னவொ ணாநல நல்கிய குகனுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

இரண்டாம் மண்டலம் - திருவலங்கற்றிரட்டு

இரண்டாங்கண்டம்

1. **வெள்ளியியல்:**

மகமுத னாதன் வழுவறு வேத - னெங்கோமான்
துகளறு போதன் றுதிநுகர் காத - னெங்கோமான்
குகவடி யீயென் பவருரை கொள்வோ - னெங்கோமான்
புகழ்பவர் நேசன் **புகழ்முனி யீச** - னெங்கோமான்.

2. **ஆசிரியவியல்:**

தலைகுனித லாகநவி றலும்விரல்க ளார்வலது
சயமுடியி லேறுதலு மிருகரமு மாசிரமே
தறுகுதலு மேனவிர முறுமிருகை யோடுபய
சரணவிரு சானுநில முறுதலும லார்சிரமேல்
இலகிருகை சேரவிரு சரணுரமு நேமிதொட
வியைதலும்வி சேடசிக ரமதுமிரு தோள்செவியோ
டிருகழலும் வாணுதலும் விரிதிணையி லேபடலும்
இணையவுன தேசிலடி தொழுதுபுகழ் வேனினும்வீண்
அலைமனதை யேகமென வறுதலமு ளேநிறுவி
யனுதினம்வி டாதுநினை யுழுவலுறு வேன்வெளியாய்
அவிர்திசையெ லாநினது சுயநிஜசொ ரூபமென
வகமகிழ்வொ டேகருதி வழிபடுவ லேயினிமே
னிலையறியு மாறருளி யடிமை கொள வேவருதி
நிமலமெனு மாதிசிவ னுடையகும ராவழகார்
நெடியதமிழ் பாடருண கிரிபுகழ்கொள் காதுசெறி
நிருமலகு கேசநெடு வயிரவடி வேலவனே.

3. **கலியியல்:**

மருணைவுறமெய் கருதுமறிஞர் மனமுண்டன மிடுகுருபர
கருணையிறைவர் புதல்வபெரிய கலைஞரினிது புகழறுமுக
அருணைவளரு மருணகிரியி னமலபரம சரவணபவ
இருணைவுறவு னடியைநினையெ னிடர்தொலைவுற வருடியருடி.

4. **வஞ்சியியல்:**

கடல்கவி மண்டிணிந்த காசினியீர் கேண்மின்
உடல்பொருள் கல்வியுத்தி யோக மரும்பூண்
திடமுடை யில்லமகார் சேர்சுற்ற நட்டார்
படைபாய்மா மொய்யென் பனவெல்லா நில்லா
எதனா லெனிற்பண் டிழைத்தவினைக் குள்ள
விதியா விளைந்த விதிகொடுதென் னாடர்
அதிதீ விரம்வருகா லன்னவரை நீயிர்
மதியா திருந்துய்ய மாட்டீர்-அதனால்
கடிகெழு புகழ்முனி கடவுளாஞ் சேயவற்
கடிமையாய் நின்மினென் னறையைப்
பிடிமினஃ தழியாப் பெரும்பயன் றருமே.

மூன்றாம் மண்டலம்

1. காசியாத்திரை

1. வேளுக்காட் பட்டவரே வேளாளர் மற்றையவர்
கோளுக்காட் பட்டகோ ளாளரந்த - **வேளுக்காட்**
பட்ட வருணகிரி பார்த்தநல் வேளாக்க
விட்டநினை நெஞ்சே யினி.

2. இழிவில் பெருங்கருணை யீசனெனுஞ் சேயோ
னழிவில் கருணைவிழைந் **தாசில் - கொழிதமிழ்சொன்**
னாவா ரருணகிரி நாதாவுன் றேவென்னை
மேவாத பண்பென் விளம்பு.

3. நாடுமதி காணூஉ நார்நறிதீ **கந்தனையே**
பாடுமரு ணாசலப்பேர் பண்ணவனே - பீடுடையுன்
றேவனையே நம்பிடுமிச் சிந்தையனை யன்னவனன்
காவணையா வாறென் னறை.

4. **இரக்க வருணகிரி யெண்ணத்தெஞ் ஞான்றும்**
வரக்கடவு ளாங்குகனை மால்சால் - குரக்குமன
மெண்ணா ததையாத்தவ் வீசனையெண் ணிக்கலுழுங்
கண்ணா ருறார்பின்னுங் கட்டு.

5. அனுபூதி பெற்றினிய வாறுபுகழ் கந்த
னனுபூதி சொற்றா னருளீ பரஞ்சோதீ.

6. என்பாட்டுத் தேவே யெரிவரையின் பேர்ப்புலவன்
றன்பாட்டுச் சாமீ தயவுடையா - யின்பாட்டுக்
காட்டியெனைக் கொள்காலங் கம்பலையி ராதெனலே
தீட்டஞ்சு மென்னெஞ்சின் றீர்வு.

2. பரிபூரணானந்த போதம்

1. மரணஞ் சனனம் பொருந்தார்நன்
மதிசே ராக்கம் பெறுவானுண்
பொருணன் கார்ந்த திருப்புகழ்தான்
புகன்ற வெந்தை யருட்கடலாம்
அருண கிரியா னகத்தமர்ந்த
வகண்ட வரிய குகப்பிரமப்
புரண வடியை யெஞ்ஞான்றும்
போற்றிப் பரவி வழிபடுவோம்.

3. தகராலய ரகசியம்

1. அருவமொரு நான்காகி யுருவமொரு
நான்காகி யறையி ரண்டும்
மருவியுள வுருவருவ மொன்றாகி
முத்திறமும் வழுத்த வொண்ணாப்
பெருவெளிக்கு மப்பாலா யுள்ளபொரு
ளீதெனவே பெரிதுஞ் சேயோன்
ஒருவனையே புகழந்தவரு ளருணகிரி
சேவடிப்போ துளத்துள் வைப்பாம்.

நான்காம் மண்டலம்

II சிறுநூற்றிரட்டு

1. இனமெனத் தொண்ட ரோடு மிணக்கிடுஞ் செட்டி காக்க
தனிமையிற் கூட்டந் தன்னிற் சரவண பவனார் காக்க
நனியனு பூதி சொன்ன நாதர்கோன் காக்க வித்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுடான் காக்க வந்தே.

2. நாலுமறை யேயாட மேனுதல்க ளாடவிய
னலியாத வெழிலாட வழியாத குணமாட
நாகரிக மேமேவு வேடர்மக ளாடவரு
ணயவானை மகளாட முசுவான முகனாட
நாரதம கானாட **வோசைமுனி** யாடவிற
னவவீரர் புதராட வொருகாவ டியனாட
ஞானவடி யாராட மாணவர்க ளாடவிதை
நவிறாச னுடனாட விதுவேளை யெணிவாகொள்
- அருண்மலிமுருகோனே.

3. அகத்தியனக் கீரனனி தவத்தினுயர்
நாரதனல் லருளே பெற்று
மிகுத்ததிருப் புகழ்புகன்ற கருத்துளனு
மேனையவுண் மெய்யோ ரெல்லாம்
மகத்துவமுற் றுய்யவடி யளித்தசிவ
னேயெழில்கொண் மயிலி லேறும்
பகத்தரள மேயுனது பதப்போது
பழிச்சவருள் பண்ணா யெற்கே.

4. ஞானவிண் ணாகின்ற தங்கம் - **நல**
நல்குந் திருப்புக ழோன்கண்ட தங்கம்
வானவர் மாமுடித் தங்கம் - நம்மை
வாழ்விக்க வந்த பராபரத் தங்கம்.

5. **தூயவெங் கோனன லாசலப் பேர்வள்ள றோத்திரத்து**
நாயக வெற்குக் குமர குருதாச நாமமொன்றிங்
கேயில கும்வணம் பாலித்த தண்ணளி யெம்பெருமான்
ஏயெனைச் சூழச் செயாயிரு ளீர்க்கும் பரிதியையே.

6. திருமுறை சொலாதவன் மறைமொழி கலாதவன்
சிவனெறி நிலாதசிதடன்
செலல்வர வெணாதவன் கொலைவினை விடாதவன்
றினுமுடை மறாதபுலைஞன்
குருவடி தொழாதவன் பெறுமொழி பெறாதவன்
குணநல னிலாதவறிஞன்
குகநம வெனாதவன் றுறவற முறாதவன்
குடிவெறி யறாதமுருடன்
முருகனு மயேசனு மொருபொரு ளெனாதவன்
முசுமன நையாதவிரதன்
முடிவுடை மகாபதம் பெறுவதி லையாகலின்
மொழிகறை நணாமலருடந்
தருளுமரு ணாசலந் தனிலத னைநாமமொன்
றழகொடு நிலாவநினதன்
படிமல ரையேயுளம் பணினவ னையாவணங்
கரையவெ னுளாடி யருளே.

7. வீரை யறப்புகழா ரியன் போனில்

8. வாசவன் றூசி மனக்கவ றீர்த்தனை
சந்தத் தொடர்பு சாலப் பொழிந்த
எந்தை யருண கிரிக்கரு ளிசைத்தனை
பிரமற் குட்டுபு பெரும்புவி படைத்தனை
பரமற் கோருப தேசம் பண்ணினை
ஆறு முனைவரை யாட்கொண் டருளினை
முசுமுகற் கருளினை முதுமல யத்துச்
சிறுமுனிக் கருளினை சீரிய புத்தேட்
சோழற் கருளினை யாழற் கருளினை
வாமற் கருளினை யிராமற் கருளினை
கீரற் காய கிருபைசெய் தருளினை
இன்னு மெண்ணிலர்ப் புறந்தனை யதனால்
என்னையு மென்போல் வாரையு மின்னே
ஆண்டு கோடற் கருளல்
வேண்டுங் கந்த கோட்ட வேளே.

9. தொல்விட் கருமு கிற்குங் கங்குற்கு மேலென
மல்கற் குழலு மட்டுந் தண்டொத்த தோள்களும்
சகுலிநஞ்ச மம்பைமோது விழிகளுங்க தம்பநாறும்
இருபறம்பும் வம்புபூசு கரதலங்க ளுஞ்சுலாவும்
நீரி லார்சுழி நேரொர் நாபியு
மலர்போ லடியுடை வள்ளி கேள்வனார்
புகழ்முனி சொன்னாடு செவியார்;

10. ஆரெப்படி முனினும்மது போலத்திரு வருள்கூர்
நாரப்பெரு மானாயழ னாகப்பெய ரானாள்
தாரப்பொருள் வேலற்பணி தகைமைக்குண வீர
தீரப்பெய ரோனைப்புகழ் தெருளர்க்கிலை சிறுகே.

11. வரதக்ருபாகர குமரபராபர
வரைவறு ஷாட்குண்ய
வஸ்துவெனற்புத சத்திய வித்தக
மரணமொடயனமிலா
வானவ ஞான நபோ மணியேதிரு
மாலயனறியாவோர்
மாமலையின் பெயரான் குருநாதவென்
மருடெறு மாமுனியே.

II சேந்தன் செந்தமிழ்

1. நாயார் நரியனார் நாட்டினொரு செம்மலிலாப்
பேயார் பறவைபுழுப் பெட்டல்கொண் - ணோயா
ருறுப்பிறுமுன் வந்தா ளொலிமுடுகு பாவோன்
கறுப்பறமுற் காணுமுரு கா.

III பத்துப் பிரபந்தம்

1. நயமுள புதுநறவு கமழடியி னவையிறய
வியல்பெனை யுறவெணுக வினிமைதரு கவெயினக
ரயனரி வெருவவெழு கிரியதுபெ யரனடிக
ளுயரரி சுதைபிரிய முளன்.

IV சஷ்டி வகுப்பு

1. சொன்னவர் மெச்சிட **மின்னுதி ருப்புகழ்**
பன்னிய வற்கரு ளின்னமு தக்கட
றோன்மரைப் பூவுறை செல்வமா - மரு
காவிருப் ப.ாலென துள்ளுளே.
தொடர்வெரு வறப்பெரிய வருள்புரி நினைப்பொடு
மறதியும்வி ளைக்குமிரு மலமத மறக்களை
சூர்தபு நினது சேணருளே - யுற
வாகிட வருள்செ யாயினியே.

V அனவரத பாராயணாஷ்டகம்

1. பாமகண் கறைபுக ழோங்கண பதியெழிற்
சீமக ணனிபுக ழோநமச் சிவாயவை
பூமகள் புகழுமை **பூம்புகழ்க் கவியிறை**
யேமக கனவருள் காத்தருள் கெனையே.

VI குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி

1. இறையவனெம் மான்குமர னெனப்புகழ்ந்த
வருணகிரி யீசா கந்தா
மறையவனுன் பூங்கழலை நம்பியநான்
கருவிகளின் வயப்பட் டோவுங்
கறையவனென் றாகாதென் னுடற்சுமையை
யினிதிறக்கிக் காத்து ஞானத்
துறையவனை யொல்லையினி லினிவேண்டே
னொருசிறிது முலகைத் தானே.

2. வருவா யறியா வெளியேன் மருடீ ரடிகேள் சரணம்
திருவார் புகழ்சொன் னபிரான் செல்வச் சிவமே சரணம்
பெருவா னெனவே நாளும் பின்றா வருளா லெனையாள்
ஒருவா னவனே யுன்சீ ருறுநர்க் குலகம் பரமே.

VII குமாரஸ்தவம்

1. **ஓம் புகழ் முனி பதயே நமோ நம:**

VIII செக்கர்வேள் செம்மாப்பு

1. சாற்றரு மருளா மிந்தச் சத்திகண் மாண்பு மின்னோர்
ஏற்றுள தலைவ னாகி யிலங்குமள் ளிலைவேற் செவ்வேட்
போற்றுதல் செம்மாப் பென்னும் பொருவில்பே ரின்பப் பீடும்
மாற்றமின் றுணர்ந்தே **சந்தன் வழுத்தினன் றமிழான் முன்னே.**

IX செக்கர்வேள் இறுமாப்பு

1. அவ்வனுக் கிரக மார்ந்தா லன்றியீ சன்றி ரோதம்
எவ்வகைத் தானு நீங்கா தின்பமு மாரா தெம்மான்
செவ்வருட் டிருமு னன்றோ **திருப்புகழ்ச் செல்வன் கண்டான்**
இவ்வழிச் செல்வ ரேசம் பந்தரா தியரென் போரும்.

2. வேலிறை யுலகின் மேற்றாய் விளம்பவோ ருலகு மில்லை
வேலிறை யடியார் மாண்பை விஞ்சடி யாரு மில்லை
வேலிறை யடிசார் சந்தன் விளம்பரு ளினுமேற் றின்றவ்
வேலிறை தொழுவோ மென்னும் விவேகமு மிறுமாப் பாமே.

X சீவயாதனா வியாசம்

1. பன்னிரு தடந்தோ ளெந்தை பாதமென் கமலம் வாழ்க
தென்னவிர் திருவ தேவ சேனையங் குறமின் வாழ்க
மின்னயி னவிரம் வாழ்க **வியனரு ணகிரி வாழ்க**
பன்னருட் குரவர் வாழ்க பரிவுடைச் சீடர் வாழ்க.

XI திருத்தல தரிசன காலங்களில் பாடிய கட்டளைக் கலித்துறை

1. சாம்பொழு தோர்செவி கேட்கினு நன்றே தரும்புகழை
யாம்பொழு தெல்லா மறைந்தவெம் **மானல் லருணகிரி**
யோம்பொழு தாக்கண் டிருள்கீண் டடைந்த வொருவனையே
போம்பொழு துள்ளத் திருத்துமின் பந்தம் பொடிபடுமே.

ஐந்தாம் மண்டலம் - திருப்பா

பதிக எண் **பாடல்கள்**

1. தோலென்பு நெய்த்தோர் புலான்மச்சை யெசமாய
தொக்கது தணந்தபின்னர்த்
தொல்லவா சிச்சூரின் வன்சிலதர் நோக்கியட
துப்பிலி சுசீலமில்லி
ஞாலமிசை யல்லவைச் சுமையா யிருந்துளோய்
ஞானப் படிற்றுநடையோய்
நன்னிலை யிலாதோ யெனச்சுளித் திருகவுளு
நையவெனை யறையினஞ்ஞான்
றோலமிடி னும்வாயி லறைவரெனு முருமுற்
றுளுக்குளே யுலைவதல்லால்
உத்தரம் பரவிவிடு தலைகொளற் கியலுமோ
வுன்றஞ்ச முன்றஞ்சமே
காலனதி காரங் கடந்தவிரு மருணகிரி
கண்டவொரு பெரியபொருளே
கரிசற விளங்கவரு சின்மயா னந்தமே
கருணைக் குகப்பிரமமே.

2. மானவ னுடற்குநிழ லன்னவா சாமூல
மலவுயிர்க் குள்ளபோத
வானிடை யெழும்புந்தி யானதுவு மப்போத
வானமு மொடுங்கவரிய
ஞானமய மானபே ரருளிலே தனதுசெய
னந்தநின் றிடல்கடனெனா
நவில்சரத சித்தாந்த நேரறிகி லார்க்கிந்த
ஞாயமோ துவதல்லவே
ஊனமில் லாதவிந் நிலையையுன் னடியனே
னுணருமா றருள் செய்தநீ
உற்றுய்ய வருளாது விடுவையோ நானும்விட்
டுழனெறி யினிச்சேர்வனோ
ஆனியறு மருணகிரி நாதனு ளுவந்த வோ
ரருள்கூர் குகக்கடவுளாம்
அமலநிச் சங்கசிவ சைதன்ய ககனமே
யானந்த பூர்த்தியுரமே.

3. ஒன்றெனு மபேதமு மிரண்டெனும் பேதமு
முறாமெளன சாந்தவோய்வை
ஓதொண்மை யத்துவித மோதாது முரணோதி
யுலகைக் கெடுக்கும்வினைஞர்
நன்றுசொல் சித்தாந்த மார்க்கத்தை யுள்ளுக்கு
ணாடிநா நிற்குநிலையின்
நமனாணை செல்லா தெனுந்துணிபு கொண்ணடையை
ஞாலத்தி னன்குநோக்கின்
வென்றியை விரும்பரவ கேதனன் சூழ்ச்சியையும்
வேட்கையையு மொக்குமிந்த
வீணாய புள்ளுவ மகம்புறனு மொத்துள்ள
மெய்யர்கணு முண்டுகொல்லோ
சென்றுவர லில்லெந்தை யருணகிரி யடிகளே
திளைகருணை யின்பநிலையே
சிற்ககன வெளியாகி யொளியாகி நிறையுமொரு
திவ்வியசுப் பிரமணியமே.

4. குத்திமிசை வாழுநன் மைந்தர்களு ளேசிலவர்
கூருறு கருக்குமட்டை
கொண்டுமலை வெட்டமுயல் கின்றதொப் பத்தமது
குற்சிதப் புன்மதிகொடே
முத்திற வகங்கார மாயையை மடித்தரிய
முல்லைபெற் றுய்குவமெனா
மூச்சைப் பிடித்துமல மூத்திர மருந்தியுனை
முன்னா துழன்றுசாவார்
அத்தன்மை யாவுமென் புத்திக் கொவாதேக
வருணெறியை நேடவைத்த
அப்பனே யென்னெண்ண மவலமா தற்கிடனு
மாமோ சொலாய் **நலஞ்சால்**
பத்திமைக் காரர்க்கு மருளருண கிரிபரா
பரமேயெ னன்பினிறைவே
பகனிசா வின்னடுவி லவிர்குகப் பிரமமே
பரிபூர ணானந்தமே.

5. சன்மநில னைத்துறந் தரியதே வைத்தலந்
தனில்வசித் திறைமைசாலுந்
தவவேட தாரியாய் விண்டுபத் திமையொடு
தண்டுழாய் கொண்டுநல்குங்
கன்மமுந லன்னம் படைக்கின்ற தன்மமுங்
கைக்கொண்டு நின்றவொருவர்
கடுவமன விடபேதி யான்மரித் தார்வண்மை
கழுமுதென் கேரளத்தே
நன்மவுனி யிவரொன்று முண்ணா ரெனப்பலர்
நவின்றிட விருந்தவொருவர்
நசித்தனர் விதைப்புளவை யாலாத லிற்றொடர்பு
நசியாது னருளில்லையேல்
உன்முருக னேனந்த வருளலா துய்வனோ
வுரவருண கிரியடிகளே
உயிரினுக் குயிராகி யறிவினுக் கறிவாகி
யொளிர்கின்ற பரமபதியே.

6. பரமதா தாவாய நீயெனை யணைத்தருள்
பணிக்காது விடுவதென்னிற்
பாலித்து நல்லருள் புரப்பதா யருள்செய்த
பக்ஷமுடை யுன்றன்வசனந்
தரமிலா மற்பழுது படுமென்ற னெஞ்சுமதி
சஞ்சலப் படுமின்னணஞ்
சாருமே லென்னெண்ண மெவ்வண்ண முற்றுறுஞ்
சஞ்சிதத் தாலெடுத்த
புரமளவு முள்ளவா ணாளெப்ப டிச்செலும்
புகலுன்னை யன்றியிலையே
புங்கவர்கள் கடவுளே புரிவுடையர் செம்மலே
புனிறுமர பற்றபொருளே
சுரர்புகழ வுளவெந்தை யருணகிரி பிரசன்ன
சுவானுபூ திச்செல்வமே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே.

7. பிதாவவ்வை மனைமகா ரிகுளைநட் பில்லமண்
பீதக மெலாம்வெறுத்துப்
பிரிதலுஞ் சுகமழகு வேண்டாமை கருதியுறு
பித்தையை நிமிர்த்துவெட்டி
மதாபிமா னஞ்சாதி பேதந் துறந்துவாய்
வாளாமை கொண்டுபசிநோய்
வரினைய மேற்றுண்டு மிருகரா சன்போல்
வலப்பார்வை யாய்நிற்றலுஞ்
சதாசாது சங்கத்தை நீங்கா திருத்தலுஞ்
சருகாதி யுண்டடவியிற்
சஞ்சரித் திடலுநல் லார்சலன மனமசஞ்
சலமாக நிறுவவன்றோ
இதாகிதமில் சுத்தவிந் நிலையையெற் கருளெந்தை
யெனுமருண கிரியடிகளே
ஏசற்ற பரமநிட் டானுபவ வருளாள
ரின்பப் பிரவாகசிவமே.

8. கேவல மெனும்பெரிய வந்தகா ரத்தின்மதி
கெட்டுநித் திரைபுரிவதுங்
கிஞ்சின்மதி விளைசகல மென்னுந் திவாவிலக்
கேவலத் தைத்தணந்து
கூவதனை நோக்குநன வாய்விழிப் பதுமுள்ள
கொன்னளவு மறதிநினைவுங்
குறுகாந லத்துவித சுத்தசிவ யோகமுங்
குறுகா தெனுந்தீர்வையைச்
சீவனா கியயா னுணர்ந்ததற் கேற்பவென்
சீர்மதியு மொப்பியதிலோர்
சிறுகில்லை யாயினுமு னற்கருணை யன்றோ
சிறந்துகை கொடுக்கவேண்டும்
ஆவலோ டீரெண் சகச்சிரப் புகழ்சொற்ற
வருணகிரி யிதயமுதலே
அத்துவித சத்திய சிதாகாச வடிவான
வானந்த மானபொருளே.

9. மெய்யுடைமை யீதல்பகை யின்மையின் சொல்பொறுமை
மெய்யுடைய வெவ்வுயிரினும்
விலகாத காருணிய மனமொரு வழிப்படல்
விகாரமின் றுள்ளுக்குளே
தொய்யலா நிற்குமுட் கரணசங் கோசமதி
சுத்தவறி வென்றுசொல்லுந்
துணையின்மா னததீர்த்த மாடிநடு நின்றுள்ள
சுப்பிரதக ராலயத்துட்
பையுளில் லாதுனைக் கண்டுகளி கூருமோர்
பாக்கிய முளார்தம்மருட்
பார்வைக் கிலக்காகு நாளரோ நலநாள்
பரிந்துதயை குயிறல்வேண்டும்
ஐயனே யருணகிரி மெய்யனே யெனையாளு
மப்பனே யொப்பிலானே
அன்பருக் கன்பான வின்பமே யென்னகத்
தானந்த நடனசிவமே.

10. மலசத்தி விட்டநற் சைதன்ய மெல்லாநி
மலசிவந் தன்னைமருவி
மடியா திருக்குமெனி னச்சிவ மதற்கீனம்
வாராதோ வென்பருணர
உலகத்தி லேபெத்த ராய்நிற்கு மூயிர்தோறு
முபயமின் றேகமாக
உள்ளும் புறம்புநின் றுளசிவ மளப்பிலா
வுயிர்கடன் னைக்கூடுகால்
கிலமுற்று நிற்கநடு வின்றுசத் தாகக்
கிளக்குமப் பொருடன்னுடைக்
கிறியற்ற சித்தொடான் மாவையு மதர்ப்போடு
கிளர்சுத்த பாசத்தையும்
நிலவுற்ற முத்தியிற் சச்சிதா னந்தமா
நிற்கவே கூட்டுமென்பார்
நிசநெறிய ரெந்தையரு ளருணகிரி யடிகளே
நின்மலா னந்தபரமே.

11. நன்றில்லேன் றீதுள்ளே னசைமிக் குள்ளேன்
ஞானமில்லே னூனமுள்ளே னல்லார் கொள்கை
ஒன்றுமில்லே னுண்மையில்லே னின்மை யுள்ளே
னுனை நசைஇக் கறையிகந்து பரமானந்தம்
என்றுமுறப் படர்ந்தேனிங் கெந்தா யெந்தா
யீரமிகுந் தருளனந்தம் புகழ்சொற் றாற்குப்
பின்றையெனா துடனளித்தாள் குகேசா வெங்கள்
பேரரசே யாரமுதே பேசா வாழ்வே.

12. நயமே கிளர்ந்துபர சடியாரை யெந்தநில நகமாதி கண்க ளினுமல்
வெயிலே விரிந்தபக லினுநா கருங்குமரம் வினைசோ ரிருஞ்ச ரையினுந்
தயவோ டகம்புறனு முறையே புரந்தருள்செய் தகையார் பெருங்கருணையின்
பயனே விரும்பருண கிரியார் புகழ்ந்தவொரு பதியேகுகப்ப ரமமே.

13. திராவிடவோத் தேயுறுதெள் ளேணத்திற் சொனபோதச் சிதைவுஞ் சைவ
புராணவளிச் சங்கிதையின் ஞானநிலை யுரைத்தவயிற் புகன்றவண்ணம்
அராகமல மாயைகெடிற் சிவனாவன் சீவனென்னு மமைவு மெற்கு
வராமலுமுய் வேனூற்றப் புதன்புகழென் பரசுப்பிர மணியவாழ்வே.

14. அசைவறு நன்மவு னந்தனி லமரென லும்பொரு ளொன்றுமா
திசையொட றிந்தில னென்றுசெந் திருவுள நம்பந டந்துளோன்
வசையற மண்டிய வின்புழை வழிபடு மென்றனை யுந்தளை
பசையருண் மைந்தர்க ளெங்கணும் பரவிடு மென்குக சம்புவே.

15. ஈசபோற்றி நன்னேசபோற்றியெம் மிறைவ போற்றியெம் பெரும போற்றிசூர்
நாசபோற்றி மெய்ப்போச போற்றி யொர் நாதபோற்றி யென்றோதும் வாய்ப்புடைத்
தாசரேத்தருணாசலப்பெயர்ச் சாதுபாத்தலைவா வுனைப்புணர்
மாசிலாக்கதிவேண்டு மாண்டருள் வரதசாகரப் பெரியசாமியே.

16. இப்படி மிசைமிறை யேநித நான்புரிந்
திருப்பினு மென்னிறை யாமுற்
கெப்படி யேனுமென் றனைக்கொடுத் ததிலயிர்ப்
பிலையிலை யணைப்பதெப் படியோ
அப்படி யிழைப்பதுன் பாரமெந் தாயரு
ணாசலப் பெயரிய வொருவன்
செப்பருட் கவிப்பொரு ளேயெனை யாள்குக
தெய்வமே திருவருட் கடலே.

17. நிட்டை நிமித்தம தாகமு னுற்றவென் னீர்மையெல் லாநழுவ
நட்ட நடுத்தக ராலய மானதி னாட்ட மிடும்படிநீ
இட்ட வணம்பணி நானுய்ய நல்லரு ளென்பதை யீதியருள்
வட்டை விளக்கு புகழ்க்கவி நன்னிரு வாண பராபரமே.

18. நின்னை நாடவிஞ் ஞான்றக நீயே
நீட்ட வேற்றுள நான்முனர் வகுத்துச்
சொன்ன வல்விலங் கூர்வனம் பதகந்
துருமஞ் செடிகளுக் குங்கடை யாகி
இந்நி லத்திடை யிருக்குமென் கதியை
யென்னு ரைத்திட வெங்குக தேவே
வன்னி வெஞ்சிலைப் பெயரின னரசே
மனது கூர்ந்துகண் பார்பரம் பொருளே.

19. சுபசுந் தரர்நினை வுறுவண் ணமுதலை தொல்லே விழுங்கிய பிள்ளைதனைச்
சபலஞ் சொலுயிரொ டுமிழும் படிசெய்த தகவும் பெரியகொற் றவன்குடியான்
அபயம் பெருபறை யனையாண் டவலியு மருணா சலப்பெய ரியனை யெனும்
நிபமொன் றிலிறைவ னருண்மஞ் சேயது நினைத்தா லென்பிறப் பறுத்திடுமே.

20. மாதவர் மகத்தாந் தெய்வ மறைமுடி வுரைத்தா டெய்வம்
ஆதர வாமா தெய்வ மாபத்துக் குதவோர் தெய்வந்
தீதெலாஞ் சீக்குந் தெய்வந் திருப்புகழ் தெரித்தான் றெய்வம்
யாததை யிறைஞ்சி யேத்தி யாப்பஞு ரகற்று வேனே.

21. ஓசை யாதி யைந்த கந்தை யுற்ற புத்தி நெஞ்செனாப்
பேசொ ரெட்டு மேநு ணங்கு பெற்றி யாகு சூக்கமீ
தேசு ளொர நிந்து நேட லெவ்வ ணம்பு கழ்க்கவித்
தாச னெந்தை தெய்வ மேயென் றன்னை யாள்சு வாமியே.

22. உண்மை நோக்குமிக் கார்நடை யிற்சதா
வொழுகத் தங்கட்கொல் லாதொழி வாயினும்
வண்மை கோணடை யாநெறி யெள்ளியே
மாப்ப வம்பெற வீத்துய்த னன்கெனா
வெண்மை மேவகில் லார்பகர் வாரன்றோ
வீடுபெற்றவண் ணாமலை நாதனின்
தண்மைத் தேமுகி லேகுக தெய்வமே
சத்தி ஞான சதானந்த வுந்தியே.

23. **மெய்யருள் விளக்கமிகு மெய்ப்புக ழுறைந்தோன்**
தெய்வமெது வோவது சிறந்தபொரு ளத்தை
ஐயமற வுள்ளியவ னுக்கெளிய வுன்னைக்
கையடைசெய் துய்திநனி காமுறு கருத்தே.

24. என்ன துடலா ராவிபொரு ளென்னனுமொருமூன் றேற்றுரிய
நின்னல் லடியார் பணியருணன் னிலைவீ டென்னு மூன்றனையுந்
தன்ன மறவே தமியேற்குத் தருவா**யருண கிரிப்பெரியோன்**
நன்னர்ப் பதியே குகதேவே நட்புக்குகந்த நாயகமே.

25. இதய மென்றவிட னாத்து மானவயரு ளிறைவனூன்மெயுரை
கொண்டறா
திகலு மாயையி னுபாதி போக்கியெவரேச றத்தைரிந
ரோவவர்க்
குதய மாகுமதியின்ப மென்றுகரு துரைசெய் தார்களது சங்கையில்
உறுதியென்றுபல சீடரும்பொரு ளுரைத்த வாவுமதர்
நின்றனர்
முதியர் மெச்சுமொரு நீலகண்டர்நனிமுன்னு மவ்விதய
வெளியிலே
முதல ருட்சிவனை யறிதலின்பென மொழிந்து நின்றனரிம்
மாணெறி
சதத முந்தமிய னுறவெ ணாயருண சயிலநாதர்பிர மணியமே
சரத மாயதக ரால யத்திலவிர் சருவ பூரணசம்புவே.

26. தத்துவம் விளக்கு மதமத்னையுமுற்ற சிவதத்துவ
மொரைந்துமறையா
அத்தனரு ளுலறையு மாதலினெலாருமவை
யண்ணவதரின்றிழிவரால்
சித்தருள் விளக்கமுடனைந் தினுமுயர்ந்துறுமொர்
சித்தமுதமுத்தி தருவாய்
முத்தனனுபூதி முறைதந்தவனை யாளுமருண் மூலகுக
கந்தபரமே.

27. கசடு துறந்துப் கருத்தை யிசைத்துன்
நிசநெறி யின்க ணிறுத்திய பின்பு
நசைமை யகன்ற வணாமலை நாதன்
அரச மெனக்கய லாவது மென்னே.

28. பொய்யாயுர னேதுமி லாமடமாய்ப்
பொறிமூசிய புள்ளுவ ருக்இதமாய்க்
கையாயுறு புன்கரு விக்கயலாய்க்
கருதோர்நிலை மேலென வைத்தளியாய்
மெய்யாகவிய ரண்டின டுக்கணனி
மிளருந்திரு வேயனு **பூதிசொனோன்**
சையோகசு கோதய மேசிவமே
தனிநாடக மாபர தேவதையே.

29. காணற்குரிய கண்ணாய் கண்ணறகரிய விண்ணாய்
மாணற்புதவி ராட்டாய் மன்னுனைப்புகழ்ந் தோற்கோர்
நாணப்பரிவு போக்கா நன்னிலைக்கதி சேர்த்தாய்
ஆணப்பரிவு ளேனை னயாண்டருள்குக தேவே.

30. ஞானநெ றிக்குரியார் யோகிலி ருப்பரெலா
ஞானமி னெட்டுடன்மே லாதரம் வைக்கிலர்மேல்
ஆனவ ருட்டிறலால் யாதொரு சித்திபுலா
லாகம தற்கமெயா யாரினு முற்றயர்வார்
நீநல புத்தியொடே **மாவரு ணைப்பெயரா**
னேயவ ருட்கிருபா நாதனெ னத்தனையே
கானம டுக்குமுனே நாடியி ருப்பதையே
காமுறல் கட்டணிகா ணேயுழல் சிற்றுணர்வே.

31. மறமெனுங்காழ் விதைக்கினந்த மறம்விளையு மென்பதையும்
அறமெனுங்காழ் விதைக்கினந்த வறம்விளையு மென்பதையுந்
திறமொடுணர்ந் திலர்தீமை செயற்கிறையு மஞ்சுவரோ
அறவரிறைஞ் சருணகிரி யாற்கினிய வெம்பரனே.

32. **ஆகமத்தின தந்தமிச் சைவசித தாந்த**
சாக ரஞ்சிவ ஞானபோ தாதிக ளதுவே
ஆகு மென்றறி வாயரு ணைப்பெய ரடிகள்
வாகு யர்ந்திட வாழ்த்தொரு வனைநினை கருத்தே.

33. இருவகைப் பனுவல் களுமர னறையா யிருத்தறொட்டாகம மெனவும்
இன்பமா மறிவை விளக்கலா னிரண்டு மேதமில் வேதம தெனவும்
பொருவிலாப் பெயர்கள் பெறுமிதை யறியாப் புல்லிய மாந்தரா கமத்தைப்
புறம்பெனன் மடஞ்சால் பித்துரை யெனவும் புகரறு பெரியவர்க் கபேதம்
அருமுறை யிரண்டநந் தங்களு மாமென் றருட்டிரு மூலரு மறைக்கும்
ஆகமத் தினுக்கும் வேற்றுமை யறியே மென்றரு ணீலகண் டருமே
நிருமலமுறச் சொற்றாரென வுந்தேர் **நீயருணைப்பெய ரறவோன்**
நிசநெறி யடைந்தாணிறை யருட்குகன்பா னெஞ்சுசெய் பயின்றறிபவனே.

34. சுவேதரை வழிபட் டொருகறைக் கண்ட சுவாமியுஞ் சைவபா டியமே
உவாவெனச் செய்தா ரதனிலே கான்ம வுரைவர வில்லையா தலினால்
தவாதவொர் வைதி கசைவசித் தாந்தஞ் சிறந்தது சிறந்தது நாளும்
அவாவறுத் துயர்ந்த திருப்புகழ்ப் பெருமா னடிகளே யென்குரு மணியே.

35. முடுகின் பாக்க டெரிக்குமாறு முத்தைத் தருவெ ணடியெடுத்துக்
கொடுத்த கோவன் றொருவர் வாழ்த்தாக் கொள்கையாளர்
கணங்கு வீரங்
கெடுத்தி றாக்கை வலிய மீந்த கிருபைக் கோன்கு கேசன்
மாட்டுள்
விடுத்துக் கூடிவாழி மோக்க வேட்கை வீக்கமுறுமெய்யானே.

36. சிவன்சீவன் பாசமென முப்பொருண்மெய் யாயுளவேற்
சிவனுக் கெங்கே
செறிநிறைவுண் டாமெனின துடலிலணுப் போலுமுயர்
சிவனார் மாறன்
தவஞ்சிறந்த பார்த்தனிவ ரடியுண்ட போதவைசித் தசித்துக்
கெல்லாஞ்
சார்ந்ததனா லிறைநிறைவுக் கிழுக்கில்லை யெனவுணருந்
தகைமை யோர்க்கும்
நவம்பெருகு வயிந்தவமா மாயைக்கும் பிரமமென்னு நாம மாதி
நனிவிளக்குஞ் சுருதிதத்து வப்பிரகாசங் காந்த நன்னூ
லென்றிப்
புவனஞ்சார்ந் தோர்ந்துயுநல் லார்க்குமருள் புரியருணைப்
புலவ னேத்தென்
போதத்தைக் கவருமொரு வெளியாநின் றருட்சோனை
பொழிமா விண்ணே.

37. உயிரோடுட லுளதேனுமவ் வுடலவ்வுயி ராகா
துயிரும்முட லாகாதென வுணருந்திற மேபோல்
செயிரேதுமி லாவோரிறை சீவப்பொரு ளாகான்
சீவப்பொரு ளந்தப்பர தெய்வப்பொரு ளாகா
தயர்வேதுமி லாதின்னன மறியும்படி யருணூ
லாகுஞ்சிவ போதஞ்சொன தறிவார்பிழை போகார்
தயவேறிய வருணைப்பெயர் நாதற்கரு டந்தோய்
தகவோடெனை யாணார்மலிசருவேசுர பதியே.

38. மலமு டம்பென வந்த வீவுறு மாயை யன்றிகன் மாயையும்
மலம தன்றென வுணர்வு றுந்திற மருவு வார்தொழு தெய்வமே
அலமு றாவரு ணாச லப்பெய ரண்ண னாடிய சொன்னமே
சொலரு மாகம முத்தி தந்தருள் சுப்பிர மணிய விலாசமே.

39. உள்ளி லோர்நடையும் வெளியி லோர்நடையு முற்றெ
மன்புடைய ரேநிலா
தொள்ள ருட்கடலை ஞான வெள்ளிடையை யுவமை
யற்றவொர் **குகேசனைத்**
தெள்ளி யோனருண கிரியை யாண்டவொரு செல்வ மானகுரு
மணியினை
உள்ளு மற்றதினு மொத்தி றைஞ்சியுணர் வோங்கி நல்லகதி
சேர்மினே.

40. **எந்தை யாமருணைப்பெயர் நாதனேத்து பாத்தலைவன்றனை**
நாடிச்
சிந்தை தூங்கொரு துங்க சமாதி சேரும் வேலை யொழிந்துள
காலை
முந்தை யோதிய சாத்திர மாதிமுக்கிய கன்மமியன்றளவாக
அந்த மெய்தெல்லை யும்புரியீரே லம்புளீர்துயர்
தீர்வதெவ்வாறே.

41. கட்டைகா ரணமாக வேபெட்டி வனைவர்மண் காரணம
தாகவந்தப்
பெட்டிவனை யாராத லாற்சித் தசித்தெனப் பேசுவன வேறுவேறு
கட்டுடைய வேதுவுங் காரியமு மாமென்று கழறுவா
ருனதன்பினார்
துட்டிலா வருணகிரி தெய்வமே யென்னையாள் சுத்தவானந்த
வெயிலே.

42. நற்ப ரானு பூதியின்கண் மாயையைப் பிழம்பென
நாடி நோக்க வேனுமின்மை யென்றியம்பவேனுமோர்
அற்ப மேனு மிசைவு றாத காரணத்தி னாலரோ
வதனை யனிர்வ சனமெ னச்சொல்வதுமுண்டது மாமெனாக்
கற்பு யர்ந்த விழுமி யோர்க ளுணர்வ ரவ்வர் காமுறுங்
கருணை வாழ்வை யெற்கு மீதி **திருவகுப்பு நாவலன்**
பொற்பு வந்தனைக்கு வந்த புரண சுப்ரமண்யமே
புகழு மேழை யேனை யாண்டு கொண்ட ஞான தெய்வமே.

43. அசிதபத்தின் பொருள்பரமா கின்றனையென் றாம
தக்கினிவெப் பேறறலை யக்கினியா யிற்றென்
றுசிதமுடைச் சொல்லாலே சொல்வதுபோ லென்றும்
உற்றவெப்பந் தீருமன்றி நீரதுவு மன்றி
இசைதலினா லத்துவித மாமதுபோற் றேவும்
இயமான சீவனுமே கூடினமை யென்றும்
வசையறவே யுய்த்துணர்வா **ரருணகிரிப் பேரான்**
மன்னிதய கந்தனையே கண்ணுணர்வுள் ளாரே.

44. இதைவிடுத் தெவிதமாக வெவருனக் கியம்பினாலும்
அதனைமெய் யாக்கொ ளாதை யருணெறித் தெளிவுஞானச்
சுதைமடுத் தருணைப் பேரான் சொனதுமித் தீர்வை கண்டாய்
சிதைவவித் தாள்கு கேசன் றிருவரு ணேடு நெஞ்சே.

45. உகளம் பனலொன் றெனலின் றருளா லுரமா கியொருங்குபடுங் கதிதான்
பகர்செம் மறையா ரீயருள் கிடுமா பதியென் சிவனீருயிர்வீடுறவே
தகவம் பகமென் பதனா லருள்செய் தனனன் னணமே வருமா டிலரான்
மிகமே லவர்நூ னெறியென் றறிவார் **வெயின்மா திரநா மனையன் பினரே.**

46. சீவபர சங்கமத்திற் கேற்றவுவ மானமொரு
செத்தினுமின் றாயினுமுன் றிருத்திகுறித் தோதலெற்றேல்
சீவனது போதமுங்கண் ணானது மொன் றாமருவுந்
திறமேபோற் சீவபரம் விரவுமது வாய்மனத்தால்
ஏவருமொன் றென்றுமிரண் டென்றுங்குறிக் கொண்ணாத
இருமவுன மாமிதைநீ யடையவெனா ராவியெனுந்
தேவனையெட் டாதகிரிப் பேரனர சாமமுதைத்
திமுருமுன்னி நடுநிலையி லமரெனொரு திருமகனே.

47. தன்னுடைய மகிமைக்குக் காரணமா யுளகுகனைத் தனக்காதார
மன்னவனா ரருளாலே கன்மமிலில காண்கின்றான் மமரில்லாமல்
என்னுமறைக் கடமிரண்டாம் வல்லியிதை யறியாதா ரெவ்வா றுய்வார்
சொன்னபடி யருணைப்பே ரானிறையைத் தொழுதுய்வீர் தொடர்புள்ளீரே.

48. உயரிய வானிழற் கீழர னுரைத்தது மோதெனக்கிறைசொனதும்
பயிலவொண் ணாதவித் தகரவித் தையின்முடி பாமது தகரமெனும்
அயிர்மலி **புண்டரி கவுறையு ளோங்குவித் தையெனுமொ
ரறிவுவெளிப்**
பெயர்நப மென்றுணர்ந் தொளிவரைப் பெயரினன் சாமியைப்
பேணுமினே.

49. வேத மாவாக் கியநான்கும் விளங்கு முபயான் மாக்களுடைப்
பேதமுணரத் துலக்கிமுதிர் பேறுஞ் சொனவா நனிதேர்ந்துள்
ஏத மறுத்த வருணகிரி யிதயப் பொருளாய் நிலவமெமான்
சீதவருளைப் பேணியுய்யுந் தெருண்மே தையர்கட் காணாமே.

50.(i) மாசிலிப்பெரு வைதிக சைவசன் மார்க்கமே பிடித்தச்சுதனாதிநல்
தேசறாமுகதேவர் முனீந்திரர் சித்தர் மாமனுவாதிய செம்மல்கள்
காசிலாத வெண்காடர் **திருப்புகழ்க் கவிஞராதி மிக்கார்
சித்திமுத்தியே**
மோசமேதுமிலாது பெற்றாரெனாமொழிதல் சத்தியமாகு
மெக்காலுமே.

50.(ii) சரத வைதிக சைவசித் தாந்தமா
சாத்தி ரங்கள்பு ராணங்க ளைச்சித
சுரதம் போலலை சூனிய வாதிக
டுவித தந்திரந் தந்திர மென்றடம்
பரவ முந்துவ ரேலங னன்புளார்
பாழ்த்த நுந்துறை மோசமென் றேகடிந்
**திரத வாக்கவண் ணாமலைப்ப பேரினா
னீச னாங்குக னைத்தொழ னீதமே.**

51. பன்னிரண்டு முக்காலுட் பத்தின் மேலே
பகரொருமுக் காலினையுங் கடந்து மீப்போய்
நின்னமிச மாமுக்கா றனிலே நின்று
நிகழுமந்த முக்காலு மறுமோர் கண்ணே
என்னையினி தாகவைத்தா லன்றோ வென்ற
னெண்ணநிறை வேறுமந்த வாறேயாற்றாய்
**இன்னமுத மெனப்புகழ்கள் சொற்றா னுள்ளே
யினித்திருந்த தேனேயென் றனையாள் வானே.**

52. தாய்கருப் பாசய வாசவெந் துயரினுந் தையலின் பழுடிவினும்
வாய்மையு ளார்நலம் வழுத்தெழி னூற்சிர வணத்தினும்
பிணவனத்தும்
தூய்மணி யெனவெழு ஞானமிங் கொருவனுட் டொலைவின்றி
யிருந்திடுமேல்
தேய்வறு கதிபெறற் கையமுண் டோபுகழ் **தெரித்தவற்**
கருள்குகனே.

53. ஆளு மன்ப ரகத்துளி யெந்த
நாளு முள்ள நலந்தரு வாயோர்
கோளு மில்லனு பூதிகுயின்றோன்
கேளு கந்தவொர் கேள்கெழு கடலே.

54. அதுநானெ னுஞ்சொ லெணினாலு மங்க ணதுவே றெனுஞ்சொ
லெணினும்
அதிரேக நெஞ்சமுளதாமு யர்ந்த வசியோக வின்பு மனுகா
ததனாலி ரண்டு மணவாத துங்க வனுபூதி தந்து கொளுவாய்
இதமான கந்த ரனுபூதி நம்பி யிறையேய கண்டபரமே.

55. வேண்டே னுலகம் விதிநூ னெறியைத்
தாண்டே னருளா லுனையே சதமாய்க்
காண்டே சணைவே னடியார் களிவாழ்
வாண்டே **யனுபூ திசொனா னரசே.**

56. கரிய வன்மல வொழிவ ரும்பர கதிசெய் முற்றறிவுடைமையீ
தரிய வுன்கரு ணையிலர் கண்டிடலரிது னைத்தொழு பெருமையே
உரியர் கண்டன ரருணை யின்பெய ருடையெ னத்தனுள்
கிறைவமா
பிரிய வின்புட னெனுளெ ழுந்தருள் பெரிய சுப்பிரமணியமே.

57. நிகழ்பகலு மதைக்கூர்ந்து நோக்கியதன் வயமாக
நின்றகண்ணு மில்லாமற் போகா வந்நேர்
திகழ்பதியி னிட்டையினு முபயமா ஞானங்கள்
சேர்தலுள பொய்யாகா வெனுமோர் தீர்வை
துகளிழிவொன் றில்லாத தீர்வாகு மிதையுனது
துரியவுள முவந்தெனக்கிங் களிக்க வேண்டும்
இகழ்குறைக ளேதுமிலா வெந்தையரு ளருணகிரி
யிறைவகுகக் கடவுளாங் கருணைத் தேவே.

58. மேலுக் குச்சொல வில்லைமெய் யாகநின்
காலுக் குச்சர ணஞ்செய்யக் காண்டிமெய்ந்
நூலுக் குச்சரி சொல்புகழ் நூற்கவி
மாலுக் குட்படு வாற்பிடி நெஞ்சமே.

59. வழுத்துமந் நிலையைத்தானே மாவருண் மவுனமென்னாப்
பழுத்தமெய் யறிஞர் சொல்வார் பரிவுடைநெஞ்சே யத்தை
விழுத்தவர் சூழுமெம்மான் வியன்றிருப் புகழ்ப்பா மூத்தோன்
வழுக்கறத் துதித்த தேவ மனிதனைப் படர்ந்து கூடே.

60. சொற்றிடு திரமல சகலுருக் கேயருள்
சுரந்துக லாதிதத் துவநாமம்
பெற்றுள மாயையென் மலத்தினைக்க னகூட்டியொர்
பெருங்கிரி யாசத்தி யாலமுக்காய்ப்
பற்றிய மலத்தினைத் துடைத்தருள் வானருட்
பதியவ னேயரு ணாசலப்பேர்
நற்றவற் கருளிய குகனவன் றன்னையெந்
நாளுமென் னறுமன மேநினையே.

61. விஞ்ஞான கலலொழிந்த வேனோர் யார்க்கு
மேவியவிக் கருமத்தான் விளையா நின்ற
அஞ்ஞான வினைப்பயனைச் சிவனே யூட்டி
யருள்வனெனச் சொயம்பாக மந்தா றோதும்
பொய்ஞ்ஞான நூறியவ னருட்பே றெய்தப்
புகழ்த்தாயு மானவன்செய் துதிபெற் றானும்
மெய்ஞ்ஞானப் புகழ்க்கவிசொன் னானுமானன
மிக்கானி னடிகளையே நினையே நெஞ்சே.

62. தருக்கு நப்புகழ்கள் சாற்றிய முனியை
இருக்க வைத்தகணி லேத்திடு மெனையும்
பொருக்கெ னத்திருகி யேற்றுதி புகர்மால்
எருக்கு புட்கர் பராக்கிர விறையே.

63. எந்தையே யெளியே னுன்மாட் டிருக்குமா றருணைப் பேராற்
கந்தநா ளீந்ததூய வர்க்கமே வேண்டு மஃதை
அந்தமீ றில்லா நீதா னளிப்பதெஞ் ஞான்றோ வென்றன்
சிந்தைதான் கலுழ்ந் தோவாதோ தீர்வையாய் விளக்கிச் சொல்லே.

64. சந்த தக்கலி யாண குணங்களைச் சார்ந்தே
எந்த ஞான்றுமு னின்னரு ளேற்றுய்ய **விணையில்**
சந்த மாலைக டெரித்தவன் றனக்குவ கையுடன்
தந்த பேறெனக் குந்தரு வாய்நிரஞ் சனணே.

65. அகியு மங்கியு மென்னவே
திகழ்ச மத்துவ சித்தியீ
புகழெ னுக்கவிப் புந்தியோன்
பகவ னேகிரு பாளுவே.

66. உன்னையு மறியே னுன்னையே யறிந்தா ருபுறவையு மறிகிலே
னுறவோர்
மன்னிட னதையு மறிகிலே னறிந்த மைந்தர்சொல் வசனமு
மறியேன்
என்னநா னிருக்க வைப்பையே யெளியே னென்செய மாட்டுவ
லெங்கோன்
என்னுமெய் யருணைப் பேருளோ கைக்கணிலங்குசன்
மயபரஞ்சுடரே.

67. தெருளுற் றொருமுத் தியினைப் பெறவே தினமும் படர்மனனே
அருணைப் பெயரற் கிதயப் பொருளா யணியும் பரினிறையாய்
அருணட் புடையர்க் கருடற் பரமா யவிரெம் பரமனையே
இருளுட் கநினைத் திடுபொற் பிலர்யா ரெனினும் பதரறியே.

68. நானேய மொடுசந்த தமிறைஞ்சு பரமேச நயநின்னையே
தோனாத னெனநெஞ்சு ணனிகொண்டி **னனுபூதிசொன**
செம்மையோன்
ஆனாவெ னவெழுந்த செயுளின்க ணுறுபேறெனணு முன்னுமே
தானாக வருள்கிஞ்சின் மனனென்ற வெனையாளோர்
தயைமுன்னியே.

69. பொருணயமும் பதநயமும் பொலியவரும்
புகழ்ப்பாக்கள் பொழிந்த வெம்மான்
அருணகிரி தனைச்சும்மா விருத்தியவொர்
புலத்தோனையு மமரு மாறீண்
டருணலநல் குதியடிய ரருந்திருவே
பெருங்குகனே யமல யோகத்
தெருணகையே யிருள்பிளக்கும் யருமணியே
நான்வணங்குஞ் சிவமே தாவே.

70. வில்லிபுத் தூர்ப்பெய ரானது வீறிறக்
கல்வியி னால்வென்று காதளித் தானுடை
நல்லருட் பாப்பொரு ளேயரு ணாயக
அல்லவை மாய்த்துயு மாறெனக் கருளே.

71. பிசியில தீதம் பெறவரு ளாலெம் பெருமான்மேல்
உசிதம தாகும் புகழ்சொன நாநன் குடையானின்
சுசியுள மேலன் றொளிரிய தூவிண் சுடர்சோதி
அசிதப மேவென் றணைவதெ நாளோ வறியேனே.

72. ஒள்ளிய வெயிற்றினை யெயிறுகொ டேகடித்
தொண்டுக ளாக்கிட லுறுப்பினை யுறுப்பாற்
கிள்ளிய லந்தலை யயர்வது போன்முனங்
கிளத்திய மனத்தினை மனங்கொடு தடுக்குந்
தெள்ளிய மதியினர் பெறுநல மிவனையுஞ்
சேரவொ ரருள்புரி திருப்புக ழெம்மான்
கள்ளிறத் துதித்தகு கேசவெ னிருதய
கமலசிற் பரமவி யோமபி ரானே.

73. உருமன மோய்ந்திடு காறு முளநடு வேயிறை யோனை
உருவம தாநனி நாடி யுட்செபி தாரக மேலே
அருமன மோங்குறு மேலஃ தருவென நாடுதி யான்ற
அருணையம் பேருடை யானி னடிகளி னல்லடி யானே.

74. காப்பையெனு முறுதியென்றன் கருத்தை நீங்காக்
கட்டாகு நீயுமந்த வாறே செய்வை
மாப்புரிவின் றொருகானீ கைவிட் டானும்
வழுத்தெங்கள் பாக்கியமே நின்மேற் றோடம்
யாப்புடையேன் சொலத்துணியே னிதுதா னேயென்
யாணர்நிலைத் தீர்வாகுந் தகரக் கூட்ட
யாப்பொன்று தெரித்தானி னிதயக் கண்ணே
யாமினியெல் லற்றிருந்த செல்வச் சீரே.

75. கற்ற தாற்பய னென்பரன் காறொழாப்
பற்ற ரென்றொரு வன்சொன பண்டுரை
அற்ற மன்றது போற்கலை யாளரும்
பற்று வார்புக ழத்தன் பரத்தையே.

76. பெற்றான் பறையனுக்
கற்றான் வரைதமிழ்
கற்றோங் கிடுபுகழ்
சொற்றா னையெணே.

77. இந்தச் சான்றுக ளாலு யிர்க்கண மியாவு முத்தி யடைந்துயும்
என்ப தாணை யிதற்கு மாற்ற மெழப்பி ராமண சாதியன்
றெந்தச் சாதியு முத்தி சேருவ தின்றெ னச்சில விப்பிரர்
ஏற்றி யெள்ளல் செலாது சாதியி லேற்ற மோது மனோர்வெரு
வந்தை நூறிய வேனை நற்குடி வந்து ளோரையு மேன்கதி
மருவ வில்லையெ னக்கு றைப்பது மாற்ற ரும்பவ மாமெனச்
சிந்தை கொண்டரு ணாச லத்தொரு செம்மல் கண்ட குசேசனைத்
தேடி யோய்ந்து சுகிக்கு மின்பது சேர வாருமெய் யன்பரே.

78. காம மென்றநெடு வாரிதி கடந்த ருணைமா
நாம மொன்றுள னனாரத நயந்து புகழ்தே
ஆமெ னன்பிறை யெனக்கருள வந்த வருளாம்
மாம லிந்தவொரு கோலமும் வரம்பி றுறவே.

79. அசுவ மேதமுத லியவற்றோ டகன்ற தேகலியிற் றுறவறமென்
றிசைநல் கிடுமிருதிக் குரியபொரு ளிணைகோ வணமுமிலா
விரத்திநடை
அசிசெய் கலியுகத்தில் விலக்குண்டதென் றாகு மிதைமறுத்தோ
துவதென்றாற்
பிசியி லனுபவத்திற் கிகலென்பார் பேமி **லருணகிரிக்**
கன்புடையீர்.

80. பணைய முண்டியுடை கீர்த்தி யென்பவைகள் பற்றி யேதுறவு
கொள்ளுவோன்
திணைகொ ணாட்டுழை யிரண்டு மற்றவதி னாவனவ
னன்னர்வீ
டணவி டானென வரற்றும் வேதமிதை யறிவி வேகிக ளெனாதுகண்
உணர்வு ளாயவரு ணைப்பெ யர்ப்பெரிய னோதொ
ருத்தனிழல் சேர்வரே.

81. அமரருடை யாதி யென்ற வுனிலுமுயர் தேவ ருஞ்சொ
லணிமறையி றைஞ்சு னோடுதான்
சமமுடைய பேரு மெங்கு மிலையெனவு சாவ விஞ்சு
தனியுணர்வு தந்த வீசுரா
எமனுடைய வூறொழிந்த வருணகிரி நாதர் சொந்த
விறைவநவ வன்பர் நாயகா
குமரகுரு தாச னென்று நவிலெனைவி டாது வந்து
கொளுதிசிவ கந்த சாமியே.

82. கைவல்லி யோபநிட முறவியுளத் துளகுகனைக் கடவு ளாய
துய்யசிவ னாப்பன்னு மல்லாது வேறுபுத்தேள் சொலவே
மாட்டா
தையமிலம் முடிபாலே குகன்சிவனுஞ் சிவன்குகனு மாமா
றோர்வார்
தெய்வதமே **யருணகிரி யுண்முதமே** யென்விழைவு தீரச் சேரே.

83. ஆக்கையெனு மாலயமு ளேயுறவி யென்னு
மம்படிக மூர்த்தியிட மம்மூர்த்தி மானாந்
தேக்கருணை யஞ்சிவனை நாட்டுபிர திட்டை
செய்தவதி புண்ணியமு ளாரவனுக் கின்பாம்
மாக்கருணை யாலினிது கண்டுகதி சேர்வார்
மற்றையர்தி யங்கியலை வார்சொலிய தெய்வம்
வாக்குவலி கொண்டவரு ணைப்பெயர னெஞ்சுண்
மன்னிய சுவாமியென முன்னுநர்கெ டாரே.

84. **அருணையம் பெயரெம் மானுள் ளரவிந்த மமர்ந்த தேவை**
மருளறு சேது மாத வனெனுமா மறையோ னென்கண்
அருளொடு பொருளு மீதென் றளித்தசன் மார்க்க வேந்தைக்
கருணையொ டழைக்க வென்முன் கதுமெனப் போதி நெஞ்சே.

85. இந்தப்பிர மாணங்களி னான்மாதவ னென்னும்
அந்தச்சிலை வலிராமனு மலகைக்குய முணியும்
புந்திச்சிவ னடியாரென வவரைத் தொழல் புரிவார்
கந்தற்குயர் புகழ்சொற்றவர் கருணைக்குரி யாரே.

86. **அச்சுதனு மந்தணனு மடிமுடிதே டிக்காணச்**
சொச்சவொளி வரைப்பெயரான் றோமுருக்கி யாட்கொண்ட
மிச்சையிலா வெம்பெருமான் மேலாசை கொளுமென்றன்
இச்சையெங்ன் நீருமென்னா ரிதத்தோழீ சொல்லுவையே.

87. இந்தநிலை யைத்தானே சிவத்திற் கங்க
மெனவிருத்தன் முத்தியென்றுஞ் சொற்றார் சைவர்
அந்தமுடி வுஞ்சைவ சித்தாந் தத்திற்
கயலன்று சொற்றவிலிங் கத்தின் நீர்வை
எந்தவிதம் பார்த்தானு மகண்ட சச்சி
தானந்த மெனச்சிறக்கு மிதனை **யென்றன்**
பந்தமெலா மெருக்கியரு ளருணைப் பேரான்
பரமென்னுங் குகனருளா லறிகற் போனே.

88. துறக்கவி புதர்துய ரெருக்கிய ருளிறைவ துதிக்குநர்
துனிகடிவோய்
பிறக்கமி லருணைகொள் பெயர்க்கவி முதலவ பிறப்பிலு
னருள்கருதா
மறக்கல திகளுற வினைக்கெடு கெடுவவர் மனைத்தெரு
வழிவரினும்
அறக்கொடி தெனவுனை வலித்துல குணர்வற வடக்குநர்
விலகுவரே.

89. கோணம் வாசனைகளைக்கிரகிக்குங் கொள்கை போலவைம்
புலனை யுங்கிரகித்
தாணரருளிடைப் போதமுங் கொடுத்தவ் வருளின்
வயத்தமர்ந்தம் மயமாகிக்
**காணல் கருதலொழிந்திருப்பதுவே கனகலிங்க சித்தி யெனவு
முணர்வார்**
பேணவுள திருப்புகழ்க் கவியெம்மான் பெரும நானுமுன்
சரண்புகுந்தேனே.

90. காரிய வுலகங் காரணத் தடங்கோர் காரணங் குறித்துமா வெனவுஞ்
சீரிய சிருட்டி தனின்முனம் போலத் திரும்புதல் குறித்தியா
வெனவும்
நேரிய வருத்தங் கொளவுள மாயை நினையடை வரைச்சிறை
செயுமோ
**ஆரிய னருணைப் பெயரியற் கிறையென் றாயவெஞ் சிதம்பர
சிவமே.**

91. நச்சு மலவொழிவி னித்திய சுத்த பரசிவச மத்துவ
நட்ட மறவருமெ னச்சொலும் விதியாலே
விச்சை யுருவுடைய புற்கலன் வித்தை நிறைவுளனெ னப்பனு
மிக்க புகழுடையொர் புத்தக மதுபோலே
அச்ச னிமலமற வொப்பிலு னட்ட மருள்புரிக மெத்தவு
மச்ச முடையவெனை நற்கதி மலையாமோ
ருச்சி யடையளவி ரட்சியெ னப்ப னெனுமமல முத்தைய
வுத்த மவருணகி ரிக்கவி யிறையோனே.

92. கூட்டச் சுரர்சூழ் திருமாற் கருள்செய் குமர
கோட்டத் தடிகட் கினிதா கவெழுங் **குரல்சால்**
பாட்டுக் குருவென் பவனெஞ் சுருதிப் படருண்
ணாட்டக் குகனே யெனையுங் கொளவுண் ணடியே.

93. ஆவிக்காவியு மறிவினுக்கறிவு மசைவுக்க சைவது மாய
நங்குகனை
மேவிக்கூடிடற் கவன்றயைமுனரே விளையுமேற் பின ராவியை
யவனைத்
தாவற்றறிந்திடலா மிஙனால்வர் சாற்றுநடுக்களுஞ் சான்றதனானே
மாவித்தக வருணாசலப் பெயரான் மதர்வு நாதனைப் பிடிமி
னொல்லுநரே.

94. மற்றொருதாழ் வுடையெண்ணில் விஞ்ஞானா கலர்வித்தை
மாயை யென்றே
சொற்றவிரண் டனுக்குமிடை வசிப்பவரவர்க் கிறைமுன்னர்த்
துலக்கி யுள்ள
பொற்றலமந் திரர்மந்தி ரேசர்பத மளித்துப்பின் பூர்த்தி யீயும்
அற்றமினன் மாணாவப் பூர்த்திபெறற் கருணகிரி யரசைப்
போற்றே.

95. ஏகமலத்தினர்க்குயிரென வகத்தே யிருந்து மிருமலத்தார்க்கு
முக்கணனாய்
எதிரினின்று மும்மலத்தினர்க் கெழின்மெய்
யிலங்குமானுடனா யெதிரிருந்தும்
மோகந்தணந்த விண்சுரர் புவிமாந்தர் முதன்மற்றவர்க்குரு மாறி
முன்னாயும்
மூலமனுச் செபந்தவமிகத்திகழு முகத்திலேற்புறத்
தோன்றியுமருள்செய்
பாகவனுக்கிரகம் மதுமைந்தாம் பகர்ந்ததொழில்
களெல்லாமயனாதி
பஞ்சமூர்த்தியஞ் செழுத்தென நின்று பண்ண
றன்மையதாமவனவளஃ
தாகநவில் பிரபஞ்சமுன்னிலையா மங்கமே யிலியாயு
மொண்மேனி
யால்வியாபித்து நடத்துதல் படர்க்கை **யாமண்ணாமலை**
யான்சிவனாளே.

96. முன்னுரைத்த வுட்கருவி முப்பத்தா றுட்சிலவுட்
பின்னுரைத்த வாறுபத்தும் பேசா தடங்குதலால்
துன்னுமுப்பத் தாறுமே சோதிக்கத் தக்கனவாந்
தன்னறிவா லிந்தியத்தைத் தானோக்கிற் பூதமுமுள்
உன்னுகர ணங்காணி னோங்கந்த விந்தியமும்
பின்னியவே ழுங்காணிற் பேய்க்கரண மோர்நான்கும்
மின்னுமைந்து நோக்கிடினவ் வீணேழு மெய்பார்க்கிற்
சொன்னவைந்து மில்லருணைப் பேரனன்பிற் றோய்பவனே.

97. பந்தியாய் வாக்குப் பாதம் பாணியே பாயூ பத்தாம்
ஐந்துமா காய மாதி யைந்திடை யிருந்து பேசும்
இந்தமண் ணடக்கு மேற்கு மிடுமலங் கழிக்கு மாட்டில்
விந்துவை விடுமென் றெண்ணாய் வியன்புகழ்க் கவித்தே வாளே.

98. பிருதிவிநீ ரனல்வாயுக் களினிறைந்த பெருவானும்
உருவாரண் டத்தினுளும் புறனுஞ்சூழ்ந் துளகண்டப்
பொருளாகு மல்லாது பூரணமன் றெனவறிவாய்
அருணகிரிக் கிறைவனென வவிர்குகனைப் படர்பவனே.

99. கறையிகந்த வைந்துமிடை யேழு மந்தக்
கரணமொரு நான்குமைந்து பூதத் தொன்றும்
பொறியிலொன்று மாகியவிப் பதினெட் டின்றிப்
போதவுயி ரெதையுமறி யாதென் றோராக்
குறைவடைந்த மாக்களெல்லா நாமே காட்சி
கூர்ந்தறிவோ மேனும்பிதற்று முனரே சொற்ற
இறைவனருண் மூன்றுமறந் தெழுந்த தென்னா
வீண்டறிதி யருணகிரிக் களியுள் ளாயே.

100. ஏகமே முதலாப் பப்பத் தெனவரு மிருப தாஞ்சார்த்
தோகமி றொகைப ரார்த்த மாமெனச் சொலுநூற் றோல்கள்
மாகதி யமுத வார்வாய் மடுத்தபொன் னருணைப் பேரான்
மோகமா வலித்த வெம்மான் முழுநிழற் காட்பட் டாயே.

101. அத்து வாக்களு ளொன்றென வாகுமைங் கலைகள்
தத்து வம்பத மெழுத்துமந் திரஞ்சொன தலமாம்
அத்து வாக்களொ ரைந்திலும் விரவியுள் ளவெனாப்
புத்தி யாலுணர் புகழ்ப்புத னிறைநினைப் புளனே.

102. நிற்குநிலை யுணர்நலத்தோய் கருவிகளுங் காரணமு நிகள
யாப்பாய்
நிகழ்த்தாண வாதிகளும் பாசமெனுஞ் சொலிலடங்கு
நிகழ்பாலத்தில்
ஒற்கமிலாப் புருடதத்து வமிந்திரிய முறுகரண முழலும் வாயு
உறுதன்மாத் திரைகள்வச னாதியெனு முப்பானைந்
தோங்கல் பார்வை
நற்களையார் கண்டமிசை முற்சொலிய விந்திரிய ஞாட்பு நீக்கி
நவிலிருபத் தைந்துமுறல் கனாவிதய மதிற்பிராண னாடுஞ்
சித்தந்
தற்புருட னொடுநிற்றல் சுழுத்தியுந்தி தனிலிரண்டு துரிய மூலத்
தானமதிற் புருடனிற்ற லதீதமறி **சந்தமுனி யமிழ்தைச்
சார்ந்தே.**

103. நிகழு நபோமணியொளிதனையே நெருங்கின னெடுவுருக்
காட்டிடல்போல்
இகழ்வறு மருட்பரை தனையடைந்தோ னெழிலுரு வையுநனி
காட்டுமஃதே
திகழ்பரம் பொருளையு மேற்காட்டுஞ் சிவமரு ளிரண்டையுங்
கதிரொளியாய்ப்
**புகழ்பெறு வோய்தெரிந் ததையடைதி புகழ்ப்புத னிறையருட்
பெருக்காலே.**

104. சாம வேதமொழி சவண முந்தலைமை சாற்றும் வேதமொழி
மனனமும்
ஏம வீற்றுமொழி நிதித்தி யாசனமு மெசுவின் மாமொழி
சமாதியும்
ஆமெ னப்புக லொழுங்கு மிந்தவரு ளாற்றி னுக்கயல தன்றென
**நீம னத்திடை யுணர்ந்தண் ணாமலை நிருத்த னைச்சிவணி
வாழியே.**

105. ஊன்புதை வீழ்முன முனது மதர்ப்படைவான்
மீன்படு வாரிதி சுலவும் விழுப்புவிமேல்
நான்பர தேசியெ னவுள னயப்பையிடாய்
தேன்புகழ் பாடிய தெருள னுளப்பதியே.

106. நினது போதத் தொளிகலந்து நிகழப் பணியென் வாக்குமனம்
நனவி லெழுந்து கறங்கிடினு நலியா வுனது வடிவாக்கி
அனுபோ கமுமவ் வனுபவியு மெனவே யியைந்து நடந்திடுமா
றெனையாள் பெரியோ யருணகிரிக் கிறையே குகனே
யிழைத்தருளே.

107. வினைக்கை நீக்கண்டதான மொல்லாததேல் விளிவுநாளிற்
சிவத்தலத் தேனுமுய்ந்
துனைக்கை கூப்புநரோம்பி யங்கேயுடம் புகுத்தலல்லது
மாச்சிவ நோன்பினாற்
பனிக்கும் யாக்கை விடுத்தனன்றென்றுசெய் பத்தர்க்கும் பதிநீ
யெனைக்கூடிக்கா
நினைக்கமோக்கங் கொடுத்திடுங் கோப்பெயர் நின்மலன்
பரமே பரஞ்சோதியே.

108. நான்கினி நடந்தொரு மூன்றினின் றவணுண்
பான்கிள ரிரண்டிருந் தொருமையிற் படுக்கும்
மேன்களி தரும்பொருள் வியன்புகழ்க் கவிக்கோன்
நான்கதி பெறும்படி நவின்றது மவனே.

109. நோயு றாநு னன்பர் வாழ வூங்கு வாழ்க்கையை
ஈயு மெந்தை யேயெந் நாளு மேக போகமாய்
நீயு நானு மாயென் றோனி னேய வாக்கியந்
தோயு மத்து வைத மேயத் தோய்வை யீதியே.

110. மனவலி பெருக்கி மனவலி முருக்கி வைகல்ய நீத்தகை வல்யத்
தனகுசா லருணைப் பெயரினான் புகழ்ந்த சாமியா முனதருள்
வாழ்க
அனுபவப் பொருளு மனுபவிப் பவனு மனுபவத் துண்டென
வறிந்த
நினருமெய்ச் சீட கோடிகள் வாழ்க நிருமல வயவைவாழ்ந்
திடவே.

ஆறாம் மண்டலம்

ஸ்ரீமத் குமாரசுவாமியம்

பதிக வரிசை எண் பதிகப் பெயர் பாடல்கள்

I முதல்வன் புராண முடிப்பு

கீளவை பரிகொடி யாய்க்கி ளர்ந்தன
ஆளொரு வரையடைந் தருணையான் புகழ்
வானென கண்ணியை மணந்து விண்புரந்
தாளெயின் மான்மணந் தான்ச யம்புவே.

II சரவணப் பொய்கைத் திருவிளையாடல்

அந்த ரம்பல தாவி யாடிநிலன்
வந்தெ லாநனி மண்டி நின்றுநடந்
தந்த வாறுமி சைக்க டங்கிடுமா
சந்த னோகைய வாவு தன்மையோ.

III திருக்கைலாயத் திருவிளையாடல்

1. குட்டி மேலுதைத் திருந்தனை யிட்டிவற் கொடுபோய்
விட்டி டாதுகந்தாசல மிருத்துமி னெனுஞ்சூள்
இட்ட வாறுசெய் தனர்கன ரீசனுக் கவ்வோம்
கட்ட தோதின னருணையன் புகழ்தனிக் கடவுள்.

2. மட்டில் புகழ்முனி நட்பி லவிர் குகன் மட்டு மலரடி விட்டகைத்
துட்டர் முதுகிடை மொத்து நமனக ருற்ற பினரவர்தொக்கினை
வெட்டி யுதிரந ரப்பு விளர்தசை யத்திசருமம் லக்குநர்
கிட்டி வருதலு நிற்ற லெஙன் மதிகெட்ட வையுமகிலத்தரே.

IV பட்டாபிஷேகத் திருவிளையாடல்

வல்லார் கந்தன மாந்தமை யாலவ்வரை
வில்லார் கந்தப ருப்பத மாம்விபுதர்
கல்லார் நெஞ்சொடு சேயையெ திர்த்தகதை
சொல்லார் விற்புகல் வேனொலி யற்றொழுவீர்.

V மேருகிரித் திருவிளையாடல்

சிவசுதனி ருஞ்சூர் கடிமுதல்வன் மஞ்சார்
சிகியனவ னன்பா மருளால்வே
றெவரையும்வ ணங்கே னெதனையும்வ ணங்கே
னெனுமுறுதி கொண்டே னிதுதானே
இவறல்வலி வென்றே புகழ்பலபு கன்றோ
னெனுமருணை யின்பே ருடைநாதன்
நுவலுநெறி யிங்கே யிதினுமுயர் வின்றே
நொசிவறுபெ ருங்கே ளுலகீரே.

VI சிருஷ்டி காரியத் திருவிளையாடல்

இச்சுவர்க்க வாயில்வதி யெழில்வீர
பாகுபத லெவரு மேலோர்
மெச்சுவர்க்க ரென நினைந்து முருகன்விடை
கொடுபொதிய விலங்கல் போந்தான்
எச்சுவர்க்க ரும்புகழ வெம்பெருமான்
றிருவடிக்கே யீடா ரன்பால்
நச்சுவர்க்க வுளங்கொளுவாச் சந்தமுனி
போனீரு நடந்துய் வீரே.

VII இமயமலைச் சாரற்றிருவிளையாடல்

அன்னண மயந்து மென்றே யவர்பகர்ந் திறைஞ்ச லேற்றுத்
தன்னிக ரில்லான் சென்றான் சாற்றிய வவன்சொல் லோர்வார்
மின்னியன் மாதர் வேட்கை வெல்பர னாவனென் னாரோ
அன்னனே வகுப்புச் சொற்றா னகத்தமர் தேவு மாதோ.

VIII படைபெறு திருவிளையாடல்

1. அன்னணந டக்கையின டந்ததயி லானிரத மஞ்ஞான்
றின்னலறு முப்புனனி கர்த்ததெறு ழப்படையி யக்கம்
அன்னநர லைத்தொனிநி கர்த்தமுர சாதிகள ரறற்றல்
இன்னுநுவ லற்குரிய கூறுவல்பி னோசைமுனி யின்பீர்.

2. அவ்விலக்கரு மவ்வல் வீரரைச்
செவ்வி திற்றொடர் திண்மை யுற்றனர்
நொவ்வி லான்புகழ் சொன்ன நுண்ணியன்
உவ்வு லாமிறை யுள்கு மன்புளீர்.

IX மாயாபுரித் திருவிளையாடல்

அச்சத்தியவ் விருதானவ ராகம்பகு போது
எச்சத்தமு மங்கத் தொனி யிட்டாவிது றந்தார்
நச்சித்தம **தாரக்கினி நாகப்பெய ரானுள்**
இச்சித்தகு மாரன்வலி யெவர் சொல்லிட வல்லார்.

X வீரமாகேந்திரத் திருவிளையாடல்

1. பின்னெ திர்த்த வாயி ரம்பு யத்து வீரர் பிணமென
மன்னி லத்தில் வீழ வேம ராம ரம்பி டுங்கி மேல்
உன்னி யேய றைந்த வந்த வொருவ னுள்ள முன்னதே
வெண்ணை யாளு மீச னேபு கழ்ப்பு தற்கு மீசனே.

2. துப்பறிவு சோர்வா ரோடவயி ரத்தோன்
வெப்பனுமி றந்தான் மாலைவர வீரன்
அப்பதிவி டுத்தா காயவதர் பாய்ந்தான்
அப்பொருந னோர்கோ **வருட்புகழ னோர்கோ.**

3. என்றலு மாயையின் முன்மக னன்புடை யிளையோய் சேய்
என்றவ னேவர றந்தமை யின்மிட லினனேகி
வன்றிர ளோடுவ ராமையி னண்டர்கண் மகிழ்வேயார்
என்றன னோய **ரும்புகழ் மாமுனி யியனாரீர்.**

4. என்றன னிவையெல் லாமு மேறுயர்த் தவனே கூறி
நின்றபின் சுருக்க மீது நிகழ்த்தியாங் கூறவென்னிற்
கன்றலு நூறு கோடி காலத்து நிரம்புங் கொல்லோ
என்றன னென்றான் மேலு **மிரும்புகழ் முனியன் புள்ளீர்.**

5. இவ்வி ரண்டுமுடி வுக்கு நானுமிசை
வெய்தி னேனவனு ரத்தையாஞ்
செவ்வி வந்தினுமி யம்பு வேனமர்கள்
செய்வல் யானுமென வரிமுகன்
உவ்வி கம்பமுற வேசெய் தோதினனு
வந்து சூரனவ னைத்தழீஇ
அவ்வி தம்புரிதி யென்ற பின்**னவைக**
லைந்த தேபுகழ னன்புளீர்.

6. காது காறும் வில்லிழுத் தம்பு மாரி கடிதுபெய்
தேதும் வென்றி யில்லையென் றெண்ணுமவ்வி ராக்கதன்
ஏதி கொண்டு வெவ்வலென் றெடுத்த னன்பெ ருத்தவான்
சோதி லோதை முனிமனங் கொண்டு ளீரபின் னதுசொல்வேன்.

7. மினிரந்தினி தோளன்சத மிடலம்பசு ரேசன்
அளிகந்தனில் வீழ்ந்திற்றன வசுரேசன திருநால்
ஒளிவன்கணை யார்வீரனொர் தோளுண்டது தொனையே
தெளிசந்தன ததர்நம்பொரு தெருளீரினு நவில்வேன்.

8. இளமை தன்னின் மதிப்பிடித் தின்னல் செய்த வன்னவன்
களமுன் வந்து நின்றநா ணாலந் நாளொர் காளியை
அளியி னேவ வெண்கைவீ றவளி ழந்து பாறமார்
பொளியன் மோதி னானனோ **னோகை சந்த னோகையே.**

9. வருபொழு துயர்கொடி வயவர்க ளசையா
விருதுரை புகல்கையின் மிளிர்வய வனுமோம்
சரவண பவசிவ வெனநடை தரலை
அருணடம் விரவின **னருணைய னிறையே.**

10. பிள்ளை யோடுவ ரும்பல் பேய்கள்பி றங்குமூளைக ளீரல்கள்
வெள்ளை யார்விளர்தாம ருத்திவிழுத்த சைத்திர டாமுமுண்
டுள்ள மோகைபொ ருந்தவேருதி கொண்டு சேய்துதி செய்தன
எள்ள லேதுமி லருணை யன்றிரு வெய்த வெண்ணுமெ னன்பரே.

11. நாயொரு கோடி நரியொரு கோடி
நசைஇய வூன்பசி யென்னும்
நோயரி யோட நுகர்பொழு துலகை
நூக்குமொர் கடலெனச் செந்நீர்
சாயரி வேழ முதலிய மிதப்பச்
சாகரம் பாய்தலுந் திமிநா
வாயரி போயொல் கினவென நவின்மின்
வளரொலி முனியதர் விழைவீர்.

12. பொன்னுல கெரித்தவப் போதே
உன்னுரன் வாழ்வுமின் னனவாம்
என்னிலை யுணர்ந்த னென்றான்
மின்னவள் புகழனை விழைவீர்.

13. அடல னாயவிர் சூர்பெரு வரவலி யறிந்த
மிடல னாயவிர் வீரிய வாகையில் விமலன்
கெடலி லாலய வாயிலி லமர்கெழு தகைமைப்
படலை யாயென வறிதிர்கன் **புகழ்ப்புதன் படரீர்.**

14. இங்கொருவ னாகியுள் நீயிளைஞ னேயெர்
தங்கிமிளிர் மேனியுடை யாய்தகைமை மிக்க
வெங்கணைமு னென்புரிவை வென்றிபட ரென்றான்
செங்கரியி னாமனிறை தேடுமதி யுள்ளீர்.

15. கதிக்கதவ மாகவொளிர் கந்தனடி யன்பர்
துதிக்கவிதை பாடியதிர் துந்துபிய றைந்தார்
விதிக்குலமு ணர்ந்துபுகழ் பாடியவி வேகன்
பதிக்கடிமை யாபவர்சொல் யார்பகர வல்லார்.

16. அந்த மாபடை யவன தாவியை யுண்டு கங்கைப டிந்துவந்
தெந்தை நீள்கர நின்ற தேயனு **பூதிசொன்னவ னேதமில்**
சிந்தை மேயவி ரான வன்றிறல் செவ்வ னோதுந ரெவ்வரால்
இந்த மேதினி மீது தெய்வவி சார மேபுரி யேரர்காள்.

17. மணிகொள் வான்முடி காதணி மார்பணிதோள்
அணிகொள் பூணையி லாடக வாடை யொடே
திணிகொ டேர்நடு வைகின னேசெகமாற்
பிணிகொள் வாரறி யா**வொலி யன்பெருமான்.**

18. வல்லசுரர் கோன்வலிய முத்தலை கடாவியுண்
மகிழ்ந்தன னதைக்கு மரவேன்
சொல்லுணரும் வச்சிரமி முத்திறைகை வைத்தது
துலங்கறுகி லேறிவருசூர்
வெல்லும்வகை யாதெனநி னைந்திடுமு னம்மிருக
மீளியு முருக்கி னபிரான்
நல்லவனு பூதிபுகழ் பாடினவ னாடமல
னேயவனை நம்ப லறிவே.

19. பிளவு தந்தபடை கங்கை மூழ்கியொளிர்
பெட்பி னோடிறைகை நின்றதப்
பிளவி ரண்டுமிறை கொடியும் வாகனமு
மாய பின்னிறைதன் வீரருட்
களம்வி ழுந்தவரை யுளநி னைந்துவரல்
கண்டு செந்திலைய டைந்தனன்
அளவி லந்தவிறை யருள்பு கழ்ந்தபுத
னாறு பற்றனலன் மைந்தரே.

XI உத்தர கிரியைக் கிடங்கொடுத்த திருவிளையாடல்

அவ்விதஞ் சயந்த னாதிய சுரரை
யடற்புயன் கொணர்தலு மன்னோர்
செவ்விதங் குறுங்கை யலர்சிரங் குவித்துச்
சேயவற் றொழுதன ரன்னார்
துவ்விதம் புலர்ந்து கிடந்தமை யடங்கத்
தூயபுன் னகைபுரிந் தனன்வேள்
நவ்விதங் குரங்கொள் புகழ்ப்புத னமல
நடைவிழை யெனக்கினி யவர்கள்.

XII திருச்சீரலைவாய்த் திருவிளையாடல்

கதிருத யஞ்செயல் கண்டுசி கண்டியி லேறிவான்
அதிரவ ருஞ்சுரர் சண்முனி வோரொட றைந்தவிப்
பதியைய கன்றுப ராசல மெய்தவுள் னோனவன்
மதியன றும்புகழ் நாவனை யாடிரு மள்ளனே.

XIII திருப்பரங்கிரி திருவிளையாடல்

1. உலக தாரக ஞானசத் தியெனு
மொருத்தி யாலிங னெழில்செயப் பட்ட
அலகில் சேயவன் றனதடி சார்ந்தார்க்
கழிவில் வீடுநல் விருத்தியு மீயுந்
தலைவ னாகலின் வகுப்பறை புதற்குஞ்
சாமியாகலின் அறுமுனி வோர்க்கம்
மலையின் ஞானமுத் திரைவழி யழியா
மகிழ்வு செய்தன னவருமுய்ந் தனரே.

2. வெல்ல ரும்பவம் வேறல்பி றங்கச்
சொல்ல ருஞ்சொரு லக்குகை காட்டல்
நல்ல ரும்பதி ஞானம ளித்தான்
பல்ல ரும்புக ழன்படர் செல்வீர்.

3. அக்க ருணைவழி யுற்ற நலனுல கத்த ரறியவெனாத்
திக்க திரநனி தொக்கு தொகுதொகு தெய்த்தெ யெனுநடமே
நக்க ணவர்களி ழைத்தி னிதுபணி நற்ச **ரவணனையே**
தக்க வொலிமுனி நச்சி னனறிதிர் சற்க தியை விழைவீர்.

XIV தேவலோகத் திருவிளையாடல்

1. இவர்ந்த சேயவன் மகபதி யாதியி லேகர்
உவந்து சூழ்நவ வீரர்பல் பாரிட ருறுவர்
நிவந்த தோள்விற லாரொடெய் தினனுயர் நிலையைத்
தவந்த வாநிலை யருணைய னெறிவிழை தகையீர்.

2. என்று கூறிய பின்னுநி னன்ப
ரேழை மானுட ராயினு மன்னோர்
வன்றி ருப்பத நன்குது திப்பேன்
மாறு பட்டவர் யாண்டு முய்யாரே
என்று நெஞ்சுபொ ருந்தவு ரைத்தா
னெம்பி ரானருள் கொண்டனு பூதி
அன்று சொற்றவ னன்பெனும் வாரி
யாடு மன்பின ரேபிற கேளீர்.

3. கனசெந்தி வந்துற்ற கான்மஞ்ஞை மீதை
மனநொந்த ரற்றேன்ம யங்கேல்பு ரப்பேம்
என்றுஞ்ச லிற்சொற்றை லார்க்கும்ப கர்த்தான்
எனநன்கி சைத்தா**னொ லிச்சூரி யின்பீர்.**

4. ஊனாறுங் கடப்பகைஞர் துயரினின்று
மெமைக்காத்திவ் வோகை யீந்த
தேனாறுந் திருமேனிக் குகனடியர்ப்
பழித்தஞர்செய் செடியி னாரை
யானாறுஞ் சினமடங்க வொறுப்பேனென்
றான்மறலி யேனை யோரும்
வானாறுந் துணிபிதுவென் றொப்பினா
ரொலிமுனிவன் வழியன் பீரே.

5. சொக்க மேனிலை தந்த வன்றிகழ் சோம லோகச டானனன்
செக்கர் வேள்குழ கன்று வாதச வாயு தன்சிவ தேசிகன்
மிக்க யோகவி யாபி கந்தன கண்ட னென்றுவி ளம்பினான்
திக்கு மாமுக னோர்மி னின்புகழ் செப்பி னோனிறை யற்புளீர்.

6. என்னுந் திருநா மங்களையு
மெண்கண் மலரோ னோதலும்வான்
மின்னுஞ் சுரர்கள் களிகூர்ந்தார்
விதியோ டிமையா நாட்டநலன்
மன்னும் புலவ ரெலாருமறு
வதனன் கழலைத் தொழுதார்சொற்
றுன்னும் புகழாந் தமிழ்வேதஞ்
சொன்னோ னெறியைத் தொடர் பெரியீர்.

7. அழகுந் தெருளுந் திகழ்நந் தனயா
னயர்தொழி லுனதென நிலவிய ததனால்
விழுமம் பெருகுஞ் சரணம் பினர்பால்
விரைவினி லெனவரன் முருகனு மகிழ்வோ
டெழில்விஞ் சொருகுஞ் சரிதிண் டிறல்வா
கெறுழர்கண் முதலிய குழுவொடு வளம்வால்
கெழுகந் தநகந் தனையண் டினனார்
கிளரறு ணகிரியி னிறையடி யவரே.

XV தினைப்புனத் திருவிளையாடல்

1. இத்தி றத்தவு னைப்பெ ருஞ்சுர மேயு மிப்புனம் வைத்தவர்
எத்தி றக்கடு நெஞ்ச ரம்மவெ னோடு வந்திடி னியானுனை
உத்த மப்பதி யுய்த்து நன்குபு ரப்ப லென்றுரை செய்தனன்
முத்த லத்தரு மோம்பு மாபுகழ் முனிவ னாதனு மவனரோ.

2. மாய மெனினிது கூறு படவயர்
வன்கை புரிதுமெனா வளைகின்ற குறவரைமேல்
ஆய தலைவன டேன்மின் மகடுணை
யன்பி னுளதிதுபே ரழகென்ற பினெவருமே
நேய மொடுறையு ளேகி னர்திமிசி
னின்ற விறைவன்முனே நனிகொண்ட வடிவினையே
மேயி னனாலியன் வாழ்வு மவனவன்
விஞ்சை சரணருளே சுகமென்ற றிமினுலகீர்.

3. நம்பி யங்ஙன நன்குப ணிந்தெழுந்
தெம்பி ரானிவண் வைருக வென்றுவிட்
டம்பி றங்குபல் வாச்சிய மார்ப்பவூர்ப்
பம்பல் போயினன் **சந்தற்ப ரவாவுவீர்.**

XVI சுனைவளாகத் திருவிளையாடல்

1. நீசொன வாறிங னிகழ்ந்த யாவுமென்
ஏசறு மாடல்க ளேயென் மூலநீ
பாசறை மேயதும் பலவென் றொல்கினான்
தேசனு பூதியன் சீர்கொள் செல்வரே.

2. எற்றி னந்திதி வாரமி ராசி
யேறு கோள்கர ணங்களு மற்றும்
வெற்றி விஞ்சநி லாதுந யஞ்செய்
மெய்ய ருங்குக வானெனின் வாழ்வார்
ஒற்றை யன்றிலை யொத்திங னான்றோ
னுள்ளு டைந்துபு லம்பலெ னென்றாள்
மற்றி னும்புதல் வேனனி கேண்மின்
மாசில் செவ்வரை யானெறி யன்பீர்.

XVII செழுஞ்சோலைத் திருவிளையாடல்

1. **டத்தி வீடறை யுந்தமிழ் வேதம்**
பாடு செவ்வரை நாமனை யானோர்
சித்த னாமயில் வேலிறை பாதந்
தேவி தீண்டிவ ணங்கியென் வாயான்
உத்தி யானுமை யேசியி கழ்ந்தே
னொண்மை யில்லிபொ றுத்தருள் கின்னும்
புத்தி போதர நீர்புகல் யாவும்
பூவை கேட்கவு ளேனினி தென்றான்.

2. அம்முனி வினையே தாண்ட லமரர்க்கு மருந்த வஞ்சால்
எம்முனி வருக்கு மொல்லா தாகலி னெனையே நம்புஞ்
செம்முனி வோரைப் பேணுஞ் சீரியர்ப் புரப்பே னென்றான்
வெம்முனி வில்லீர் **செம்மால் வெற்பனு மவற்கே தொண்டன்.**

3. தணிகை நின்றுள யாழ்முனி போந்திறை தாழ்ந்து
திணிகை வேலவ கருணைசெய் கென்றலுந் தேவி
அணிகொள் கீர்கொடு வேடரை யுயிர்த்தெழ வருளி
மணிகொள் பூணிறை நின்றன **னருணையன் வகிரீர்.**

XVIII சிறூர்த் திருவிளையாடல்

எத்திற மதத்துந் தனக்கொரு தானே
யிணையென வயங்குசெவ் வேளின்
சித்திர வடிவை நோக்குசின் மாதர்
சிறுகுடி யாமிதிற் போந்தே
இத்திற மணந்தா னிவர்செய வள்ளி
யெத்தவம் புரிந்திருந் தனளோ
அத்திற மறியோ மென்றன **ரொலிப்பா**
வறைந்தவ னதர்விரும் புநரே.

XIX திருக்கந்தகிரித் திருவிளையாடல்

1. கந்த வைவரை யாதி மேனிலை காத்தி ருப்பவ ரந்நமன்
சிந்தை செய்தமை போன மக்கதி சிரம மெய்துமெ னாவுளே
நொந்து ளொல்கின ருஞ்ச லாடனி றைந்த பின்பவ ரவர்நுழை
நந்த மெய்தினர் **திருவ குப்பறை நாவ லன்கதி கருதுவீர்.**

2. ஆக லிற்சுர ராதிபன் மூன்றுடனைந்
தாக வத்தர்க ளோதுக ணம்பணிதே
நீக ளித்தரு ணீட்டெனப் பாடினளே
மோக ழித்தனு பூதிசொன் னோன்முறையீர்.

3. சேயவ னலதொரு கடவுளின் றெமக்கெனுந்
தெளிவினன் னயப்பெரும் பூசை
மேயவ ரிவர்மனை முதற்பல பொருணசை
விடுத்துநம் மருட்டுணை நாளுந்
தூயக நிறுவின ரினையர்க ளெனக்குகன்
சுடர்த்தொடி பெருங்களி கூர்ந்தாள்
மாயவு லகைவிடல் புரிந்தரும் புகழ்சொன
மதியின னெறிவிழை நெஞ்சீர்.

4. மாசின் மாதவர் தவப்பயன் போற்பல வளமுந்
தாசர் நாயக னொடுமிளி ரெனக்கரு டாய்கண்
டுசன் மாமணி மாளிகை யெய்தின ளுவகைத்
தேசு லாமணங் **குகடொழ வொலிப்புதன் றெருளீர்.**

XX திருப்பழநித் திருவிளையாடல்

1. ஏகு மேல்வைக யந்திக ழோர்பொழி லெய்தலும்
பாகு நேர்மொழி தீம்பழ முண்கெனப் பன்னினாள்
சேகு சேர்புய னுந்தினல் செய்தன னன்னள்பின்
சோக மேகநு கர்த்தனள் **சொற்புத னற்புளீர்.**

2. இருக்குமவ னிக்கிரிக ளைத்தொட
லிசைத்தலெண லிற்றினையுமோர்
விருப்புட னிழைப்பவர் நினைத்ததை
முடிப்பரென மெச்சிமுனிதாள்
அருட்குண வுளத்திடை யழுத்தின
னெனக்கினி யலக்கணிலையென்
றொருக்கினன் மனத்தினை **வகுப்புகள்
படித்தவ னுவப்பை நினைவீர்.**

3. பாம்புரி யனைய வாடை பருமணிக் குழைபொற் றாலி
காம்புறழ் தோண்முந் நீர்நேர் கண்ணழ குடையி டும்பி
தாம்பணை கிரியெ ழுங்கால் ஹரஹர வெனவே சாற்றித்
தோம்புண ராத கையாற் றொழுதன **ளொலிய னாரீர்.**

4. எனமொழியு முறைமையொடு நடமே
யினிதுபுரி யவனெடிய தொலைசெலலு மெதிர்காண்
வனநடுவில் வழிதெரித லிலனாய்
மருள்பொழுது குமரகுரு பரனவன தெதிரே
இனிதுசெலு முறைநினைவி லெணினா
**னிருவினையு மலமுமற முருகனடி பரவோர்
முனியருண கிரிநெறியை விழைவீர்**
முழுமுதல்வ னருளினினி நவில்வனவு நவில்வேன்.

5. செம்பொன் யாவுமி ழந்தவர் சிந்தைபோல்
வெம்பி யேசுற்றி நோக்குழி மெய்விளர்
அம்பி றங்குநற் கண்டன ணாரொலி
நம்பி யின்பின ரேசிவ நாகமேல்.

6. கணவனது முகத்தோடு தன்முகம்வைத்
தேகலுழ்ந்தாள் கரங்கண் மோந்தாள்
பிணமெனவும் விழுந்தனவோ வெனக்கழல்கண்
முத்தமிட்டாள் பிரிந்தா யோவென்
றுணர்வுவதி யுரமேவீழ்ந் தென்னரசே
யென்றிருவே யுனைநான் றோற்கப்
பணியபவ மறியேனே யெனவுமழு
தாளொலியின் பரிவுள் ளீரே.

7. என்கண் வார்நீர் பார்த்திரங் காநீ ரேய்ந்தீரே
புன்கண் போமா றாவிது றப்பே னென்றேமீன்
மின்கண் மெய்ந்நோன் பாள்புலம் புற்றாள் வீழாறாந்
தன்கண் ணீர்தோய் மேனியள் சந்தன் சால்பீரே.

8. அண்டர் நாயகன் மந்தி ரம்பிற வக்கரங்களை யொக்குநேர்
தண்ட பாணியி ருக்கு மிம்மலை தரைவி லங்கலை யொத்தன
தண்ட பாணியை யீச னீபழ மென்ற தாற்பழ நிப்பெயர்
கொண்ட தேவள வத்த லம்புகழ் கூறி னோனெறி தேருளீர்.

XXI கேத்திர காண்டம்

1. சென்னை

(i) இன்னற்சூர் துன்னப்போர் தருபகை ஞருமிற வென்றுட்கா
வன்னற்சூ ரென்னப்போர் புரிகரி மகள்குற மங்கைக்கே
தன்னற்பான் முன்னிற்பா னெனுமுரை யினிதுயர் சந்தற்கார்
கன்னற்கே சென்னைக்கோ யிலிலுறை யெழின்மிளிர்
கந்தற்கே.

(ii) நேமி சொர்க்கக்கண் யாவு மச்சத்தை
நேர முற்பட்ட. மேழ கக்கொற்ற மன்னு றாமே
காமர் மிக்கத்தி லேறு துப்புற்ற
காளை யற்பிட்டர் நாட ருட்சித்த னென்னை யாள்வோன்
தூமி துத்தற்பி னால்வ குப்புச்சொல்
தூய னட்புக்கு ளாய சித்தத்த னெண்ணொ ணாத
சேமன் மெய்ப்பற்றர் சூர்த புத்திட்ட
தேவன் முத்துக்கு மார னிச்சித்த சென்னை யீதே.

2. சண்முக ஞானபுரம்

(i) வீரப் பொன்னொளி கால்கழ லுற்றகான்
மீளிப் பன்முனை யார்படை வெற்றிவேல்
சாரத் தண்ணுகை தான்மிளி ரக்கலா
தாரச் சண்முக னாகியுன் மத்தர்பேய்
கோரக் கண்ணின ரோடியொ ளிக்கமா
கோலச் செம்மலை நாமனை மெச்சியே
சூரற் குண்ணிழ லாயுமி ருக்கும்வேள்
சோதிச் சண்முக ஞானபு ரத்தனே.

(ii) தேவிப வானிகை யாமலர் நண்ணுறு தேனெனச்
செவ்வரி நாளறு மங்கையர் பீர்நுகர் சேயென
ஆவிக ளுள்ளுறை யந்தரி யாமிபி ரானென
ஆயிர மம்பக மாமயி லேறயி லானெனத்
தாவில்பு கழ்க்கவி தேவென வேயவிர் கந்தவேள்
சண்முக ஞானபு ரத்தமர்ந் தானத னாலிவண்
மேவிந யப்பொடி ருப்பவர் யோகிக ளாவரே
மெய்யறி வோடிது பாடுந லத்திரும் வாழ்வரே.

3. சண்பகாடவி (திருவேட்டீசுரம்)

அண்ட நாயக பிண்ட நாயகவா
னமரர் நாயக சமரர் நாயகமா
தண்ட நாயக சண்ட சூரனதூழ்
தடியு நாயக குருகு வானியவாழ்
தொண்டர் நாயக வென்று தேவர்மகா
துதிசெய் வேலிறை யருணை யானையுமே
கொண்ட வாலய சண்ப காடவியோர்
குறைவி லாதுறை திரும காநகரே.

4. திருவொற்றியூர்

ஈடில் பொற்றளி யேயு மொற்றியூர்
கூடி நிற்குமொர் கோதில் **கொற்றவேற்**
பீட னைத்தொழல் பேண னப்புகழ்
பாடி னர்க்குறு பாடி ருத்துமே.

5. திருமயிலை

வணிகர்வியா பகநிர னிகழு மயிலையில்வாழ்
துணிவளர்வே லனைமிகு புகழ்கள் சொனபெரியோன்
பணிபெருமாள் பருமயி லிவரு மொருபெருமா
அணியிளையோ னெனநினை பரிவ ரஞரிலரே.

6. திருவான்மியூர்

கூன னாகு மீன மூரல் கூடு பானல் வான்மியூர்
ஞான வேல னார **லோதி நாம னாடு தேவனாம்**
மான வான்ம யூர மேறு மாக சோதி பாதமே
பான றாவி னோதி நூலர் பாடும் வீடு மாகுமே.

7. திருக்கழுக்குன்றம்

ஒளிக்குங் கருட்கும் பிழைப்பின்
றழிப்பின் றுதிக்குங் குகதேசில்
புளிக்குங் கசக்குஞ் சகத்தின்
பெனக்கொன் பொருப்பன் றவைவாரி
குளிக்குஞ் சுகர்க்குந் தெருட்பண்
புணர்த்துங் குணச்சந் தனையாள்சேய்
களிக்குன் றொளிக்குன் றுருக்கொண்
டிருக்குங் கழுக்குன் றிதுவேயோ.

8. திருப்போரூர் (யுத்தபுரி)

சிற்சு கமருவு மற்பி னுயரொரு சிற்க கனனலனார்
சொற்சு வையொடுது தித்த பரனென துட்டு யரையடுகோன்
எற்சு ரரமல மிக்க மலரிலை யிட்டு விழையடியோன்
பொற்சு டரசல னைக்கொள் குகனுறை யுத்த புரியிதுவே.

9. திருவலிதாயம் (பாடி)

அண்ட ருந்தொளி! மண்ட லம்பிர மன்றொன் மண்டல
மாய்துழாய்
கொண்ட கண்டனன் மண்ட லஞ்சிவை கொண்கன் மண்டலம்
யாவுமேர்
மண்ட கண்டவு டம்ப வென்றுவ ணங்கு கந்தரு லாவுமூர்
கண்ட ரும்புக ழன்பு கழ்ந்தக வின்சி றந்துள பாடியே.

10. பாக்கம்

தண்டை கிங்கிணி யார்ப்பவேர் தங்கு செங்கழ றூக்கியா
டெண்ட யங்கழல் வேற்பிரா னின்பு கொண்டினி தேற்றவூர்
அண்ட ரந்தணர் பாட்டெலா மங்கொ டண்டமி ழாய்ச்செல்வான்
பண்ட ரும்புகழ் சாற்றினோ னும்பு கழ்ந்துள பாக்கமே.

XXII கடாவிடைக் காண்டம்

1. திருக்கடாவிடை

புன்ம திப்பது தொக்குறு மிக்குறு புத்தகப்
பன்ம தக்கட லிற்படிந் தஞ்சிவ ரார்கொலோ
நன்ம திப்பரு ணைப்புத னம்புமெ னாயகன்
வன்ம லர்க்கழன் முன்பணி யாமதி மந்தரே.

2. எங்களிறை

தமிழின்பு ணர்ந்த நயம்விஞ்ச மைந்தர்
தவம்விஞ்ச வின்ப நெறியாய்
இமிழ்மஞ்ச விஞ்ச வெழின்மிஞ்சு சந்த
முனிவன்ப யந்த வொலியல்
கமழ்மொய்ம்பன் விந்து வொலிதங்கு தண்டை
கழல்கொண்ட கஞ்ச வடியன்
அமிழ்தம்பி றங்கு மொழியன்ப றம்ப
னகளங்க னெங்க ளிறையே.

3. நவகணர் தோற்றம்

சூரர் காணுங்கள் சொற்படி நான்செயின்
தீர வேலிறை யின்பெனைச் சேருமோ
வீர ரேயது கூடுமென் னும்விதி
சார வோதப்பு கழ்ப்புதன் சான்றரோ.

4. திருக்கடாவிடை

நீல நீண்மல நீக்கிய சந்தன்
போல வீவில ராபவர் போற்றும்
வாலன் யாவன்ம யூரமு கைக்கும்
வேல னேயென வேதம்வி ளம்பும்.

5. திருக்கடாவிடை

கேடறு சந்தனை யாளிறை பாடொரு கிளியேநீள்
கோடணை குன்றமு டுக்கரில் வாழறு கொருமானை
நாடலி னின்றதெ னிவ்வெளி மானிறை யுநடாவென்
ஆடலு மொன்றெனல் காட்டியுய் வித்திடவதி னேர்ந்தான்.

6. திருக்கடாவிடை - அசோககால வாசம்

(i) பரிதி யாழ்கடல் வீழ்ந்தமை யான்மரைப் பார்வை
விரிதல் கூம்பவ யர்ந்திடு மோவென வினவும்
புரிவு ளாண்முன நமையனை யாரது பொருந்தார்
தெரிக வென்றனள் சகியொலி முனியருட் டிருவீர்.

(ii) அதுசெ விக்கொள் யாண ரையை யார்வம் விஞ்சி யெம்பிரான்
மதுர மெய்ச்சொல் கேட்கு முன்னென் வண்ணி ரம்பவேவிடை
கதுமெ னச்சொ னாய னக்க லாப மொன்று நல்கினாள்
அதுத ரித்தி றைஞ்சி னாளி ணங்கி சந்த னன்புளீர்.

(iii) இன்றமிழ் முனிவ னேத்து மிறைகுக வேள்பா தப்போ
தென்றும்வி டாவா றென்முன் விடையினி தளித்த தோழீ
என்றரு வேனா னிற்கென் றிருமணிப் பணியொன்' றன்னாள்
பொன்றிகழ் கழுத்தி லிட்டாள் புகழன்வா ரியிர்கோ நங்கை.

(iv) அழுகை யோபெரி தாகிய தவர்வர லடுத்துத்
தொழுகை யோரளி யானெய்தி விழிப்புனல் சொரிந்தான்
பொழுது போமுன்வந் தனர்பல ரென்றுபின் புகல்வாள்
இழுமு லாமனு பூதிய னெறிவிழை யிகுளை.

(v) மிளிர்வ யித்திய சாலையின் மேற்புறன்
ஒளிர்ந பத்திலிவ் வாறுகண் டோகையாற்
குளிரு ளத்தின னாய்க்கைகு வித்தனன்
தெளிதி ருப்புக ழோனடைச் சீருளோன்.

(vi) புதிய பாக்கமி ருக்கு நல்லகு ழந்தை வேல்புரை தீர்ந்தவில்
வதித லாற்றிய பின்பு சென்னைவ திந்து தாணடை கொண்டனன்
மதிகொ ணீப்பனு வன்ற சென்னையில் வைகு மன்பரு மேனைய
பதியி னாத்தரு முவகை யுற்றனர் பாட்ட னோர்பதி வேட்புளாய்.

(vii) எள்ளிரவ ரறியாச்சொல் லியம்பின் போனுள்
கொள்ளிரவி விழையொருவன் குணஞ்சொன் னேனென்
றுள்ளிரவு கடிசகிதா னுரைத்தாள் கேட்ட
நள்ளிரவு வதிகுழலு நயந்துட் கொண்டாள்.

(viii) மந்திரிகண் மாதொழிலில் விஞ்சிகுளை நீகளிம
லிந்துநனி வாழியவ றாவளி
உந்துமன வேனையரு முய்ந்திடுக வேயெனவ
ளொண்சரணை யூனமறு பூசனை
சிந்தையுற வேபணிம கிழ்ந்தருணை மாமுனிசி
றந்ததமிழ் நாடுகும ரேசுரன்
அந்தமில்வி பூதியரு ளென்பதுப ராவினர
ரும்பெரிய தோழியுமெ லாருமே.

XXIII வேட்கைக் காண்டம்

1. வேற்குழவி வேட்கை

மாண்பார் சந்தமுனி யின்ப வாழ்வே நின்னெழிலைக்
காண்பார் வேறழகு மிங்குக் காண்பார் கொல்லோநான்
ஊண்பா டஞ்சியுனை நன்கு காண்பா னின்றுவந்தேன்
வீண்போ காதபடி யிங்ஙன் வாராய் வேற்குழவீ.

2. வேற்கடவுள் வேட்கை

நாளு மன்புடைத் தோழி யேபுகழ்
பாடு நாவல னாரது
கேள றாவித யார விந்தநன்
றேற லைக்கிர கித்திடும்
வாள றாதவண் டாகி யுண்டதி
லேம யங்கியுள் ளார்கொலோ
கோளில் வேல்பிடித் தாரை நானனி
கூவி யும்வரக் கண்டிலேன்.

3. வேற்குமரர் வேட்கை

உண்டலை யாடையு டுத்தலை யாடலை யுன்னாதென்
மண்டிய சிந்தையன் னார்வச மாயது வந்தார்யார்
திண்டிறன் மேனெறி யார்புகழ் சொற்றவர் தேவாயின்
கண்டவெ லாமுள மீதுவ ரைந்தெழில் காண்பேனே.

4. செவ்வேள் வேட்கை

இவ்வித மேபுரி பத்துமி ரண்டுமி யைந்தபி ராயமுளாள்
செவ்வன ணிந்தக லன்களு நீக்கின டேவருண் மாதவருள்
எவ்வரு மெச்சுதி ருப்புக ழன்சிவ மென்றவிர் கந்தபிரான்
அவ்வுழி வந்தன னன்னவள் கண்டுள மாரம கிழ்ந்தனளே.

5. குமரவேள் வேட்கை

வம்ப றம்பின் முன்னின்றே வாகை சூடி வந்தாரால்
செம்ப றம்பின் பேராரரைத் தேம்பா வின்பின் வைத்தாரென்
பம்ப ரஞ்செற் றாரல்லர் பார சையக் கோடேயென்
அம்ப றம்பு கட்கேநீ யஞ்சு கால மீதன்றே.

6. கந்தவேள் வேட்கை

ஏக வம்பரனே தகரேறு செஞ்சுரனே
மோக ரிந்தனுபூ தியையோது மொய்ம்பனையாள்
நாக விந்திரனே குருஞான மந்திரனே
ஆக நந்தினுமே யெனதாசை நந்திடுமோ.

7. வேன்மழ களிற்று வேட்கை

குசமு டைந்துவி ரிந்த மலர்மு கப்பிடி குயிலிவ்
வசன நன்குதெ ரிந்த சகிபு கழ்ப்புதன் மனமென்
அசல பங்கய நம்பு மமல வக்களி றணவு
குசல மின்றுறு மென்ப தனையு ரைத்தனள் குளிர.

8. விசாலமாலைவேள் வேட்கை

(i) இன்று மாலையி னினைப்பிரி யாதிருந் திடச்செங்
குன்றி னானிறை மணிமலை மிசைக்குரு மணிபோன்
மன்றல் வீசிட வருமெனுஞ் சகிமுனெ னோடே
என்று மேயவ ரிரார்கொலென் றுயங்கின ளிறைவி.

(ii) உரைத்த நீர்தலு மணிப்பிணி முகத்திலவ் வொருவன்
அரத்த மாலையொ டவண்முனந் தோன்றின னவளுஞ்
சிரித்த வாண்முகி யாயடி தொழுதஞர் தீர்ந்தாள்
உரத்தி னீடொலி முனிநெறி விருப்பினை யுடையீர்.

(iii) பூவி னாலணை நார்மண மணைந்தமை புரைய
யாவும் வல்லநுங் கடைக்கணி னோக்கெனும் யாணர்
மேவி யுய்குந ளாயின னேபுகழ் **விரித்த**
நாவி னாரிறை யேயெனச் சொலிநனி தொழுதாள்.

XXIV *பலதிறப் பொருட் காண்டம்*

1. கடவுட் சங்க வுணர்ச்சி

பலமா கிரியான் பரநா கிரியான்
அலகா மயிலா னழகார் மயிலான்
இலகார் வுடையா னினிதோர் வுடையான்
நலமார் புகழ்மா னனிசூழ் புகழ்மான்.

2. திருவுளப்பாங்கை வினாதல்

அறம்பலவுநின் செயல்பெறும் பயனுநின்செய
லக்கி காணுல கிற்செறி வாயுள
திறம்பலவு நின்பொருளெ னுந்துணிபு மொய்ம்பிது
செப்புநானு ளப்பறு மேன்மையை
நிறங்கொள நடந்தணைத லெங்குரை **பெருந்தகை**
நித்த னேயரு ணைப்பெய ரான்முதால்
மறம்பல புரிந்திடினு மின்படைய வன்புசெய்
மட்டி லாதவ ருட்கும ரேசனே.

3. தியான விசேடம்

சிவசிவ வென்றுஞ் செயசெய வென்றும் பேழ்க்
குவலய மெங்குங் குககுக வென்றுஞ்சூர்ப்
புவனியை வென்றின் புகழ்சொன வன்கண்காண்
கவலையில் கந்தன் கழலுனின் வஞ்சம்போம்.

4. நாளறுபது

எத்து ணைத்திற லாரை யுங்கவ ரேம னாள்வரி னீர்விர்செய்
உத்தி யாதுள துங்க ணாள்களு ளொன்று மின்றத னாலிந்நாள்
முத்தி மேவரு ணாச லப்பெய ரானை யாண்முரு கோனெனும்
அத்த னேமப தாம்பு யத்தைய கத்தி ருத்துதிர் மைந்தரே.

5. அவிரரும் பொன்

அடல்கொள் வென்றிவே லமர சந்தநூற்
கடல டங்குமா கடலுன் மைந்தர்சூர்
தடியு நின்பொனார் சரண மன்றிநான்
அடைவ தென்கொலோ வறைக டம்பனே யவிர ரும்பொனே.

6. பெரு வேண்டுகோள்

முழுநாரொடு புகழ்பாடிய முனிவற்களு ரேசெய்
தொழுநோயற வேசெய்தொரு சுகநல்கிய துரையே
கழுகோதியி லமர்வேலவ கருணாகர முருகா
வழுவாவழி முதல்வாவெனை மறவேலெனை மறவேல்.

7. பெரு விண்ணப்பம்

உன்னை யேயனு பவித்தனு பூதிநன் குரைத்தோன்
பொன்னை யாபர மாவிந்தப் புடவியி னொழிவே
மன்னர் நேடுசொர்க் கமுமுயர் வீடெனும் வாழ்வும்
என்ன வஞ்சகில் லேனுனைத் தொழுபதி யீயே.

8. ஆதார வழிபாடு

அவலங் கிளருஞ் சகம்வென் றிடவென் றலையுந் துயரீரின்
சிவமங் கியபுன் புவனம் பெரிதுந் திரியும் பலதேவ
கவனங் களொழிந் தொருசந் தநயன் கருதுங் குகனீறில்
புவனன் றனைநன் கெனுமின் கணலம் பொலியும் பொலிவோடே.

9. வருகை விழைந்திரங்கல்

பரத னார்தலம் யாத்திரை செய்பரிவார்
    பலரு மேகுவி சேதுவில் வாழ்மறையோன்
எரியி னாமநெ டுங்கட னீர்நிலைமே
    லெளிய வென்னுள மோர்ந்துகொ டுத்தபொரு
ளுரிமை யேயனு பூதிபு கன்றவனுள்
    கொருவ னேயென தாருயி ருள்ளுயிரே
சரத வேலிறை வாநினை யேகருதித்
    தடவு கின்றதெ னெஞ்சைவ லக்கரமே.

10. பணித லுணர்தல்

கலிவற் பறமெய்ப் பொருண்மிக் குறவக் கரைசார்முன்
வலியுற் றகசக் கொடிகட் டியபத் திரிவாய்முன்
பொலிவுற் றபலப் பலவிச் சையுடைப் புலமேதி
பலியிட் டபுகழ்ப் புலவற் கிறையைப் பணிவோமே.

11. ஆதரிப்பாரெவர்

குவலயம் வென்றுபுகழ் சொற்ற கொன்னுடை யானிதயம்
இவருமி ளம்பெருமா னென்னு மெண்குண மேயவனே
புவனம னைத்துமிருந் துள்ள புண்ணிய சண்முகவிவ்
வவதிவ டுத்தவுட னென்னை யாதரிப் பாரெவரே.

12. பகை கடிதல்

கருணைபெய் கனமுகிலே கடமுனி பணிமுதலே
அருணைய னரனெனவே ய்கநினை யெனதெதிரே
மருமல ரணிபலவே மருவிடு களமயிலே
குருபல வவிர்மயிலே கொணர்தியு னிறைவனையே.

13. திருவடிவயா

அப்போ துயிர்நல் லகமே பிறநீத்
தெப்பா டறிவா யதனா லிறைதாட்
டுப்பா ரவொரே துணிபா திர்புகழ்
நப்பா முனிநன் குமிதென் றதுவே.

14. மனச்சான்று கொல்வார் மல்கார்

அயற்கே யரிக்கே சுரர்க்கே பகைப்பா
மடற்சீர் மிகுத்தாள்சூர்
வியப்பா யிறப்போர் தொடுத்தாய் நினைப்பார்
வினைக்கோ தறுத்தாள்வோய்
நயப்பே றெனக்கீ யெனப்பே ரொலிப்பா
நயப்போ டுரைத்தானைச்
செயப்பே றுறச்சூ ழருட்கோ வயிற்கோ
திருத்தா ளெனற்சீரே.

15. இடையறாது நிற்க விழைதல்

(i) அறுதி னத்திலே மனம டங்கிமே
லணுகு நாளிரு முனிவ ரோடிகல்
உறுக ணேதமில் வடிவ னாகிவந்
துரைத்த வுன்பறை பிடித்த வென்றனை
இறுதி வைகன்முப் பதுட னைந்திலே
யெழவ யர்ந்தவொர் களைக ணிங்கெனைத்
தறுக ணாளர்போற் கழிப்ப தென்புகழ்த்
தமிழ னீசனே யவிர்கு கேசனே.

(ii) அன்பர் வாழ்சிவக் குன்றி ருந்துமா
லணவு நன்னரே பெருகு சென்னையே
இன்பொ டார்தலுந் தாள்கு றங்கிலே
யிரணம் விஞ்சுமா பிளவை கண்டுநான்
துன்பு கூருநா ளுண்ம கிழ்ந்துளோர்
துயரு மாறினி தருளி னாயிங்ன்
அன்பி லார்கள்போ னிற்றல் யாணரோ
வருணை நாதனேர் மருவும் வேதனே.

16. திருவருட் செயன் ஞாபகம்

அருணை நீள்கிரிப் பெயரின னரசே
யமுத மடப்பிடி நாயக முருகே
கருணை நாடெனை யெந்தவெவ் வளவாய்க்
கணிக்கு மானுட ருளரவ ரவர்க்காம்
பொருளை யீதலு முன்கடன் பிறிதென்
புகலு வேனடி யவர்க்கெளி யாயிவ்
வெருவை யூனுயிர்க் காப்புநின் னதுவென்
றிங்ங னம்பியுள் ளேனரு ணிதியே.

17. நீதிவிழைந்திரங்கல்

அத்தி காதல னன்றியொர் தெய்வநம் மகத்திலை யவன்றாட்கே
பத்தி மேயவ ருள்ளமும் வதனமும் பன்முறை நனிவாட
முத்தி யேதரு ளேதென நாத்திக மொழிபவர் நடமாடச்
சத்தி சார்கர னருணையன் சிவனமைத் தணந்த தென் புகனெஞ்சே.

18. திருமாலைமாற்று

தேனட வீறுறு வீடனதே
தீனத நாதத நாதனதீ
தாநக வீசச வீகநதா
மேனக மீதிதி மீகனமே.

19. ஒட்பமுணர்த்தல்

பசியினு மிகுந்த வாதை யிலதெனும் பான்மை தேர்ந்தார்
பிசியறு மயில்வே டொண்டர்ப் பேணுவா ருணவே யூட்டி
நிசிதபு புகழாம் வேத நிகழ்த்திய முனிவ னேத்தும்
உசிதவ ளாகத் தாள்பங் கனதுள முவப்ப வாழ்வார்.

20. திருத்தகு துணிபு

இழிமொழி களையெணி முருகனை விடறடி
யுளியடி நிலையுற லெனவை
கழிதல றுதிருவு மருகும் வனமல
கமலச ரணினைவு பெருகி
அழிவில முதமுற லொலிமுனி மருவின
னறையிவ னுமளவி னடலை
ஒழிதலி னணவின னுவகையெ னவுணரு
முளமுமு வகையுற றுணிபு.

21. மணிமஞ்சரி

மாலா யுதத்து மடங்கா வசுரனை மாய்த்தசெம்மால்
காலா யுதத்தைக் கொடியாப் பிடித்தோய் கனசந்தற்கொள்
கோலா யுதக்குக னேயெனை நைக்குங் கொடும்படர்மேல்
வேலா யுதத்தைச் செலுத்தாமைக் குன்றன் விடையெதுவே.

22. ஆனந்தக்களிப்பு

சீர்மலி யானந்த வீட்டின்-பத்தைச்
சேர்ந்த வண்ணாமலைப் பேரெந்தை யீசன்
கூர்வடி வேலுடை யைய-னென்னுட்
குடிகொண்ட வொருவன்ற னடியென்றும் வாழி.

23. சமாதான சங்கீதம்

முத்தருங்குகப் பிரமத்தை வாழ்த்திய
முத்தனண் ணாமலையா-னிரு
பத்மவடிக் கன்பு பண்ணிடு தாசர்
பரகதி யெய்துவரே. (சஞ்சலமேன் மனமே)

உரைநடை நூல்கள்:-

1. சிவஞான தீபம்

அருணை யம்பதி பேர னுய்யவோர்
கருணை காட்டிய கந்த னோக்கினான்
இருணை வாயிறச் செய்யிந் நூலுமிஃ
தருணன் கோர்ந்தறை வாரும் வாழ்கவே.

2. சிவஞான தேசிகம்

அருமறை பெருகவாண்ட யகத்தியர்க் குபதேசித்த
குரவளைக் கீரற்கன்று குணவடி கொடுத்திட் டானை
அருணிறை யருணையானை யடிமைகொண் டானையெந்தன்
இருதய முறையா சானை யேத்தியே போற்றி செய்வாம்.

3. சைவ சமய சரபம்

(i) கமலத்தா ளிணையைத்தே டவுமரி யெழிலுறு கமலத்தான்
விமலத்தார் முடியைத்தே டவுநிமி ரரன்மகன் விறலைப்பா
டமலத்தா னருணைப்பேர் முனிவர னருணெறி யதனைப்பே
ணிமலத்தாள் வினைமிக்கா ரடிநனி நினைகுது நிலையுற்றே.

(ii) தெய்வ முதன்மை திகழ்செவ் வேளருண்
மெய்வ லிமையின் விரைவி லாயவிச்
சைவ சமய சரபம் வாழ்கமா
பொய்வ ழிதபு புகழர் வாழ்கவே.

-ஓம்-

திருச்சிற்றம்பலம்

திருத்தம்!

பக்கம் 3

ஆதிநடம் என்று தொடங்கும் பாடலில் ''அண்ணமலை'' என்ற வார்த்தையை **அண்ணாமலை** என்று மாற்றி படிக்கவும்.

பக்கம் 29

அஞ்ஞான்று என்று தொடங்கும் பத்தியில் ''அண்புவலைப்பட்ட'' என்ற வார்த்தையை **அன்புவயப்பட்ட** என்று மாற்றி படிக்கவும்.

பக்கம் 35

பசியினு என்று தொடங்கும் பாடலில் ''உசிதவ ளாகத்தான் பங்கன துணமுவப்ப வாழ்வார்'' என்ற வார்த்தையை **உசிதவ ளாகத்தாள் பங்கன துளமுவப்ப வாழ்வார்** என்று மாற்றி படிக்கவும்.

பக்கம் 36

2வது பத்தி 4வது வரி

''வடமொழி கற்க வேண்டாம்'' என்பதை **வடமொழி கற்க வேண்டும்** என்று மாற்றி படிக்கவும்.

பக்கம் 47

4வது பத்தி 2வது வரி

''இரவில் சானி'' என்பதை **இரவில் சாணி** என்று மாற்றி படிக்கவும்.

பக்கம் 51

நீடிய என்று தொடங்கும் பாடலில் ''நிலமிசையேன்'' என்பதை **நிலமிசைமேன்** என்று மாற்றி படிக்கவும்.

பக்கம் 69

7வது பத்தி 4வது வரி

''எனக்கு குகேசனை'' என்பதை **எனக் குகேசனை** என்று மாற்றி படிக்கவும்.

அருணகிரி என்னும் அநுபூதி

அடியார்செய் தவப் பயனால் நினைத்தமாத்திரைமுத்தி யளிக்கும் சீர்த்தி, குடியாக விளங்கருணை நகர்உதித்துக் குறிஞ்சிமகிழ் குமரவேளின், கடியார்பூங் கழற்புணையைக் கொண்டுபல ஜலராசி கடந்தன் னோன்பால், ஒடியாநல் லுபதேசம் ஜெபமாலை இவைபெற்றே **உயர்ந்தோன் யாவன்?**

பச்சைமயில் வாகனமும் வடிவேலும் குக்குடமும் பாடல் தோறும், வச்சதிருப் புகழ்ப்பாக்கள் பதினாறாயிரம்பாடி வாதுசெய்த, விச்சைநிறை வில்லிபுத்தூர்ப் புலவருளம் மிகநாண வேண்டு வோர்தம், இச்சையெலாம் நிறைகந்தர் அந்தாதி **எனுநூலை இசைத்தோன் யாவன்?**

எந்தைதிரு வடிவினொளி நினைந்து நினைந்துருகிஅவன் எழிலின் வண்ணம், கந்தரலங் காரமெனக் கலித்துறையாற் பாடியதைக் கண்டோர் எல்லாம், செந்தமிழின் அணியிதுவோ கந்தபிரான் அணியிதுவோ தெரிகிலோ மென்று, அந்தமிலா அதிசயத்தை எந்நாளும் உறச்செய்த **அன்பன் யாவன்?**

பின்னர் ஓர்நாள் சம்பந்தாண் டான்என்பானொருவன் பேச்சைக்கேட்ட, மன்னர்பிர புடதேவ மாராஜர் உளமாட மயிலின் மீதே தன்னிகரி லாக்கந்த வேள்திருக்கை வேல்விளங்கச் சபையில்வந்து, முன்னர்உறச் செய்தமகா தவப்புலமை நிறைசெல்வ **முன்னோன் யாவன்?**

கிளியுருவிற் பொன்னுலகம் புகுந்துமலர் கொடுவந்த கீர்த்தியுற்று, வெளியுருவிற் கலவாது மரதேவி திருக்கரத்தில் விளங்கநின்று, கிளியுருவிற் றிகழ்ந்தேநங் கந்தரநு பூதிசொல்லிக் கேடில்லாத, ஒளியுருவச் சீர்பாத வகுப்பாதி பாடியே **உயர்ந்தோன் யாவன்?**

அவனேயெங் குலதெய்வம் அவனேஎம்
உயிர்த் துணைவன் ஆகும்நாளும்
அவன்கழலே **வாழ்த்துவோம்** அவன்அருளே
நாடுவோம் அவன்பாதச்சீர்
நவநவமாய்ப் புகழ்ந்துமகிழ்ந்து **ஆடுவோம்**
பாடுவோம் நாடிநாடித்
தவமுதல்வா அருணகிரி அப்பாஎன்று
அழைத்திடுவோம் தவத்தைச் **சார்வோம்.** (வைநயிகர் அருளியவை)